விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 04 ஞாயிற்றுக்கிழமை (19.06.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 182

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## அளவெட்டி 'அராஜகம்' யாரென விசாரணை

# தாக்குதல் நடத்தியவர்களுக்கு

# கடும் தண்டனை வழங்கப்படும்

## யாழ்.கட்டளைத் தளபதி உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் தாக்குதல் நடத்தியவர்கள் எவராக இருந்தாலும் விசாரணைகள் மூலம் அறியப்பட்டு கடுமையான தண்டனை வழங்கப்படும் என யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



## 2ஆவது தடவையும் பான் கீ மூன் பாதுகாப்புச் சபை அங்கீகாரம்

(நியூயோர்க்)

ஐ.நா.செயலாளர் நாயகம் பதவிக்கு இரண்டாவது தடவையாகவும் பான் கீ மூன் தெரிவு செய்யப்படுவதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் ஏகமனதாக இத் தீர்மானத்தை மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கியூபா மற்றும் சில லத்தீன் அமெரிக்க நாடுகள் பான் கீ மூனை ஆதரிப்பதற்கு தயக்கம் காட்டியதால் அவர் இரண்டாவது தடவையாகவும் தெரிவாகுவதற்கான தனது அங்கீகாரத்தை (19ஆம் பக்கம் பார்க்க)

## பிரதி அமைச்சர் முரளிதரன் மீதும் போர்க்குற்ற விசாரணை தேவை

### அல்ஜெசீரா தொலைக்காட்சி வலியுறுத்து

(கொழும்பு)

பிரதியமைச்சர் முரளிதரன் மீது போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அல்ஜெசீரா தொலைக்காட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நீதிக்கான தமிழர் அமைப்பின் தலைவர் டொனால்ட் உடனான நேர்காணல் மற்றும் சனல் 4 காணொளிகள் தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கி ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியொன்றின்போதே அல்ஜெசீரா தொலைக்காட்சி பிரஸ்தாப கோரிக்கையை முன்வைத்துள்ளது.

பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் புலிகளுக்காக சிறுவர்களை கட்டாய ஆட்சேர்ப்பு மேற்கொண்டமைக்காக விசாரணை செய்ய (19ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4க்கு எதிராக வழக்கு தொடர இலங்கை அரசு நடவடிக்கை

(கொழும்பு)

சனல் 4 தொலைக்காட்சி சேவைக்கு எதிராக வழக் குத் தொடர்வதற்கான நடவடிக்கைகளை அர சாங்கம் முன்னெடுத்திருப்பதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சனல் 4 காணொளிகள் மூலமாக இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கப்பட்டிருப்பதாகக் கூறியே அந்நிறுவனத்திற்கெதிராக இலங்கை அரசாங்கம் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற வைபவமொன்றின் பின்பு நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டுள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் லண்டனில் இயங்கும் நிறுவனம் என்பதால் அதற்கெதிராக வழக்குத்தாக்கல் செய்வதற்கு சில இராஜதந்திர நடைமுறைகளைக்கடைப்பிடிக்க வேண்டியிருப்பதாகவும் அதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

## 500 முன்னாள் போராளிகள் ஜூன் 30இல் விடுதலை

(கொழும்பு)

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 500இற்கும் மேற்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இம்மாதம் 30ஆம் திகதி விடுவிக்கப்படவுள்ளனர்.

சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் எதிர்வரும் 30 ஆம் திகதி விடுவிக்கப்படுவதற்கு தகுதியானவர்களைச் தேர்ந்தெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

வவுனியாவில் இயங்கும் புனர்வாழ்வு முகாம்களை இவ்வருட இறுதிக்குள் முற்றாக மூடிவிட (19ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். சம்பவம் முதலில் அமெரிக்காவுக்கே தெரிவிக்கப்பட்டது


## புலிகளுக்கு உதவுபவர்களுக்கு எதிராக அணிதிரளுங்கள் - கோத்தபாய அறைகூவல்

(கொழும்பு)

புலம் பெயர்ந்த புலிகளுக்கு உதவுபவர்களுக்கு எதிராக அணி திரளுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தேசப்பற்றுள்ள சகல மக்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாடு பெற்றுக்கொண்டுள்ள வெற்றியைக் காட்டிக்கொடுத்து பயங்கரவாதம் தலை தூக்குவதற்கு உறுதுணை புரிவோருக்கு எதிராகவும் நாட்டை பாதுகாப்பதற்கும் மக்கள் மீண்டும் அணிதிரளவேண்டும் எனவும் கேட்டுக்கொண்ட அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் இறைமையையும் மக்களையும் பாதுகாப்பதற்காக 30 வருட காலங்களுக்கு மேல் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட படையினரை மறந்து செயற்பட்டால் மீட்கப்பட்ட நாடு எம்மிடமிருந்து கைநழுவிப் போய்விடும் எனவும் அவர் (19ஆம் பக்கம் பார்க்க)



## கொழும்பின் முயற்சிகளுக்கு ரஷ்யா ஆதரவு வழங்கும்

### அந்நாட்டு ஜனாதிபதி மகிந்தவிடம் உறுதி

(கொழும்பு)

கொழும்பின் சகல முயற்சிகளுக்கும் ரஷ்யா ஆதரவு வழங்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ரஷ்ய ஜனாதிபதி டி மிற்றி மெட்டேவ் உறுதியளித்துள்ளார்.

சர்வதேச பொருளாதார அமைப்பின் 15 - ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ரஷ்யாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

இந் நிலையில் இவ்விரு நாட்டு ஜனாதிபதிகளும் நேற்று முன்தினம் சென்.பீற்றர்ஸ் பேர்க்கில் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அமெரிக்க நீதிமன்றம் அழைப்பாணை


(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வாஷிங்டனிலுள்ள அமெரிக்க சமஷ்டி நீதிமன்றம் ஒன்று அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

இலங்கையில் மூன்று வெவ்வேறு சம்பவங்களில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கின் விசாரணைக்காகவே அவருக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. சித்திரவதைகளினால் பாதிக்கப்படுவோர்களை பாதுகாக்கும் அமெரிக்க சட்டத்தின் கீழ் பிரஸ்தாப வழங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த மாணவர் ரஜிஹரனின் தகப்பனார் மூதூரில் (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



இணுவில் கோண்டாவில் காரைக்கால் பதியுறை

திருவருள்மிகு விசாலாட்சியம்மை சமேத விஸ்வநாதஸ்வாமி திருக்கோயில்

புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நாள் : 19.06.2011 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 10.36 மணி முதல் 11.36 மணிவரை

பிள்ளையார் துதி | சிவன் துதி | முருகன் துதி



தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



யாழ். நகரில் முதன் முறையாக

CAUSEWAY Colour box

ralston from the Netherlands

The Colour box Tinting System

மூலம் வர்ணந்தீட்டப்பட்டு காட்சி தரும் கோயில்.

Manufacturd By:

15, Noel Mendis Mawatha, Moderawila Industrial Estate, Panadura, Sri Lanka.

Tel : (94) 038 - 2240040, Fax : (94) 038 - 2240046, E-mail : luxury@sltnet.lk





யாழ்.கச்சேரி நல்லூர் வீதி

அருள்மிகு பூமிதேவி ஸ்ரீதேவிசமேத

மஹாவிஷ்ணு தேவஸ்தானம்

புனராவர்த்தன பிரதிஷ்டா ஏககுண்டபக்ஷ

மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா

காலம்: கர வருஷம் ஆனி மாதம் 4-ம் நாள் (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 10.18 மணி முதல் 11.36 மணிவரை



## வாழ்த்துச் செய்தி

அருள்மிகு பூமிதேவி ஸ்ரீதேவி சமேத மஹாவிஷ்ணு தேவஸ்தான மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா வான இன்றைய நாளிலே, மஹாசக்தி வாய்ந்த விஷ்ணு பெருமானே! ஆலயத்தை சுற்றியுள்ள அடியவர்களின் வாழ்க்கை வளத் தினை மேலும் சிறப்பாக்கி அவர்கள் விரும்பியவற்றையெல்லாம் வழங்கி அருள்பாலிக்க வேண்டுகிறேன். ஆலயம் எழுச்சி பெற்று புதிய தோற்றத்துடன் காட்சியளிப்பது போற்றுதற்குரியது. இதற்கு பக்தியுடனும் பெரும் பொறுப்பு டனும் கடமையாற்றும் தலைவர், நிர்வாகத்தினர், ஒற்றுமையுடன் ஒத்துழைக் கும் அயலவர்கள், நல்வழிகாட்டி மக்களை பக்திவசப்படுத்தும் மதிப்பிற்குரிய இந்துகுருமார்களுக்கும் யாவரையும் வாழ்த்தி கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புடன் அமைய நல்வாழ்த்துகள் வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**திருமதி நவநீதம் ஜெகதீபன்**

தலைவர், நல்லூர் கந்தன் சமூக அபிவிருத்தி மன்றம்.

தலைவர், நல்லூர் மாதர் அபிவிருத்தி மன்றம்

(5240)

விளம்பர அனுசரணையாளர்கள்:-

| | | | | |
|---|---|---|---|---|
| ஆனந்தி அழகுமாடம் 180, நவீன சந்தை, யாழ்ப்பாணம். | நியூ ஸ்ரார் தையலகம் கச்சேரி நல்லூர் வீதி | மகா விஸ்ணு கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம் 510, நாவலர் வீதி | செல்லையா ஸ்ரோர்ஸ் 735, நாவலர் வீதி, நல்லூர். | அனோஜன் வார்ப்பு தொழிற்சாலை 26, நாயன்மார் வீதி, நல்லூர். |


# சனல் 4 -ன் ஆவணப்படம் கேரளாவில் பதிவானதாம்

## ஆருடம் கூறுகிறது திவயின

சனல் 4 தொலைக்காட்சி ஒளி பரப்பிய காணொளி இந்தியாவின் கேரளாவில் ஒளிப்பதிவு செய்யப் பட்டதென அரசாங்கத்துக்கு நம் பகமான தகவல்கள் கிடைத்துள்ள தென திவயின சிங்கள நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை,

இந்தியாவின் கேரள மாநிலத்தில் பிரஸ்தாப காணொளி போலியாக ஒளிப்பதிவு செய்யப்பட்டபின் சனல் 4 தொலைக்காட்சிக்கு வழங்கப்பட் டுள்ளமை குறித்து தெரியவந்துள்ளது.

இந்தக் காணொளி வெளியாவ தற்கு மூன்று வாரங்களுக்கு முன்பு முள்ளிவாய்க்கால் என்ற பெயரிலான திரைப்படமொன்று கேரளாவில் திரை யிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இத்திரைப்படம் தொடர்பில் இந்திய அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்ததும் அத்திரைப்படம் மாயமாகிவிட்டது.

செல்லிடத் தொலைபேசிகள் மூலமாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட தாக கூறப்பட்ட போதிலும் சனல் 4 காணொளிகள் வீடியோ கமெரா ஒன் றினாலேயே ஒளிப்பதிவு செய்யப்பட் டுள்ளமை குறித்து தற்போது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அதன் மூலப் பிரதி இருக்குமாயின் தங்களுக்கு வழங்கு மாறு அரசாங்கம் விடுத்த வேண்டு கோளை நிறைவேற்றவோ, பதில ளிக்கவோ சனல் 4 தொலைக்காட்சி நிர்வாகம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. என அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

## வேட்பாளர் அறிமுகம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் சார்பாக கிளிநொச்சி மாவட் டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்த லில் போட்டியிடும் வேட்பாளர் களை அறிமுகம் செய்யும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு அக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அலு வலகமான அறிவகத்தில் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் நாடாளுமன்ற உறுப்பி னர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-6)

## வாகனங்கள் விபத்து

வேகக்கட்டுப்பாட்டையிழந்த வாகனங்கள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகிய சம்பவம் நேற் றுக்காலை 7.30 மணியளவில் கிளி நொச்சி 155-ம் கட்டையில் இடம்பெற் றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென் றுகொண்டிருந்த கன்ரர் வாகனமும் எதிரே வந்த டிப்பர் வாகனமும் நேருக் குநேர் மோதியபோது அச்சந்தர்ப் பத்தில் வேகமாகவந்த இன்னொரு டிப்பர் வாகனமும் மோதிக்கொண் டது.

இந்த விபத்துச்சம்பவத்தில் கன்ரர் வாகனத்தின் சாரதி சிறு காயங்க ளுக்குட்பட்டதோடு வாகனங்கள் பலத்த சேதங்களுக்குள்ளாகின. (ந-6)


**விற்பனைக்கு**

Hero Push மோட் டார் சைக்கிள் விற் பனைக்குண்டு.

தொடர்பு:- 0776170684 (5244)

**பரத நாட்டியம் (செய்முறை தாளவிளக்கம்)**

க.பொ.த. சாதாரணதரம், க.பொ.த. உயர்தரம் மற்றும் வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் பரத நாட்டியத்திற்குத் தோற்றும் மாணவர்களுக்கான

**பரத நாட்டியம் (செய்முறை தாளவிளக்கம்)**

எனும் திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் அவர்களால் எழுதப்பெற்ற நூல் (புதிய பதிப்பு) யாழ்

**அன்னை புத்தகசாலையில்**

பெற்றுக் கொள்ளலாம். (5212)

**SPOKEN ENGLISH SPOKEN SINHALA**

விஷேடமாக வெளிநாடு செல்ப வர்களுக்கும் உயர்கல்வி கற்ப வர்களுக்கு ஆங்கிலமும் உத்தி யோகத்தர்களுக்கு சிங்கள மும் ஓய்வுபெற்ற ஒருவரினால் வீடுகளுக்குவந்துதனியாகவோ அல்லது குழுவாகவோ எளிமை யாக சுவடிய விரைவில் இலக்க ணத்துடன் கற்றுக் கொடுக்கப் படும். தொடர்பு:0774041904 (5230)

**விற்பனைக்கு**

பதிவு செய்யப்படாத புத்தம் புதிய 49CC மோட்டார் சைக் கிள்கள். பாவித்த Sony wega TV என்பன மலிவு விலையில் விற் பனைக்குண்டு. அரசாங்க ஊழி யர்கள் தவணை அடிப்படையிலும் செலுத்தலாம்.

517, வைமன் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம். (5242)

**மணமகள் தேவை**

யாழ். இந்து வேளாளர், வங்கி ஒன்றில் உயர் அதிகாரியாக கடமைபுரியும் 79-ம்ஆண்டு பிறந்த அவிட்டம் 1-ம் பாதம் நட் சத்திரத்தை உடைய சைவ போசன மணமகனுக்கு அழ கான உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை. சைவ போசனம் அல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 0779784347 (C-3512)

**வீடு வாடகைக்கு**

யாழ்.நகரில் இருந்து 1/2 Km தூரத்தில் மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் 129A இலக் கமுடைய 2 மாடி வீடு, 2 ரூம் ACயுடனும், 2ரூம் NonACயுட னும், Kitchen Room, Dining Room, Garage போன்ற சகல வசதிகளோடு கூடிய வீடு வாடகைக்கு உள்ளது.

தொடர்புக்கு: 0776612444

**கடை வாடகைக்கு**

கரடிப்போக்குச்சந்தி, கிளி நொச்சி A9 அருகாமை. சகல வசதிகளுடன் 22 அடி அகலம் 48 அடி நீளம்.

தொடர்பு:- 0770697763,0773247128 (5239)

## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

2010 இல் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று மாலை 2 மணிக்கு நல்லூர் சயன்ஸ் அக்கடமி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட ஆசிரியர் எஸ்.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகளின் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜாவும் கௌரவ விருந்தினராக தொழிலதிபர் நாகரட்னமும் சிறப்பு விருந்தினராக அதிபர் க.யோகானந்தமும் கலந்து கொள்வர்.

(ந-8)

## அல்லைப்பிட்டிப் பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தரத் தீர்வுக்குமான செயற்றிட்டத்தினுடாக நடமாடும் சேவை வழங்கப்படவுள்ளது.

இந் நடமாடும் சேவையானது நாளை காலை 10 மணி முதல் பிற்பகல் 3.15 மணி வரை யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில், சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பதிவாளர் நாயகத் திணைக்களம்,வேலணைப் பிரதேச செயலகம், தீவக வலயக்கல்விப்பணிமனை, ஊர்காவற்றுறை சுகாதார அதிகாரி, ஊர்காவத்துறை பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பால்நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கடற்றொழில் திணைக்களம், மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு, விவசாயத்திணைக்களம், வேலணை பிரதேசசபை என்பன கலந்து கொண்டு மக்களுக்கு சேவைகள் வழங்கவுள்ளன.

எனவே, இந் நடமாடும் சேவையில் இப்பகுதி மக்கள் பங்கு கொள்வதனால் தங்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வினை பெற்றுக் கொள்ள முடியுமென யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய நிகழ்ச்சித்திட்ட அதிகாரி அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

## இராசி பலன்

19.06.2011
ஆனி4,ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 1.34 மணிவரை
திருவோணம் பின்னிரவு 3.58 மணிவரை
இராகுகாலம் 4.24-5.54 மணிவரை
சுபநேரம் 8.54-10.24 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

**மேடம்** பொதுவாழ்வில் மதிப்பும்- மரியாதையும் உயரும், தொலைபேசி மூலம் பொன்னான 'செய்திகள் வந்து சேரும், தடைப்பட்ட பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

**இடபம்** பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் இணக்கத்துடன் நடந்து கொள்வர், காணி தொடர்பான பிரச்சினைகள் சுமுகமாக முடியும்.

**மிதுனம்** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உஷ்ண சம்பந்தமான வியாதிகள் ஏற்படலாம், பயணத்தை தள்ளி வைக்க நினைப்பீர்கள்.

**கடகம்** எண்ணியது நிறைவேறும் நாள், எளிதில் உணர்ச்சிவசப்படுவதை தவிர்ப்பது நல்லது, முன்னேற்றம் கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள்.

**சிங்கம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்,உற்சாகமான நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**கன்னி** தொட்டகாரியம் வெற்றி பெறும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் சுமுகமாக முடியும்.

**துலாம்** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தாய்வழி அனுகூலமுண்டு, சுபசெலவுகள் ஏற்படும் நாள், பிரயாண சுகமுண்டு.

**விருச்சிகம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**தனுசு** புதிய தொழில் தொடங்கும் எண்ணம் மேலோங்கும், திருமணப் பேச்சுக்கள் சுமுகமாக முடியும், புதிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

**மகரம்** எதிர்கால கற்பனையை அதிகம் வளர்த்துக் கொள்வீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**கும்பம்** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவுண்டு, சுப செலவுகள் ஏற்படும் நாள்.

**மீனம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், மாலையில் பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், குடும்பத்தில் குதூகலமான சம்பவங்கள் நடைபெறலாம்.

வளவன்

## குருபூசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சிவ குருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி மணிக்கு ஸ்ரீமத் இராமலிங்கம் சுவாமிகளின் குருபூசை நிகழ்வு இடம்பெறும்.

வேதாந்த மடத்தின் 5 ஆவது குருபீடாதிபதி ஸ்ரீமத் இராமலிங்கம் சுவாமிகள் குருபூசை நிகழ்வில் தாவடியூர் கே. எஸ். ஆர்.திருஞானசம்பந்தனின் திருமுறைப் பாராயணமும் அதனைத் தொடர்ந்து அபிஷேக ஆராதனைகளும் இடம் பெறும் என குருபீடாதிபதி தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-8)

## சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியமை தொடர்பில் சந்தேகநபருக்கு பிடியாணை

(யாழ்ப்பாணம்)

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த நபர் ஒருவர் அதே இடத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக கொடிகாமப் பொலிஸாரினால் 2009 ஆம் ஆண்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த நபரை விசாரித்த நீதிபதி இவரை தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் செல்ல அனுமதித்திருந்த நிலையில் சந்தேகநபர் தொடர்ந்து மன்றிற்கு சமுகமளிக்காததால் பிணையாளர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதும் குறித்த நபர் மன்றிற்கு சமுகமளிக்காததால் குறித்த இரண்டு பிணையாளரிடம் விதித்த பிணைப் பணமான மொத்தம் 50 ஆயிரம் ரூபாவை பணமாகப் பறிமுதல் செய்யுமாறும் குறித்த நபருக்கு பிடியாணை பிறப்பித்தும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா உத்தரவிட்டுளார்.

(ஸ்ரீ-4)

## வாரம் ஒரு தகவல்

### உயர்ந்த சிந்தனை

"என்ன சேர்! இந்த லைட் ஹவுஸ் உச்சியிலே நின்று கொண்டு அப்படி என்னத்தை யோசிக்கிறீர்கள்?

"அப்படியே கீழே குதித்து தற்கொலை செய்யலாமா என்று பார்க்கிறேன்!"

"தற்கொலை முயற்சி என்பது தண்டனைக்குரிய குற்றம்! தெரியுமா உங்களுக்கு?

"அப்படி தண்டனை கொடுக்கிறது தப்பென்று டாக்டர்கள் சொல்கிறார்களே... அது தெரியுமா உங்களுக்கு?"

"அப்படியா?"

"தற்கொலை முயற்சியில ஈடுபடுகிறவர்கள் ஏதோ ஒன்றைத் தங்களுடைய சுற்றத்தாருக்கும் மற்றவர்களுக்கும் சொல்ல விரும்புகிறார்கள் என்றுதான் பொருள். அது என்ன என்பதைப் புரிந்து கொண்டு ஏற்ற வகையிலே மனவழி மருத்துவம் கொடுக்கிறதுதான் நல்லது. தற்கொலை முயற்சிக்கு தண்டனை கொடுக்கிறது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது மாதிரி. தற்கொலை முயற்சி என்பது மனவேதனையின் ஒரு பகுதி என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்குத் தண்டனை கொடுக்கிறதுக்குப் பதிலாக... மனிதாபிமான அடிப்படையில அவர்களின் வேதனையைக் குறைப்பதற்துக்கு வழி பார்க்கவேண்டும்! இதுதான் நிபுணர்கள் சொல்கிலும் கருத்து!"

"இவ்வளவும் தெரிந்து வைத்துக் கொண்டு பின்னர் எதுக்கு இப்படி கீழே குதிக்கப் போகிறீர்கள்?"

"என்னுடைய பிரச்சினை உங்களுக்கு என்ன சேர் தெரியும்?" சொல்லுங்களேன்.. தெரிந்து கொள்கிறேன்"

"கல்யாணம் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்துகிறார்கள் எங்களுடைய வீட்டிலே!நான் வேண்டாம் என்றேன். கேட்க மாட்டார்களாம்! அதுதான் இந்த முடிவு!"

"உங்கள் முடிவு சரி... அதற்காக இவ்வளவு உயரத்திலே இருந்து கீழே விழ வேண்டுமா? வேற என்ன செய்யலாம்?"

"பேசாமல் கல்யாணமே பண்ணிக்கலாமே!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நிர்வாக சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தையிட்டி,ஊறணி, காங்கேசன்துறை மீள்குடியேற்ற பணிக்கான நடவடிக்கை குழுவின் நிர்வாகசபைக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

அதில் சகல நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

(ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 90 |
| தக்காளி | 35 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 60 | 80 | 70 |
| கரட் | 60 | 60 | 90 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 35 | 40 | 30 |
| வாழைக்காய் | 25 | 30 | 25 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 55 | 60 | 50 |
| பாகற்காய் | 80 | 100 | 110 |
| வெண்டிக்காய் | 45 | 90 | 30 |
| கருணைக்கிழங்கு | - | 80 | - |
| பயற்றங்காய் | 70 | 60 | 80 |
| லீக்ஸ் | 60 | 50 | 60 |
| பீற்றூட் | - | 80 | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 | 50 |
| முருங்கைக்காய் | 150 | 300 | 190 |
| போஞ்சி | - | 140 | - |
| கத்தரி தம்புள்ள | 20 | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 5-8 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 140 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40-50 | 50 |

# வடக்கில் பதிவு நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மக்களை பதிவுக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜே.வி.பி. கட்சி தெரிவித்துள்ளது.

காஸா மற்றும் மேற்குக் கரைப் பகுதிகளில் வாழும் பாலஸ்தீன மக்கள் எதிர்நோக்கி வரும் அவல நிலைமைகளை வடக்கு மக்களும் எதிர்நோக்க இடமளிக்கமுடியாது என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களை இராணுவத்தினர் புகைப்படம் எடுத்துக் கொள்வதுடன் அவர்களின் தரவுகளையும் பதிந்து வருவதாகவும் இவ்வாறான நடவடிக்கைகள் மக்களை அதிருப்தி அடையச் செய்யும் என அவர் குறிப்பிட்டார்.

நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் சனத்தொகை மதிப்பீடுகள் வரவேற்கப்பட வேண்டியது என்ற போதிலும் தனிப்பட்ட ஒரு மக்கள் தொகுதியை இலக்கு வைத்து நடத்தப்படும் சனத்தொகை மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்கள் மீது அரசாங்கம் அடக்கு முறைகளை பிரயோகிப்பதாக சர்வதேச சமூகம் குற்றம் சுமத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான பதிவு நடவடிக்கைகள் குறித்து சர்வதேச அமைப்புக்களின் குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் வகையில் அமையப் பெறும் என அவர் தெரிவித் துள்ளார். வடக்கில் ஏனைய கட்சிகள் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# குழந்தையின் மரணத்திற்கு றிசானா நபீக் காரணமல்ல


## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

சவுதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள றிசானா நபீக் ஆட் கொலையில் ஈடுபடவில்லை என்பதற்கான தடயங்கள் வெளியாகியுள்ளதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

றிசானா நபீக்கினால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை ஆராய்ந்த சுவிட்சர்லாந்து வைத்திய அதிகாரி ஒருவர் இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளதாக ஆணைக்குழுவின் கொள்கை வகுப்பு பணியாளர் பசில் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

றிசானா நபீக்கின் பராமரிப்பில் இருந்த பிள்ளையின் உடலினுள் ஏற்பட்ட ஒருவித உபாதையே மரணத்திற்கான காரணமாக அமைந்துள்ளது என சுவிட்சர்லாந்து வைத்திய அதிகாரி அறிவித்துள்ளதாக பசில் பெர்ணாண்டோ தெரிவித்தார். பிரேத பரிசோத னை அறிக்கையை கவ னத்திற்கொள்ளாது றிசானாவிற்கு மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இரத்தினபுரம் இரும்பு பாலத்தை உடன் புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை



கிளிநொச்சி இரத்தினபுரம் இரும் புப் பாலம் புனரமைக்கப்படாமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.கிளிநொச்சி நகரிலிருந்து வட்டக் கச்சி ஊடான விசுவமடு பிரதான பஸ் பாதையில் இரத்தினபுரம் இரும்புப் பாலம் அமைந்துள்ளது.

இப் பாலம் போரின் போது பாதிப் படைந்த போதும் இதுவரை புனர மைக்கப்படாமல் பாலத்தின் இரு மடங் கிலும் மேற்தகடு இன்று வெளியாக வுள்ளது.

எனினும் இரத்தினபுர இரும்புப் பாலத்தை முழுமையாக புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எடுக்க வில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். (ந-5)


## The Annual General Meeting of Jaffna College Alumni Association

The above meeting will held on the 9th July 2011 at 9.30 am in Ottley Hall.

Your presence is very much appreciated.

**Annual General Meeting Agenda**

- Prayer
- Minutes of the Last Ex. Co Meeting
- Secretary's Report
- Treasurer's Report
- Principal's Report
- Election of new office bearers
- Any Other Business

Hony.Secretary.

(C-351)


# விண்ணப்பம் கோரல்

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I இல் உள்ள அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமை பெறுகின்ற அலுவலர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஊடாக எதிர்வரும் ஜூலை மாதம் 21 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

அதன் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்பதுடன் பிழையானதும் முழுமை பெறாததுமாக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தற்போது ஓய்வுபெற்றிருப்பினும் 2005.01.01 ஆம் திகதி வரை அல்லது அன்றைய திகதிக்கு பின்னராக ஒரு திகதி வரை சேவையில் இருந்த மற்றும் தரமுயர்வுக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்ய முன்னரான தரமுயர்வு சந்தர்ப்பத்தில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய போதும் தரமுயர்வு பெறாத அல்லது விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க முடியாது போன அலுவலர்கள் இத்தரமுயர்வுகளுக்காக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவத்தை www.pubad. gov.lk/publication- list.php ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

* * * * * * * * *

இலங்கை ஆயுர்வேத சேவையிலுள்ள வைத்திய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளது.

எனவே, தகுதியுள்ள வைத்திய உத்தியோகத்தர்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத்தலைவர் ஊடாக பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

* * * * * * * * *

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவர்களுக்கான கணனித் திறமையைச் சோதிக்கும் எழுத்துப் பரீட்சையும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சையானது வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மற்றும் கொழும்பு, காலி, மாத்தளை, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத் தலைவரூடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, பெலவத்தை , பத்தரமுல்லை என்றும் முகவரிக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

* * * * * * * * *

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கு 2011 ஆம் ஆண்டுக்கான வினைத்திறன் தாண்டற் பரீட்சை கல்வி அமைச்சினால் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சை பொதுமுகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள், நிதி ஒழுக்குக் கோவை, கல்விச் சட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் மாத்திரம் நடைபெறவுள்ளது.

எனவே, தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II வினைத்திறன் தாண்டற் பரீட்சை" எனக் குறிப்பிடல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பப் படிவங்களை பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் ஜூலை மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

* * * * * * * * *

அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் ஆகியவற்றினால் நடத்தப்படவுள்ள தமிழ் ,சிங்களம்I, II, III ஆகிய மட்டங்களுக்கான அரசகரும மொழித்தேர்ச்சி எழுத்துப் பரீட்சைக்கு மாகாண அரசாங்க சேவையிலுள்ள அரச ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்த எழுத்துப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம், நடைமுறை, விண்ணப்பப்படிவ மாதிரி மற்றும் உரிய விபரங்களை www.languagesdept.gov.lk என்ற அரசகரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை ப்ரீட்சைகள் திணைக்களம் பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.மேற்படி விண்ணப்பக்கோரல்கள் தொடர்பான மேலதிக விபரங்களை கடந்த 17 ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானிப் பத்திரிகையிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்தில் நேரில் வந்தோ பார்வையிட முடியும். (ஸ்ரீ-4)

# தீர்வு கிடைக்கும் வரை உண்ணாவிரதம் தொடரும்

## ஈராக்கிலுள்ள இலங்கைப் பணியாளர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஈராக்கில் சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பணியாளர்களில் பத்துப் பேர் நோய்வாய்ப்பட்டுள்ளனர்.

கடந்த ஆறு நாட்களாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள போதிலும் இதுவரை தமக்கு எவ்வித தீர்வும் வழங்கப்படவில்லை என்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்களில் ஒருவர் கூறியுள்ளார்.

19 மாத கால நிலுவைக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதுடன் தம்மை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறும் ஈராக் அரசாங்கத்தை வலியுறுத்தி இலங்கைப் பணியாளர்கள் சிலர் கடந்த 12 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து சுமார் 20 இலங்கைப் பணியாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக குறித்த பணியாளர் குறிப்பிட்டார்.

தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை உண்ணாவிரதத்தை கைவிடப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை உரிய கொடுப்பனவுகளின்றி 41 இலங்கைப் பணியாளர்கள் ஈராக்கில் தங்கியுள்ளனர். இதன் காரணமாக தாம் உட்பட தங்கள் குடும்பத்தவர்களும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதாக ஈராக்கி லுள்ள இலங்கைப் பணியாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை, இலங்கைப் பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை வழங்குவதற்காக லெபனானிலுள்ள இலங்கைத்தூதரகம் கடும் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கை ஆசிரியர்களுக்கு உருது மொழிப் பயிற்சி

## கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

இலங்கையிலுள்ள ஆசிரியர்களுக்கு பாகிஸ்தான் தேசிய மொழியான உருது மொழியை கற்பிக்கவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகருடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் 107 இலங்கை மாணவர்களுக்கான ஜின்னா புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நடைமுறையிலுள்ள கல்வி முறையில் மாற்றத்தை கொண்டுவரவுள்ளதாகவும் இதனடிப்படையில் பாடத்திட்டங்கள், கற்பித்தல் முறைகள் போன்றவற்றில் மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு முதல் க.பொ.த.(சா/த) பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு 3 மாத காலத்திற்குள் தொழிற் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதேபோன்று க.பொ.த (உ/த) பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும் பயிற்சி தொழிற் பயிற்சி வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த நான்கு வருடத்திற்குள் இலங்கையின் அறிவு மையத்தை விருத்தி செய்வதற்காக 4 ஆயிரத்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.


இதனடிப்படையில் பாடசாலைகள், ஆசிரிய பயிற்சி நிலையங்கள் போன்றன அபிவிருத்தி செய்யவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் மற்றும் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்தானிகர் சீமாஇலாஹி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினூடாக பாகிஸ்தான் அரசு ஏழாவது தடவையாக இலங்கை மாணவர்களுக்கு ஜின்னா புலமை பரிசில் வழங்கியது.

நாட்டின்பலபாகங்களிலிருந்துதெரிவுசெய்யப்பட்ட க.பொ.த.(சா/த) மற்றும் (உ/த) கல்வி கற்கும் 107 மாணவர்களுக்கு வருடத்திற்கு 24 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இதுவரை சுமார் 800 இலங்கை மாணவர்களுக்கு ஜின்னா புலமை பரிசில் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ்ரீ-2)


## இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



பதின்மூன்றாம் திருவிழா (19.06.2011)

### சோதியாய் தோன்றிடுவான்

நேரிசை வெண்பா

அந்தணர்கள் பூசை அலங்காரஞ் செய்தேந்த
கந்தன் இணுவைக் கலைக் கோயில்–சுந்தரமாய்
வீதி உலா வருவான் வேண்டும் அனைவருக்கும்
சோதியாய் தோன்றிடுவான் தோய்ந்து

ஆண்டுநா றின்மேல் அரிய மஹோற்சவ நாள்
ஈண்டிருபத் தைந்து விழாவிலும்–பூண்டிணுவை
அன்படியார் நோற்று அருணகிரி பாட்டிசைக்கத்
துன்பகற்றிக் கேட்பான் தொடர்ந்து

வான்தோயுங் கோபுரமும் மாமணிக் கோபுரமும்
தான்தோய் இணுவைப் பெருங்கோயில் தேன்போல
அன்பாக ஏத்தும் அனைவர்க்கும் சண்முகன்
பொன்பொருளெல் லாமருள்வான் போந்து

முதுபெரும் புலவர், கலாபூஷணம்,
புலவர் மணி-வை.க.சிற்றம்பலம்

(5114)

13 ஆம் திருவிழா உபயகாரர்


# விலங்கு விசர் நோய் தடுப்பூசியேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை அரச வீதியில் அமைந்துள்ள சுகாதார மையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நல்லூர் கோயில் வடக்கு வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வ்ளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# புதிய அங்கத்தவர்கள் பதவியேற்பு

கைதடி மற்றும் சாவகச்சேரியிலுள்ள சர்வதேச லயன்ஸ் கழகங்களுக்கு புதிய அங்கத்தவர்கள் பதவியேற்பு நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கைதடியிலுள்ள சித்த மருத்துவ பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.ஜெயவத்சலன் (எம்.ஜெ.எவ்), லயன்சீமாட்டிசயந்தினி (எம்.ஜெ.எவ்) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக முதலாவது உபமாவட்ட ஆளுநர்லயன்எஸ். எஸ்.துங்கராஜ், எம்.ஜெ.எவ்.லயன் சீமாட்டி ஜெயசோதி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ)




புத்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு...

சரவணா ரெக்ஸ்

770, 772, கே.கே.எஸ். வீதி
(தட்டா தெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 0421 Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
யாழ்ப்பாணம். 021 222 1723

Email: nallur.saravana@gmail.com





புதுக்கடை திறப்பு விழா

அழைப்பிதழ்

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான கர வருடம் ஆனி மாதம் 04ம் நாள்
(19.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8.54மணி முதல் 10.24 மணி
திருவோண நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுப வேளையில்

Caxton Printers இன்
மற்றுமொரு சேவையாய் உதயமாகிறது

Caxton DIGITAL MART
For Accurate Printing Works

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

1/1, நல்லூர் மாக்கற்,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காட்டுச் சந்தி,

கக்ஸ்ரோன் குடும்பம்

(5237)

விரைவு தெளிவு நேர்த்தி விரைவு தெளிவு நேர்த்தி விரைவு தெளிவு நேர்த்தி

# எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கும் தமிழியல் விருது-2011

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டு தோறும் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்து தமிழ்ப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம் தமிழியல் வித்தகர் பட்டமும் தமிழியல் விருதும் பொற்கிழியும் வழங்கிக் கௌரவித்து வருகின்றது.

இவ்வாண்டு கார்த்திகை மாதத்தில் இவ் விருதுகளை வழங்குவதற்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் செயல்வடிவம் கொண்டுள்ளது.

**உயர்தமிழியல் விருது**

இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மிகச் சிறந்த மூத்த படைப்பாளி ஒருவருக்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய ஸ்தாபகர் ஓ.கே. பாக்கியநாதன் உயர் தமிழியல் விருது வழங்கிக் கௌரவிக்கும்

**தமிழியல் விருதும் தமிழியல் வித்தகர் பட்டமும்**

தமிழிலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மூத்த படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் 5 பேருக்கு தமிழியல் வித்தகர் பட்டத்துடன் தலா ரூபா 15,000 பொற்கிழியும் வவுனியூர் ஸ்ரீ இராமகிருஷ்ணா- கமலநாயகி தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும்.

**மிகச் சிறந்த நூலுக்கான தமிழியல் விருது**

2010 ஆம் ஆண்டில் வெளிவந்த மிகச் சிறந்த நூலொன்றுக்கு ரூபா 30,000 பொற்கிளியுடன் சுவாமி விபுலானந்த அடிகளார் தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும்.

**சிறந்த நூல்களுக்கான தமிழியல் விருது**

2010 ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த 13 நூல்களுக்கு தலா 10,000 பொற்கிழியுடன்,புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தமிழியல் விருது,புலவர்மணி ஆ.மு ஷரிபுத்தின் தமிழியல் விருது,கல்விமான் க.முத்துலிங்கம் தமிழியல் விருது, அருட்கலை வாரிதி சு.சண்முகவடிவேல் தமிழியல் விருது,

சிவநெறிப் புரவலர் சீ.ஏ இராமஸ்வாமி தமிழியல் விருது,நாவலாசிரியை பவளசுந்தரம்மா தமிழியல் விருது,கலைஞர் ஓ.கே கணபதிப்பிள்ளை தமிழியல் விருது,பம்பைமடு நாகலிங்கம் –நல்லம்மா தமிழியல் விருது. வணபிதா சந்திரா அடிகளார் தமிழியல் விருது, பதிவாளர் நாயகம் எஸ். முத்துக்குமாரன் தமிழியல் விருது, வித்தியாகீர்த்தி ந.சந்திரகுமார் தமிழியல் விருது, செந்தமிழ்ச் செல்வர் சு.ஸ்ரீகந்தராஜா தமிழியல் விருது, பம்பைமடு கந்தையா இரஞ்சிதமலர் தமிழியல் விருது வழங்கிக் கௌரவிக்கும்.

**குறுந்திரைப்படத்திற்கான தமிழியல் விருது**

2010 ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த 2 குறுந்திரைப்படங்களுக்கு தலா ரூபா 10, 000 பொற்கிழியுடன் கவிஞர் கல்லாறன் மு.கணபதிப்பிள்ளை தமிழியல் விருது.

துறையூர் வே.நாகேந்திரன் தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும்.

**சிறப்புத்தமிழியல் விருது**

மிகச் சிறந்த வெளியீட்டகம்/ பதிப்பகம் , நூல்வடிவமைப்பு/ அட்டை வடிவமைப்பு தலா ரூபா 5,000 பொற்கிழியுடன் புரவலர் ந.ஜெகதீசன் தமிழியல் விருது, புரவலர் எஸ். சோலைமலைத்தேவர் தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும் .

**ஓவியருக்கான தமிழியல் விருது.**

மிகச் சிறந்த ஓவியர் ஒருவருக்கு தலா ரூபா 5,000 பொற்கிழியுடன் ஓவியர் கிக்கோ தமிழியல் விருது வழங்கிக் கௌரவிக்கும்

அந்த வகையில் 2011 ஆம் ஆண்டு தமிழியல் விருதுக்கான நூல்களையும் குறுந்திரைப்படங்களையும் தேர்வு செய்ய படைப்பாளிகளிடமிருந்து நூல்களையும் இறுவட்டுக்களையும் எதிர்பார்க்கிறது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலங்கையைத் தாயகமாகக் கொண்ட படைப்பாளிகள் 2010 ஆம் ஆண்டு தை முதலாம் திகதி முதல் மார்கழி 31 ஆம் திகதி வரை வெளிவந்த நூல்களையும் குறுந்திரைப்பட இறுவட்டுக்களையும் தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம்.

நாவல், சிறுகதை, கவிதை,குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம், விடலை இலக்கியம், நாடகம், அறிவியல், ஆய்வியல், வரலாறு, பழந்தமிழ்இலக்கியம், மொழிப் பெயர்வு, இனமத நல்லுறவு இலக்கியம், தொழில்நுட்பம் எனப் பல்துறை சார்ந்த நூல்களையும் 30 நிமிடங்களுக்கு உட்பட்ட பல்துறை சார்ந்த குறுந்திரைப்பட இறுவட்டுக்களையும் தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம்.

தேர்வுக்காக வந்து சேரும் நூல்களில் இருந்து 2010 இல் வெளிவந்த சிறந்த 12 நூல்களும் இறுவட்டுக்களில் இருந்து 2 சிறந்த குறுந்திரைப்படங்களும் நீதியானதும் சுதந்திரமானதுமான துறைசார் நடுவர் குழுவினால் தமிழியல் விருது 2011 க்காக தேர்வு செய்யப்படும்.

தேர்வுக்காக பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விபரப்பட்டியலுடன் நூலாயின் 4 பிரதிகளும் இறுவட்டாயின் 2 பிரதிகளும் 10.08.2011 க்கு முன்னர் ஓ.கே. குணநாதன், மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல 64, கதிர்காமர்வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு,இலங்கை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஒரு படைப்பாளி எத்தனை வகையான படைப்புக்களையும் அனுப்பி வைக்கலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களை 0776041503 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

(ஸ்ரீ)

# வவுனியாவிலுள்ள பயங்கரவாத விசாரணை அலுவலகத்திற்கு படையெடுக்கும் உறவினர்கள்

இறுதி யுத்தத்தின் போதும் அதற்கு முன்னரும் கைது செய்யப்பட்டும் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டும் வேறு வழிகளிலும் காணாமல் போயுள்ளவர்களின் பெயர் விபரங்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்காக நூற்றுக் கணக்கானவர்கள் வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு தினமும் வந்த வண்ணம் இருக்கின்றார்கள்.

நாளாந்தம் சராசரியாக 150-200 பேர் வரையில் இவ்வாறு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தடுப்பில் உள்ளவர்களின் பெயர் மற்றும் அவர்கள் தொடர்பான விபரங்களை அவர்களது குடும்பத்தினர் அறிந்துகொள்ள முடியும் எனப் பயங்கரவாத விசாரணைப் பிரிவு கடந்த வாரம் பகிரங்கமாக அறிவித்திருந்ததையடுத்தே மக்கள் இவ்வாறு வந்த வண்ணமுள்ளனர்.

விடுதலைப்புலிகளினால் கட்டாயமாக ஆட்சேர்ப்பிற்காக கொண்டு செல்லப்பட்டவர்கள் தொடர்பான விபரங்கள் கிடைக்குமா என்பதைக் கண்டறிவதற்காகவும் இந்த அலுவலகத்திற்குப் பலர் வந்த வண்ணமுள்ளனர்.

அப்படியாக வந்தவர்கள் பலர் தமது உறவுகளின் தகவல் கிடைக்காமல் பெருமளவில் திரும்பப் போவதையும் காணக்கூடியதாக இருந்தது.காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பான விபரங்களைப் பெறுவதற்காக மனித உரிமை அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் தொடர்ச்சியான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. இத்தகையவர்களின் விபரங்களைக் கண்டறிந்து உரியவர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்று அந்த அமைப்புக்களும் எதிர்க் கட்சிகளும் அரசாங்கத்திற்குப் பல வழிகளிலும் அழுத்தம் கொடுத்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவினால் மனித உரிமை பாதுகாவலர் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலுடன் மனித உரிமைப் பாதுகாவலர் பயிற்சிநெறியானது நடைபெற்று வருகின்றது.

இப்பயிற்சி நெறியின் இரண்டாம், மூன்றாம் அமர்வுகள் கடந்த 14 ஆம் திகதி யாழ்.பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் யாழ்.மனித உரிமை அதிகாரிகள் கலந்துகொண்டு பயிற்சிநெறிக்கான பாடத்திட்டங்களைப் போதித்தனர்.

இப் பயிற்சிநெறியில் பங்கு கொண்ட மாணவர்களுக்கு மனித உரிமைப் பாதுகாவலர் பிரகடனம், உரிமைப் பாதுகாவலர் பிரகடனம், மனித உரிமை கலாசாரத்தை சமூகத்தில் மேம்படுத்தல் மற்றும் தலைமைத்துவம், முகாமைத்துவம், சமய நூல்களில் மனித உரிமைகளின் செல்வாக்குப்பற்றி போதிக்கப்பட்டன.

(ஸ்ரீ-4)



இலங்கை மெதடிஸ்த திருச்சபை தினத்தை முன்னிட்டு கட்டைவேலி சேகரத்தினால் நடத்தப்பட்ட யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான அணிக்கு 6 பேர் 5 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியில் மாலுசந்தி மைக்கல் அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது அவ்அணிவீரர்களை படத்தில் காணலாம்.


# மரண அறிவித்தல்

## சின்னத்துரை-இராச செல்வமணி (பேபி)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், 67/42, சீனிவாசகம் வீதி, இரண்டாம் ஒழுங்கை, கொட்டடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை-இராசசெல்வமணி (பேபி) நேற்று முன்தினம் (17.06.2011) காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-அழகம்மா தம்பதியினரது இளைய மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், க.கனகம்மா, சி.இரத்தினமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், சியாமளா (வாசுகி), காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், யாழ்ப்பாணம் நாதன் களஞ்சியம், சிவகணேஸ் களஞ்சியம், எஸ்.பி.நாதன் பிறைவேற் லிமிட்டட், எல்.கே.என்.ஜி பிறைவேட் லிமிட்டட் (லண்டன்) என்பவற்றின் உரிமையாளர் சி.பரமநாதன் (கப்பல் நாதன்) என்பவரின் அருமை மாமியாரும், லவநாதன் (லண்டன்), காலஞ்சென்ற குஷநாதன், நிஷநாதன் (லண்டன்), கௌசிநாதன் (லண்டன்), ல.சாமினி (லண்டன்), நி.நித்தியப்பிரபா (லண்டன்) ஆகியோரின் பாசமான பேர்த்தியும், சக்ஷாவின் (லண்டன்) அருமை பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19.06.2011 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**தகவல்:**

**சி.பரமநாதன் (மருமகன்) 0777283811**

(5236)

# அடுத்தவரின் வேலைக்காக அலையும் 3 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

ஒன்பது எண்களில் 3 ஆம் எண்ணிற்குத் தனிச்சிறப்பு உண்டு. தேவகுருவான பிரகஸ்பதிக்கு உரியது. எப்போதுமே அடுத்தவர்களுக்கு நல்லது மட்டும் செய்பவர்கள் இவர்கள்தான். இவர்களது திறமையையும், புத்திசாலித்தனத்தையும் மற்றவர்கள் பயன்படுத்திக் கொண்டு, இவர்களுக்குரிய மரியாதையைச் செய்ய மாட்டார்கள். தனக்கு எதிரியான 6 எண்காரர்களுக்கும் இவர்கள் நன்மையே செய்வார்கள். ஆனால், அவர்கள் இவர்களுக்கு உதவாமல், பல பிரச்சினைகளைக் கொடுப்பார்கள். தன்னை நம்பி வருவோருக்கு நிச்சயம் உதவி செய்வார்கள். தங்களை மற்றவர்கள் மதிக்க வேண்டும், தங்களது ஆலோசனைகளையும் கேட்க வேண்டும் என்று மட்டும் மிகவும் எதிர்பார்ப்பார்கள். முகஸ்துதி செய்வதன் மூலம் மற்றவர்கள் இவர்களைப் பயன்படுத்திக் கொள்வார்கள். தங்களது உடை விடயத்திலும், தங்களை அழகுபடுத்திக்கொள்ளும் விடயத்திலும் ஆர்வமாக இருக்க மாட்டார்கள். மானத்தை மறைப்பதற்காக உடை அணிகிறோம் என்று மட்டும் நினைப்பார்கள். அடுத்தவரிடம் உதவி கேட்டுச் செல்ல மாட்டார்கள்.

சுய கௌரவம் பார்ப்பது இவர்களது குறைபாடாகும். இதனாலேயே பல நல்ல வாய்ப்புகளை இவர்கள் வாழ்க்கையில் இழந்திருப்பார்கள். இவர்கள் பழைய சாத்திரங்கள், பழைய பழக்கங்கள் ஆகியவற்றின் மீது மிகவும் மதிப்பும், மரியாதையும் கொண்டவர்கள். எனவே, கட்டுப்பாடுகளை மீறப் பயப்படுவார்கள். பெயர் கெட்டு விடுமோ என்று பெரிதும் அஞ்சுவார்கள்.

உயிருக்கு சமமாக கௌரவத்தைக் காப்பாற்றுவார்கள். இவர்கள் அடுத்தவர்களின் வேலைக்காக மிகவும் அலைவார்கள். இவர்களின் பேச்சில் மனச்சாட்சி, விதி, நேர்மை, பாவம் போன்ற வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்துவார்கள். இவர்கள் சுதந்திரமாகவே வாழவே பிரியப்படுவார்கள். கோயில், நிர்வாகம், ஊர்த்தலைமை போன்ற பதவிகளில் கௌரவமாக (ஊதியம் பெறாமல்) வேலை செய்ய விரும்புவார்கள். அன்பிற்கு அடிபணிவார்கள். அதிகாரத்திற்கும், ஆணவத்திற்கும் அடிபணிய மறுப்பார்கள். சில சமயங்களில் ஆவேசமாகவும் எதிர்ப்பார்கள். கையில் பணமிருந்தால் அழகுக்காகவும், சிக்கனத்திற்காகவும் (தேவையைப் பற்றி கவலைப்படாமல்) பொருட்களை வாங்கி வீட்டில் வைத்துக் கொள்வார்கள். சொத்துக்கள் விடயத்திலும் விட்டுக் கொடுக்கும் குணம் அதிகம் உண்டு. "என் தம்பிதானே வைத்துக் கொள்ளப் போகிறான், வைத்துக் கொள்ளட்டும்" என்று எதார்த்தமாக நினைப்பார்கள். தங்களது உரிமையை விட்டுக் கொடுத்து விடுவார்கள். இந்தக் குணத்தால் பல அன்பர்கள் பிற்காலத்தில் கவலைப்படுவார்கள். இவர்கள் தீனிப்பிரியர்கள். காபி, டீ, டிபன் போன்றவற்றை அடிக்கடி சேர்த்துக் கொள்வார்கள். குரு ஆதிக்கம் நன்கு அமையப் பெற்றவர்கள் அன்பிலும், பக்தியிலும், சிறந்தவர்கள். ஏதாவது ஒரு துறையில் தனித்திறமையைக் காட்டுவார்கள்.

தேசப்பற்றும் நிறைந்தவர்கள். பிறந்த நாட்டிற்காக உயிரையும் கொடுக்கத் தயாராவார்கள். பொருளாதாரத்தில் மிகவும் உயர்ந்திருப்பார்கள். பார்ப்பதற்கு கடுமையானவராக தோன்றினாலும், வெள்ளை மனத்துடன் மற்றவர்களிடம் பழகுவார்கள்.

ஆனால், குருபலம் குறைந்தவர்கள் கடன் என்னும் பள்ளத்தில் விழுந்து விடுவார்கள். சிந்திக்காமல் பல காரியங்களில் இறங்கித் தாங்களே சிக்கிக் கொள்வார்கள். சில அன்பர்களுக்கு காதல் தோல்விகளும் ஏற்பட்டிருக்கும்.

**கூட்டாளிகள், நண்பர்கள்**

இவர்களுக்கு 3,12,21,30,9,18,27 ஆகிய நாட்களில் பிறந்தவர்களும், கூட்டெண் 3 மற்றும் 9 என வரும் அன்பர்களும் மிகவும் உதவுவார்கள். மேற்கண்ட எண்களில் பிறந்தவர்களைக் கூட்டாளிகளாகவும், நண்பர்களாகவும் வைத்துக் கொள்ளலாம். 2 ஆம் எண்களாலும் நன்மைகள் ஏற்படும். முதலாம் எண்காரர்களின் மூலம் சில நன்மைகள் ஏற்பட்டாலும் அவை நீண்ட நாட்களுக்கு நீடிக்காது. 6,8 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களிடமும் கூட்டு எண் 6, 8 வரும் அன்பர்களிடமும் கவனமாக இருக்கவேண்டும். 3 ஆம் திகதிக் காரர்களை இவர்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

**திருமண வாழ்க்கை**

இவர்கள் 3, 9 ஆகிய எண்களில் பிறந்தவர்களைத் திருமணம் செய்து (பிறந்த எண் அல்லது விதி எண்) கொண்டால், வாழ்க்கைப் பயணம் இனிமையாக இருக்கும். 2 எண் காரர்களையும் மணந்து கொள்ளலாம். இவர்களை அனுசரித்துப் போவார்கள்.

**இவர்களின் நோய்கள்**

இவர்களுக்கு தோல் வியாதிகள் தான் முதல் எதிரி. பெரும்பாலோருக்கு வயிற்று வலியும், மலச்சிக்கலும், வாய்வுக் கோளாறுகளும் உண்டு. வாய்ப்புண், குடல் சம்பந்தமான நோய்களும் ஏற்படும். முச்சுப் பிடிப்பு, சொறி, சிரங்கு போன்றவைகளாலும் அடிக்கடி தொந்தரவுகள் உண்டு.

நெல்லிக்கனியும், எலுமிச்சை மற்றும் கீரை வகைகளையும் அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவை உடலுக்கு உறுதியையும் நோய்யெதிர்ப்பு சக்தியையும் கொடுக்கும்.

**இவர்களுக்கான தொழில்கள்**

இவர்களுக்கு ஆசிரியர், சோதிடர்கள் போன்ற அறிவைத் தூண்டும்,

தொழில்கள் சிறப்பு தரும். நல்ல அரசு உத்தியோகங்கள் கிடைக்கும் யோகம் உண்டு. தர்ம ஸ்தாபனங்களில் உத்தியோகம் கிடைக்கும். பேச்சாளர்கள் இவர்கள் சிறந்த நுண்ணிய சாத்திர ஆராய்ச்சியார்கள், ஆலோசனையாளர்கள் போன்ற துறைகளிலும் பிரகாசிப்பார்கள். பல அன்பர்கள் புத்தக விற்பனையாளர்களாகவும், பாடசாலைகள் நடத்துபவர்களாகவும் இருப்பார்கள். அரசியல் ஈடுபாடும் ஏற்படும் (உ+ம் - கலைஞர் கருணாநிதி) நன்கு பிரகாசிப்பார்கள். எழுத்தாளர்கள், பேப்பர் கடைகள், அச்சுத் தொழில் ஆகியவையும் இவர்களுக்கு நன்கு அமையும். கல்லூரிப் பேராசிரியர்கள், தத்துவப் பேராசிரியர்கள், மேலாளர்கள் போன்ற தொழில்களும் சிறப்புத் தரும். இராணுவத்திலும் நன்கு பிரகாசிப்பார்கள்.

**எண் 3 சிறப்புப் பலன்கள்**

இந்த எண் தேவர்களுக்குக் குருவான பிரஹஸ்பதியினுடையது. எல்லோருக்கும் நல்ல ஆலோசனைகள் சொல்வதும் நல்ல வழி காட்டுவதும் இவர்கள்தான். "குரு பார்க்க கோடி நன்மை" என்கிறது சோதிடம். இந்த 3 ஆம் எண்காரர்களால் உலகத்தில் உள்ள மற்ற அனைவருக்கும் நன்மைகளே ஏற்படும்.

இவர்களிடம் மற்ற அனைவரையும் விடத் தாங்கள்தான் அறிவிலும் அதிகாரத்திலும் உயர்ந்து விளங்க வேண்டும் என்ற எண்ணமும் அதற்கேற்ற உழைப்பும் உண்டு. பிறரைக் கட்டுப்படுத்தி தனது ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டும் என்கிற தீவிர எண்ணங்களும் உண்டு.

எந்த ஒரு செயலிலும் கட்டுப்பாடும் ஒழுங்கும் இருக்க வேண்டும் என்பார்கள். தங்களுடைய மேலதிகாரிகள், முதலாளிகள் போன்றவர்களுக்கு மிகவும் விசுவாசமாகவும் உண்மையாகவும் இருப்பார்கள். மனச்சாட்சி பார்த்துச் செயற்படுவார்கள்.

எனவே, வியாபாரத்திலும் அல்லது உத்தியோகத்திலும் வெகு விரைவில் முன்னேறி விடுவார்கள்.

இவர்களது கண்டிப்பான நடத்தையின் மூலம் சில எதிரிகளும் ஏற்பட்டு விடுவார்கள். கர்வம் ஓரளவு வந்து விடும். அடுத்தவரைப் புகழ்ந்து பேசத் தயங்குவார்கள்.

சுதந்திர எண்ணங்களும் அடுத்தவர்களை விட மேலே இருக்க வேண்டும் என்ற தீவிர எண்ணமும் உண்டு. உலகம் பாராட்டும் ஆன்மீகத் தலைவராகவோ, இராஜதந்திரியாகவோ, தங்களை வருத்திக் கொண்டு தியாகங்கள் புரியும் தேசியத் தலைவர்களாகவோ விளங்குவார்கள் இவர்களே. சுவாமி விவேகானந்தர் இந்தியாவின் முதல் ஜனாதிபதியாக இருந்த பாபு இராஜேந்திர பிரசாத் போன்ற மகான்கள் எல்லாம் இந்த எண்ணில் பிறந்தவர்களே.

## வெள்ளைமனம் கொண்ட 3ஆம் எண்

நாணயம், பண்புடைமை, ஒழுக்கம் போன்ற நற்குணங்கள் நிறைந்தவர்கள். கடுமையான உழைப்பாளிகள். 3 இன் பலம் குறைந்தால் இவர்களது உழைப்பினை எளிதாக மற்றவர்கள் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் நல்ல பெயர் பெறுவார்கள். பல அன்பர்கள் ஆசிரியர்களாகவும் கல்லூரிப் பேராசிரியர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் மதப்பற்றும் தங்களது பண்பாடு, கலாசாரம் போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடும், நம்பிக்கையும் உடையவர்கள். புதிய நாகரிக முன்னேற்றங்களைக் குறை கூறுவார்கள்.

பிறருடைய நிர்ப்பந்தங்களுக்காக எந்த ஒரு ஒவ்வாத செயலையும் செய்ய மாட்டார்கள். இதனாலேயே பழைமைவாதிகள் என்று முத்திரை குத்தப்படுவார்கள். இவர்களது பேச்சு உரையாடல்களில் இறைவன், விதி, நியாயம் போன்ற வார்த்தைகள் அதிகம் காணப்படும். குறுக்குவழியில் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள தயங்குவார்கள். தங்களது விடாமுயற்சியாலும் சலிக்காத உழைப்பினாலும் எப்படியும் முன்னேறி விடுவார்கள். தங்களுடைய இயல்புக்கும் தகுதிக்கும் அப்பாற்பட்ட பதவியை அடைய விரும்பமாட்டார்கள்.

(தொடரும்)

# பொது மக்களின் அடிப்படை உரிமைகளில்

# இராணுவம் தலையிடுவதை நிறுத்த வேண்டும்

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு



கூட்டம் கூடும் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் மற்றும் நடமாடும் சுதந்திரம் ஆகியவை மக்களின் பிறப்புரிமைகளாகும். இது இப்படி இருக்கையில் யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் இராணுவத்தினர் அத்துமீறி நுழைந்து அடாவடித்தனம் செய்தமை கண்டிக்கத்தக்கது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளில் இராணுவம் தலையிடுவதை தமிழர் விடுதலைக்கூட்டணி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. கூட்டம் கூடும் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் மற்றும் நடமாடும் சுதந்திரம் ஆகியவை மக்களின் பிறப்புரிமைகளாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், நடைபெற இருக்கும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடவிருக்கும் தமது வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த மண்டபத்திற்குள் இராணுவத்தினர் அத்துமீறி புகுந்தது கண்டிக்கப்படவேண்டிய செயலாகும். கூடியிருந்த மக்களை அவர்கள் தாக்கி ஓட விரட்டியதுமல்லாமல் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற வாகனங்களுக்கும் பெரும் சேதம் விளைவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை தாக்க முயற்சித்துள்ளதுடன் அவர்களின் மெய்ப்பாதுகாப்பாளர்களுக்கும் காயங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

இத்தகைய அடாவடிச் செயல்களை இராணுவம் உடனடியாக நிறுத்த வேண்டும். எது எப்படியிருப்பினும் பல பொலிஸ் நிலையங்கள் பரந்திருக்கும் போது இந்த விடயத்தில் இராணுவம் தலையிட்டிருக்கத் தேவையில்லை. இத்தேவையற்ற சம்பவம் நடைபெற்றுள்ள இடத்திற்கு அண்மையில் கூட ஒரு பொலிஸ் நிலையம் உண்டு.

இராணுவத்தின் இச் செயல் எனக்கு 1980 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பழையதோர் சம்பவத்தை நினைவுகூர வைக்கின்றது. பிரபல யாழ்ப்பாண நாச்சிமார் கோவிலில் இப்படி ஒரு சம்பவம் ஆரம்பித்து இறுதியில் யாழ். பொது நூலகம், தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற யோகேஸ்வரனின் இல்லம் மற்றும் பல கட்டடங்கள் எரிந்து சாம்பலாயின.

இச்சம்பவம் இனி நடக்க இருப்பவைக்கு முன்னோடியா? யானை வருவதற்கு முன் கேட்கும் மணி யோசையா? இதனால் தான் வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டும் என நான் கோரி வருகின்றேன். இதுபோன்ற சம்பவங்கள் முளையில் கிள்ளியெறியப்படாது போனால் நாட்டின் எதிர்காலம் இருளடைந்ததாகவே இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழக பொறியியல் கல்லூரிகளில் இலங்கை அகதி மாணவர்களை சேர்க்க அனுமதி

தமிழ் நாட்டில் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பட்டயப்படிப்பு முடித்து தேர்வுபெற்றதகுதியான இலங்கைஅகதி மாணவர்களை பொறியியல் கல்லூரிகளில் நேரடியாக 2 ஆம் ஆண்டில் சேர்க்க அனுமதி அளிக்கப்படுகிறது.

இது குறித்து உயர் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் ஆர்.கண்ணன் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறப்பட்டிருப்பதாவது,

தமிழக பாலிடெக்னிக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பு முடித்து தேர்வு பெற்ற தகுதியான இலங்கை அகதி மாணவர்களை மற்ற மாணவர்களோடு அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் நேரடி 2 ஆம் ஆண்டிற்கானபொறியியல் பட்டப்படிப்பில் சேர்த்துக் கொள்ளலாமா என்பது குறித்தும் தமிழகத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பட்டப்படிப்பு முடித்து தேர்வு பெற்ற தகுதியான இலங்கை அகதி மாணவர்களை மற்ற மாணவர்களோடு சேர்த்துக் கொள்ளலாமா என்பது குறித்தும் அரசுக்கு தொழில் நுட்பக்கல்வி ஆணையாளர் கடிதம் எழுதியிருந்தார்.

அவரது கோரிக்கையை நன்கு பரிசீலனை செய்த அரசு2011, 2012 ஆம் கல்வியாண்டு முதல் இலங்கை அகதிகள் முகாம்களில் இருந்து பொறியியல் கல்லூரிகளில் நேரடி இரண்டாம் ஆண்டில் இணைய விரும்பும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட தலைமையிடத்து வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட ஆளறிச் சான்றிதழுடனும் அகதிகள் முகாம்களில் பதிவு செய்யப் பெறாதவர்கள் அவர்களுடைய விசா மற்றும் கடவுச்சீட்டுடன் விண்ணப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பொறியியல் கல்லூரிகளில் மற்ற மாணவர் சேர்க்கை முடிவுற்ற பின் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு முகாமிலும் பொதுப்பிரிவின் கீழ் வெற்றிடங்கள் ஏதும் இருந்தால் அதில் இலங்கை அகதி மாணவர்கள் சேர்க்க அனுமதி அளிக்கப்படுகிறது என அதில் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மாகாணசபை விவகாரங்களில் அரசு தேவையின்றி தலையிடுகின்றது

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபை விவகாரங்களில் மத்திய அரசாங்கம் தேவையின்றி தலையீடு செய்வதாக மத்திய மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் சஞ்சீவ கவிரட்ன தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தொடர்பிலான சில விடயங்களில் மத்திய அரசாங்கம் நேரடியாக தலையீடு செய்வதாக அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.

இதன் மூலம் 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக விதந்துரைக்கப்பட்டுள்ள சரத்துக்களை அரசாங்கம் மீறிச் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மகநகும, க்மநகும மற்றும் ஜாதிக சாலிய போன்ற திட்டங்களின் மூலம் மாகாண சபை விவகாரங்களில் அரசாங்கம் தலையீடு செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளில் மத்திய அரசாங்கம் 60 மாகாண பாடசாலைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# மசாஜ் நிலையத்தின் பெயரில் விபசாரவிடுதி நடத்திய ஐவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

மசாஜ் நிலையமென்ற பெயரில் விபசார நிலையமொன்றை நடத்தியதாகக் கூறப்படும் 5 பேரை ஜூன் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள இந்நிலையத்தின் முகாமையாளர் உட்பட 5 சந்தேக நபர்கள் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு கோட்டை நீதிவான் லக்னா ஜயரட்ன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

முதலாவது சந்தேக நபர் மேற்படி விபசாரநிலையத்தை நடத்தி வந்ததாகவும் பெண்கள் நால்வரும் விபசாரத்தில் ஈடுபட்டதாகவும் குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி சந்தேக நபர்கள் அனைவருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார். மேற்படி நிலையம் ஒரு மசாஜ் சிகிச்சை நிலையமே எனக் கூறிய அவர் பொலிஸார் கட்டுக்கதைகளை கூறுவதாக தெரிவித்தார்.

இந்நிலையில் சந்தேக நபர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கு நீதிவான் உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)




★ 1269-பிரான்சில் மஞ்சள் அடையாளம் இல்லாமல் பொதுவில் திரியும் அனைத்து யூதர்களும் தண்டம் செலுத்த வேண்டும் என ஒன்பதாம் லூயி மன்னன் கட்டளையிட்டான்.

★ 1867-மெக்சிகோவின் மன்னன் முதலாம் மாக்சிமிலியன் மரணதண்டனை விதிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டான்.

★ 1870-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அனைத்து தெற்கு மாநிலங்களும் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்ட பின்னர் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.

★ 1910-அமெரிக்காவில் வோஷிங்டனில் முதற்தடவையாக தந்தையர் தினம் கொண்டாடப்பட்டது.

★ 1912-ஐக்கிய அமெரிக்காவில் 8 மணிநேர வேலைத்திட்டம் அமுலாகியது.

★ 1943-டெக்சாசில் இனமோதல் இடம்பெற்றது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் பிலிப்பைன்ஸ் கடல் சமர் இடம்பெற்றது.

★ 1953-அமெரிக்காவின் அணுவாயுத இரகசியங்களை சோவியத் ஒன்றியத்துக்கு வழங்கிய தாகக் குற்றம் சாட்டப்பட்டு ஜூலியஸ் மற்றும் எத்தல் ரோசன் பேர்க் என்ற யூதத் தம்பதியருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

★ 1961-குவைத் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1987-ஸ்பெயினில் கடைத்தொகுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 21 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1623-இலாய்சி பாஸ்கல், பிரெஞ்சு அறிவியலாளர் (இ.1662)

★ 1903-வால்ரர் ஹமொண்ட், இங்கிலாந்துத் துடுப்பாட்டக்காரர் (இ.1965)

★ 1947-சல்மான் ருஷ்டி, இந்திய எழுத்தாளர்

★ 1970-ராகுல் காந்தி, இந்திய அரசியல்வாதி

★ 1978-டெர்க் நொவிட்ச்கி, ஜேர்மன் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★ 1867-முதலாம் மாக்சிமிலியன், மெக்சிக்கோ மன்னன் (பி.1832)

★ 1993-வில்லியம் கோல்டிங், நோபல் பரிசுபெற்ற பிரித்தானிய எழுத்தாளர்(பி.1911)

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

379.யுத்தத்தின் இறுதிக்கட்டங்களிலும் அதன் பின்னரும் தடுத்து வைக்கப்பட்ட பல்வேறு வகையினர் எந்த நீதியின் அடிப்படையில் அப்படித்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது பற்றிய பாரிய நிச்சயமற்ற நிலைமை நிலவுகிறது. விசாணையின்றிப் பாரிய எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்தோரை புறத்தொடர்பு அற்ற முகாம்களில் அடைத்து வைப்பதற்கான உரிய சட்ட அடிப்படை தெளிவற்றதாகவே உள்ள அதேவேளையில், சந்தேகிக்கப்பட்ட எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் மற்றும் ஏனையோர் தொடர்பாக அவசரகால ஒழுங்குவிதிகள், பி.ஏ. சட்டம் மற்றும் சாதாரண குற்றவியல் சட்டங்களை அரசாங்கம் எடுத்துக் காட்டுகிறது. இவ்விருவகையைச் சேர்ந்த தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் செயல்முறையில் மற்றும் தேவையான சட்டப்பிரதிநிதித்துவத்தையும் ஆட்கொணர் மனுவின் அதிகாரத்தைப் பிரயோகித்துப் பெறலாம் என்பதுவும் மிகக் கஷ்டமாகவே உள்ளது.

தடுப்புக்காவல்பற்றிய நீதிமன்ற மீளாய்வு "முறைசார்ந்த மனுவாக இருக்கவேண்டியதில்லை, ஆனால் தடுப்புக்காவலில் உள்ளவர் வழங்கும் கடிதம் ஒன்றின் மூலம் அச் செயற்பாடு மேற்கொள்ளப்படலாம்." என அரசாங்கத்தின் எழுத்து மூலமான பதில்கள் உறுதியாகக் கூறினாலும், அவ்வாறு நடைபெற்ற சந்தர்ப்பங்களை அது குறிப்பிடவில்லை. அத்தகைய உரிமை பற்றி சகல தடுத்து வைக்கப்பட்டவர்களும் அறியச்செய்வதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் பற்றி குழு அறிந்திருக்கவில்லை.



380."தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களுக்காக சட்டப்பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் சுலபமான வாய்ப்புண்டு மற்றும் சட்டத்தரணிகளை அமர்த்த முடியாதவர்களுக்கு அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படும் சட்டஉதவியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படுகிறது." என அரசாங்கத்தின் பதில்கள் மேலும் கூறுகின்றன. அத்தகைய சட்டஉதவி தடுத்து வைக்கப்பட்டுள்ள எல்லோருக்கும் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு மாத்திரம் கிடைக்கக்கூடியதா என்பது தெளிவற்றுள்ளதோடு "சுலபமாகக் கிடைக்கிறது" என்பது பல்வேறு தடுப்பு முகாம்களில் புறத்தொடர்பு இன்றித் தடுத்துவைத்திருப்பதுடன் ஒத்துப்போகாமல் உள்ளது.

"இராணுவத்தினர் மற்றும் காவல் துறைஅதிகாரிகளுக்கு எதிராக பல அடிப்படை உரிமைகள் மனுக்கள், ஆட்கொணர்வு மனுக்கள் மற்றும் அழைப்பாணைப் பத்திர மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன." என அரசாங்கம் உறுதியாகக் கூறிய போதிலும் மோதலுடன் தொடர்புபட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவர் சார்பிலேனும் வெற்றிகரமாக ஆட்கொணர்வு மனுவொன்று செயற்படுத்தப்பட்டது பற்றி அது அறிவிக்கவில்லை என்பதோடு அத்தகைய சம்பவமொன்றை குழுவினால் அறிந்து கொள்ளவும் முடியவில்லை.

381. தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் நீதிமன்ற வழக்காடலுக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்ட போதும், அவசரகால ஒழுங்கு விதிகள் அல்லது பி.ஏ. சட்டத்தின் கீழ் அகற்றப்பட்டுள்ள நீதிமன்ற மீளாய்வு மற்றும் அச்சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள கட்டாயமாகத்தடுத்து வைத்தல் காரணமாக ஆட்கொணர்வு மனுவொன்றை விசாரிக்கும் நீதிமன்றம் தடுத்து வைத்திருப்பதை பயனுறு விதத்தில் மீளாய்வு செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கும் என்பதையும் குழு குறிப்பிட வேண்டியுள்ளது.

382. இவ்வாறாக,அதற்குக் கிடைக்கக்கூடிய தகவலின் அடிப்படையில், தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் அது சட்டபூர்வமானதா என்பதை பரீட்சித்துப்பார்ப்பதற்கும் அவர்களைத் தடுத்து வைத்திருப்பதற்கான உண்மையான நியாயத்தை மதிப்பீடு செய்வதற்கான வினைத்திறன்கொண்டதொரு பரிகாரத்தை பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பில்லை எனக்குழு தீர்மானித்துள்ளது.

**உ) இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு**

383.1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தானாகவோ அல்லது புகார் ஒன்றை வைத்தோ அடிப்படை உரிமைகள் மீறல்கள் தொடர்பான விடயங்களை விசாரணை செய்வதற்கு விரிவான முறைசார்ந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

உண்மையைக்கண்டறிதல், தொடர்ந்து தோதான அதிகாரபீடங்களுக்குப் பரிந்துரைகளை வழங்குவது மற்றும் சமாதானப்பபடுத்தல் அத்துடன் மத்தியஸ்தம் செய்தல் ஆகியவை அதனால் வழங்கப்படக்கூடிய நிவாரணங்களாகும். நடைமுறை பற்றிய தோதான சட்டங்கள் வகுக்கப்படும்வரை பாரிய உரிமைகள் மீறல்கள் தொடர்பாக நேரடியாக நீதிமன்றங்களை அணுகவோ அத்தகைய விடயங்களை தோதான நீதிமன்றங்களுக்கு சாட்டவோ அதற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

384. இதன் விளைவாகக் கடந்த காலங்களில் காவல்துறையினால் மாத்திரமன்றி அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகளினாலும் அதன் பரிந்துரைகள் அனேகமாக அப்பட்டமான முறையில் உதாசீனப் படுத்தப்பட்டுள்ளன. இதற்கு முற்றிலும்வேறுபட்ட விதத்தில், ஏனைய நாடுகளில் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் இடைக்கால நீதிபற்றிய கேள்விகளை மேம்படுத்தும் விதத்தில் முக்கியமானதொரு பங்களிப்பை வழங்கியுள்ளன.

385. 2006,2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அரசியல் அமைப்புச் சபையின் அனுமதியின்றி அரசியல் அமைப்பின் தேவைப்படுத்தலைப் புறக்கணித்து ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை ஜனாதிபதி நியமித்த காரணத்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சட்டத்துடன் உடன்பாடான தன்மை இல்லாதிருந்தது. 2007ஆம் ஆண்டில், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கான தரங்களின் (பாஸ் கோட்பாடு) விசேட மீளாய்வு வினைத் தொடர்ந்து, தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் சர்வதேச ஒருங்கிணைப்புக்குழுவினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு "ஏ" நிலையில் இருந்து "பி" நிலைக்குத் தரம் தாழ்த்தப்பட்டது. 2006 ஜுலை மாதம் சுமார் 2000பேர் காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு கைவிட்டது, அது எடுத்துக்கொண்ட விடங்யங்களில் ஒன்றாகும் என ஐ.சி.சி.என். எச்.ஆர்.ஐ. குறிப்பிட்டது.

இலங்கையில் அவசரகால நிலைமை ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், தேசிய மனித உரிமைகள் நிறுவனம் ஒன்று "அதன் ஆணையை நிறைவேற்றும்போது மிக்ககூடிய விழிப்புடனும் சுயாதீனத்துடனும் செயற்படும்" என எதிர்பார்ப்பதாக அது தெரிவித்தது.

386. முன்னைய ஆணைக்குழு உறுப்பினர்களின் உத்தியோகக் காலம் முடிவடைந்ததும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 2009 ஏப்ரலில் புதிய உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிக்கவில்லை. அரசியல் அமைப்புக்கான 18வது திருத்தம், குறுகிய கலந்துரையாடலுக்குப்பின் ஆணையாளர்களை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கியதைத்தொடர்ந்து, 2011 பெப்ரவரி மாதம் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கான புதிய தலைவர் ஒருவரையும் மேலும் நான்கு ஆணையாளர்களையும் நியமித்தார்.

387. 2009 ஏப்ரலில் அது காலாவதியாவதற்கு முன்னர் யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் தொடர்பான மீறல்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் எதனையும் முன்னைய ஆணைக்குழு புலனாய்வு செய்ததா என்பதை குழு அறியவில்லை. உதாரணமாக குழு அறிந்தவரை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஓமந்தை அல்லது வேறு ஏதும் முகாம்களில் அல்லது ஏனைய தடுப்புக்காவல் நிலையங்களில் பிரசன்னமாயிருக்கவில்லை. அயினும் கொள்கையளவில் யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின்போதான மீறல்கள்தெடர்பில் தானாகவோ அல்லது புகார் ஒன்றினைத் தொடர்ந்தோ ஆராய்வதற்கான ஆணையை இலங்கை மனித உரிமைகள்



ஆணைக்குழு கொண்டிருக்கும். புதிதாக அமைக்கப்பட்ட ஆணைக் குழு அவ்வாறு செய்யுமா என்பதோடு, அது அப்படிச்செய்தால் அதன் முன்னைய வரலாறு மற்றும் அனுபவத்தை வைத்து அது சுயாதீனம் மற்றும் வினைத்திறன் தொடர்பில் சர்வதேச தரங்களை திருப்திப்படுத்துகிறது என்பதாகுமா என்பதைக் காத்திருந்தே பார்க்கவேண்டும்.

388. குழுவுக்கு வழங்கப்பட்ட "எல்.எல்.ஆர்.சி.யின் இடைக்கால பரிந்துரைகளின் அமுலாக்கம் பற்றிய முன்னேற்ற அறிக்கையில்" அரசாங்கம் பின்வருமாறு வாதிடுகிறது: காணாமற்போனவர்கள் தொடர்பாக எல்.எல்.ஆர்.சி. சேகரித்த சாட்சியங்கள் தொடர்பாக, காணாமற்போனதாகக் குற்றம் சாட்டப்பட்ட அனேக மானவர்கள் கடைசியாக எல்.ரி.ரி.ஈ.அணிகளுடன் இருப்பதாகக் காணப்பட்டனர். எனவே ஒன்றில் அவர்கள் எல்.ரி.ரி.ஈ. போராளிகள் என யுத்தகளத்தில் கொல்லப்பட்டிருப்பார்கள் அல்லது பாதுகாப்புப் படையினரிடம் சரணடைய முயற்சி எடுக்கும்போது எல்.ரி.ரி.ஈ.இனால் சுடப்பட்டிருப்பார்கள்.

389. இவ்வறிக்கை எவ்விதத்திலும் மேலும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதோடு காணாமற்போனவர்களில் சிலருக்கு, தான் பொறுப்பாக இருக்கக்கூடும் என்ற சாத்தியக்கூற்றினை மறுப்பதாகவும் அது தென்படுகிறது. "காணாமற்போனவர்கள் தொடர்பான விடயங்

**தமிழாக்கம் தொடர் 48**

களை தீர்ப்பதை நோக்காகக்கொண்ட கருத்திட்டமொன்றின் ஒன்றிணைந்த பகுதியாக" ஆட்களின், சொத்துக்களின் மற்றும் கைத்தொழில்களின் புனருத்தாபன அதிகாரசபையின் தரவுத்திரட்டொன்றை இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் பேணுவதாக அரசாங்கம் ஊர்ஜிதப் படுத்தியுள்ளது.

(தொடரும்)

# குருத்துவ வெள்ளி

## யாழ் ஆயரின் செய்தி



அருட்தந்தை ரூபன்மரியாம்பிள்ளை அவர்கள் பாதுகாவலன் பத்திரிகை மூலமும் ஊடகத்துறை சம்பந்தமான நூல்களின் மூலமும் யாழ். தமிழ் பத்திரிகைகள் மூலம் அனைவருக்கும் அறிமுகமான ஒருவர். சில்லாலையை தமது பிறப்பிடமாகக் கொண்டு 1986 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு பல பங்கு தளங்களிலும் சிறப்பாக பணியாற்றி இருக்கின்றார்.

தமது குருத்துவ படிப்புக்களுக்கு அப்பால் இளங்கலைமாணிப் பட்டத்தையும் பெற்று யாழ். சமூக தொடர்பு ஆணைக்குழுவின் இயக்குநராக பணியாற்றியுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளராக, விரிவுரையாளராக பணியாற்றி அனுபவம் பெற்றுள்ளார்.

கடந்த யுத்தத்தில் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தை புனருத்தாரணம் செய்து பல சிரமங்கள் மத்தியில் காவலன் பத்திரிகையை அச்சிட்டார். அதனைச் சிறப்பாக பிரசுரித்தும் அதன் பிரதிகளை அதிகரிப்பதிலும் வெகு விமரிசையோடு ஈடுபட்டு உழைத்தார்.

யாழ்.மறைமாவட்டத்தின் செய்திகளை இலத்திரனியல் ஊடகங்களுக்கு நேரகாலத்துடன் பகிர்ந்து அவற்றை வெளிக் கொணரச் செய்தார். ஊடக வளங்களை பற்றிய அறிவை வளர்க்க 8 நூல்களை இயற்றி ஊடகத்துறைக்கு அரும் சேவையாற்றியுள்ளார். தோற்றத்தில் சிறியவரானாலும் பல்கலை பாண்டித்தியம் பெற்று நிர்வாகத்துறையிலும் எழுத்துப் பணியிலும் ஆர்வத்துடன் உழைப்பவர். அனைவருடனும் இலகுவாக பழகி கத்தோலிக்க மக்கள் மாத்திரம் இன்றி இதர மக்கள் மத்தியிலும் புகழ் சேர்த்தவர்.

பத்திரிகைத்துறைகளில் புதுமைகள் சேர்த்து சிறப்பாக கத்தோலிக்கர்கள் ஊடகத் துறையில் அதிகம் பங்குபற்றி உழைக்க வேண்டும் என்ற அவாக் கொண்டவர். அதற்காக செயல்முறை பயிற்சிகள் பல நடத்தியவர்.

தற்போது இங்கிலாந்தில் யாழ். பல்கலைக்கழக புலமைப்பரிசில்-பெற்று கலாநிதி படிப்பை நிறைவு செய்து கொண்டிருக்கிறார். தனது குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடும் தருணத்தில் இவரின் பல்வேறு பணிகள் இன்னும் சிறக்க இறை அரசை கட்டி எழுப்பும் பணியில் சிறப்புடன் பணியாற்ற இறை அருளை ஆசிக்கின்றோம்.

*மேதகு இ.தோமஸ் சௌந்தரநாயகம், யாழ். ஆயர்.*

## செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை



இறைபணிக்காக பிறப்பவர்கள் பாக்கியசாலிகள். இவர்களிடம் பொறுமை, கருணை, மன்னிக்கும் மனப்பாங்கு போன்ற நற்குணங்கள் அணி செய்வது இயல்பு. ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் வாழ்வு தவ வாழ்வு. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக துறவு வாழ்வில் சிறப்புற்று பெருமை பெற்றவர். அறிவுலகிலும் தடம் பதித்து அரிய பல நூல்களை வெளியிட்டவர். பத்திரிகைத் துறையிலும் பட்டம் பெற்றுத் தன் ஆற்றலை, ஆளுமையை வெளிப்படுத்திய பெருந்தகை. அன்பினால் அனைவரையும் தன் வசப்படுத்தும் பண்பாளர். உறக்கமின்றி; ஓய்வின்றி தன் கடன் பணி செய்யும் சேவையாளர். சீரிய வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் இப் பெருந்தகை மேலும் பல சிறப்புக்களைப் பெற்று பல்லாண்டு! பல்லாண்டு!! வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தினைச் சமர்ப்பித்து அமைகிறேன்.

*செஞ்சொற்செல்வன் ஆறுதிருமுருகன்*

## தமிழில் ஊடகக் கல்வியை வளர்த்தவர்



அருட்திரு ரூபன்மரியாம்பிள்ளை குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு அடைவதையிட்டு எடுக்கப்படும் விழா தொடர்பாக வெளியிட இருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை இறைபணி, சமூகப் பணி, கல்விப் பணிகள் மூலம் தமிழ் மக்களிடையே மிகுந்த நன்மதிப்பைப் பெற்றவர். கடந்த 30 வருட யுத்த காலத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகளின்போது இவர் மக்களுடன் கூட நின்று அவர்களின் துன்ப துயரங்களைத் தணிக்க, தீர்க்க தன்னாலான பணிகளைச் செய்தவர். இவரது தன்னலமற்ற சேவை தமிழ் மக்கள் என்றும் நினைவு கூருகின்றனர். இவர் இறை, சமூகப் பணிகளுக்கு அப்பால் சிறந்த கல்விப் பணியைச் செய்து வருகின்றார். ஊடகத்துறையின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் பணி மிகவும் சிறப்புமிக்கது. யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் பாட இணைப்பாளராக இருந்தும் இன்று பிசப் சௌந்தரம் மீடியா சென்ரர் இயக்குநராக இருந்து ஊடக கல்வி வளர்ச்சிக்கு பெரும் பணி செய்து வருகின்றார். ஊடகத்துறையில் நூல்கள், கட்டுரைகள் எழுதியும் ஆய்வுக்ளிலும் ஈடுபட்டுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகமும் சுவீடன் நாட்டு போயோ நிறுவனமும் இணைந்து இவரது கலாநிதி பட்டப்படிப்புக்குப் புலமைப்பரிசில் வழங்கின. இதன் மூலம் இவர் இங்கிலாந்தில் செபிலட் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப் படிப்பை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சியில், கல்வி நிர்வாகத்தில், முகாமைத்துவத்தில் சிறப்புற்று விளங்குகின்றார். தமிழில் ஊடகக் கல்வியை வளர்த்தலும் தமிழ் ஊடகங்களின் தரத்தை உயர்த்துவதும் தமிழ் மக்களின் ஊடக அறிவை, தெரிவை மேம்படுத்துவதற்கு தனது பேச்சாலும் எழுத்தாலும் செயற்பாடுகளாலும் கடினமாக உழைத்து வருகின்றார். யாழ்ப்பாணத்தில் பிசப் சௌந்தரம் மீடியா சென்ரரை பெரிய கல்வி நிறுவனமாக வளர்த்து எடுக்க வேண்டுமென்பது இவரது இன்னொரு இலட்சியமாகும். தமிழ் ஊடகத்துறைகளில் இவர் காணும் பல்வேறு மேம்பாடுகள், இவரது பணிகள் மூலம் குறுகிய காலத்துக்குள் அடையப்படும் என நம்பிக்கை மக்களிடத்தில் இருக்கின்றது. அருட்தந்தை வரும் காலங்களில் மேலும் மேலும் சிறப்பான இறைபணி, சமூகப் பணி, இளைஞர்களை வழிநடத்தல் பணிகளை கல்விப் பணியுடன் சிறப்புறச் செய்ய இறைவனை வேண்டுகின்றேன்.

இவரது சேவை மேலும் மேலும் வளர்க,சிறக்க.

*பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph.D. Durham*
*முன்னாள் துணைவேந்தர் - வாழ்நாள் பேராசிரியா*

## எதிர்கால வாழ்வு வளம் பெற பல வழிகளிலும் உதவியாக இருக்கிறார்



பாதர் அவர்கள் சுண்டுக்குளி யுவானியார் ஆலய பங்குத்தந்தையாக இருந்த காலப்பகுதியில் அவருடன் அறிமுகமாகிய நான் அவருடன் இருந்து அவர்தம் குடும்பத்தவரில் ஒருவனாகி இன்ப துன்பங்களில் பங்கெடுக்க வாய்ப்பு கிடைத்ததனை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அன்று முதல் எனது வாழ்க்கைக்கான பல அனுபவங்களை பெற்றதுடன் எனது எதிர்கால வாழ்வு வளம் பெற பாதர் பல வழிகளிலும் உதவியாக இருந்து வருகிறார். இன்று தனது 25ஆவது குருத்துவ வெள்ளிவிழாவை நிறைவு செய்யும் பாதர் அவர்களுக்கு என் வாழ்த்துக்களையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*எஸ்.ஸ்ரனிஸ்லோஸ் ஞானராஜ்*



**Revd.Fr. Justin B. Gnanapragasam**
**Bth (Pune) MA. (Hull) PhD.Ed. (Southampton)**
**VICAR GENERAL**

I am very pleased to send this message of felicitation to Fr.Ruban Mariampillai, who is celebrating his Sacerdotal Silver Jubilee. Twenty five years of dedicated service to the people of God, and that too during the worst period in the history of Tamils, is indeed great and praiseworthy. My hearty congratulations to Fr. Ruban and I pray that he will be given enough strength to continue the good work for many years for the greater golry of God.

I have known Fr. Ruban and his family for some thirty years and have watched his steady progress in the priestly ministry and in the field of Media and Communication. He comes from Sillalai which is known for piety and devotion. As a young seminarian preparing for priesthood he spent some time with me at Mareesankoodal and I was able to watch his ability to write very well in Tamil and also preach very good sermons, though he was a bit shy at the beginning. Fr. Ruban, while serving at Karamopn Parish had to flee from there along with the people and seek refuge in Jaffna. He was the first priest who had the misfortune to be displaced due to military operations in the Islands in 1991. Fr. Ruban did not get discouraged but continued his pastoral work and, in the meantime, continued his studies and obtained his BA and MA as well. As Manager of the Catolic Press, Jaffna, he dared to put up a building with great difficulty in order to give better facilities to the Press. As war broke out once again, he could not realize his dreams but the building that he put up stands as a monument to his untiring efforts and foresight. He also took up lecturing at the Media Resource Training Centre of the University of Jaffna. He was involved in organizing the lectures and also in the formulation of syllabi for the degree programme. As Founder and Director of Bishop Sevundram Media Centre he has resumed training young journalist. He received a scholarship from Jaffna University to do his doctoral studies in the UK. and will be completing it very shortly and join the staff of the University of Jaffna.

I take this opportunity to wish Fr. Ruban 'Ad multos annos' and pray for the blessings of God Almighty. ***'Those who wait for the Lord shall renew their strength. Thay shall mount up with wings like eagles. They shall run and not be weary. They shall walk and not faint'. Is . 40.31***

**Revd.Fr. Justin B Gnanapragasam Vicar General- Jaffna Diocese**

## நீண்ட காலமாக ஓர் ஊடகவியலாளராக பணியாற்றியவர்



அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் மிகச் சிறந்த ஓர் ஊடகவியலாளர். ஊடகவியலிலே உயர் பட்டங்களும் நலல பட்டறிவும் வாய்க்கப் பெற்றவர் அடிகளார். அவர் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஊடகவியல் பட்டதாரியாவார். முதுமாணிப் பட்டத்தினை அவர் பெற்றுள்ளார். அந்த வேளையிலேயேதான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் பயிற்சி இணைப்பாளராக இணைந்து கொண்டார். அவ்வேளை அந்நிறுவனத்தின் இயக்குநராகப் பணிசெய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுதுதான் அடிகளாரைப்பற்றி நான் நன்கு அறிந்து கொள்ளமுடிந்தது.

யாழ்ப்பாண மறை மாவட்ட கத்தோலிக்க குருவானவர் அருட்திரு ரூபன்மரியாம்பிள்ளை அடிகளார். குருவுக்குரிய சாந்தமும் அமைதியும் அருட்பார்வையும் அவரிடம் எப்போதும் காணப்படுவன. ஆனால், அடிகளார் நீண்டகாலமாக ஓர் ஊடகவியலாளராகவும் பணியாற்றி வந்துள்ளார். இதற்கு துறவியின் நெஞ்சுரமும் புறநின்று நோக்கத்தக்க பயிற்சியும் அவருக்கு நன்கு உதவின. ஊடகவியல் ஒரு புதிய கற்கை நெறியாகப் பல்கலைக்கழகங்களிலே தற்போது தொடங்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியிலே இதனைக் கற்கவும் கற்பிக்கவும் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் மிகுந்த தொலைநோக்கிலே பல ஆண்டுகளுக்கு முன்னிருந்தே நூல்களை எழுதி வெளியீட்டுள்ளார். இத்துறை சார்ந்த பெருந்தொகையான நூல்கள் ஆங்கில மொழியிலே இருக்கின்றன. ஆனால் தமிழ் மொழியிலே கற்கும் எம்முடைய மாணவர்களுக்கு அடிகளாருடைய நூல்கள் மிகுந்த பயனுடையனவாக அமைவன. அவருடைய எளிமையான ஆனால், நிபுணத்துவம் வாய்ந்த தமிழ் நடை படிப்பவர்க்குத் துணைசெய்யும். தொடக்கத்திலே பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம். பத்திரிகை இயல் அடிப்படைகள். ஊடக இயல் கலைச்சொல் அகராதி என இதழியல் தொடர்பான பொதுவான நூல்களை எழுதலானார். மின்னியக்கப் பத்திரிகையில் ஓர் அறிமுகம், ஊடக நேர்காணல்கள் ஓர் அறிமுகம், செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம், சித்திரிப்பு எழுத்துக்கள் ஓர் அறிமுகம் அச்சு ஊடக அறிக்கையிடல் போன்றவை துறைசார் நூல்களாகும்.

யாழ்ப்பாண மாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களிலே அவர் கொண்டிருந்த விசுவாசத்தினையும் பக்தியினையும் நான் நன்கு உணர்ந்து கொண்டேன். தந்தையை நாடி நிற்கும் தனயனைப் போல அவர் பணிவன்புடன் ஆயருடைய அருட்செயல்கள் பற்றிக் கூறுவார். எனக்கும் அடிகளாருக்குமுள்ள நட்பினை நன்கறிந்த ஆயர் அவர்களும் என்னைக் காணும்போதெல்லாம் ரூபன் அடிகளார் பற்றி ஏதாவது செய்தி சொல்வார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் வீரசிங்கம் மண்டபத்திலே என்னைக் கண்ட ஆயர் அவர்கள் 'ரூபன் லண்டனிலிருந்து வந்துவிட்டார்' என்ற செய்தியினைச் சொன்னார். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஊடகவியலிலே கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக ஐக்கிய இராச்சியத்துக்கு அடிகளார் சென்றதால் அவரை நான் நீண்ட நாட்களாகக் காணவில்லை என்பதை நன்கு உணர்ந்தே ஆயர் அவர்கள் அந்தச் செய்தியை எனக்குக் கூறினார். எல்லாவற்றுக்கும் மேலாக ரூபன் அடிகளார் நிறுவி நடத்தும் பிசப் சௌந்தரம் பத்திரிகை இயல் நிலையம் அவருக்கு ஆயர் மேலிருந்த அன்பினையும் பக்தியினையும் நன்கு வெளிப்படுத்துவதாயுள்ளது.

ஊடகவியலிலே அடிகளார் பெற்றிருக்கும் படிப்பறிவினையும் பட்டறிவினையும் உயர்கல்வி நிறுவனங்கள் பயன்படுத்தவேண்டும். இவர் இத்துறையிலே பல கருத்தரங்குகளையும் பணியவைகளையும் நடத்தியுள்ளார். அடிகளாருக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்வடைகிறேன்.

*பேராசிரியர் அ. சண்முகதாஸ் Ph.D (Edinburgh), D.Litt (Hon UJ)*
*தகைசார் வாழ்நாள் பேராசிரியர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*



1986

## அருள்திரு ரூபன்

| | |
|---|---|
| 1986 | குருத்துவ திருநி |
| 1986 - 1987 | உதவிப் பங்குத் |
| 1987 - 1988 | பங்குத்தந்தை ம |
| 1988 - 1991 | பங்குத்தந்தை க |
| 1991 - 1992 | உயர்கல்வி B.A |
| 1992 - 1993 | பங்குத்தந்தை அ |
| 1993 - 1997 | நிதியாளர் - இய<br>கொழும்புத்துறை<br>(கிளி - யாழ்ப்பா |
| 1997 - 1999 | யாழ் சுண்டிக்குழி |
| 1997 - 2007 | அதிபர் - கத்தோ<br>ஆசிரியர் பாதுகா<br>இயக்குநர் சமூக |
| 2005 - 2008 | இணைப்பாளர், [illegible]<br>பயிற்சி [illegible]லைய |
| 2008 - 2010 | யாழ். பல்கலைக்<br>இங்கிலாந்தில் உ |
| 2011 | இயக்குநர் - பிசப்<br>விரிவுரையாளர் -<br>நிலையம், யாழ். |

## ஊடகக் கற்கை நெறிக்கு புல

அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை
வாழ்வின் வெள்ளிவிழாக் கொண்டாடுவ
மகிழ்ச்சி அடைகிறேன்.
வெண்ணிற அங்கிக்குள் விவிலியம்
ருப்பதைக் கண்டும் கேட்டும் அறிந்தும்
நான் விரும்புகின்ற, நேசிக்கின்ற, பழகு
சந்திரகாந்தன் அடிகளார், அருட்கல
அடிகளார், அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞான
பேராசிரியர் வண.பிலேந்திரன் முத
வரிசையிலே இளையராஜாவாக என்
அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிக
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கரு
லான பண்புகள் நிரம்பப் பெ[illegible] அடிக
யாம்பிள்ளை அடிகளார் திகழுகின்றார்.
ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் என்
நேற்றுப்போல் என் நெஞ்சில் நிழல
இலக்கணத்திலே மிகுந்த ஈடுபாட்டோடு
தவழ அவர் வகுப்பிலே இருந்த நாட்கள
நிறைகின்றது.
ஆர்வமும் அமைதியும் தேடலும் அவ
அவரோடு பழகுகின்ற, உறவாடுகின்
உறவைக்கடந்து ஒருவித பக்திப் பய உ
ஊடகவளங்கள் கற்கை நெறியில்
நெருக்கமாக அவருடன் பழகினேன்.
ஊடகக் கற்கை நெறிக்கு உகந்த
தந்திருக்கிறார். இன்னும் தரவேண்டும்
தமிழின் - தமிழ்ப் பண்பாட்டின் அ
தனிநாயகம் அடிகளாரின் அடிச்சுவட்டை
ரூபன்மரியாம்பிள்ளை அடிகளார் தொடர
வாழ்த்துகிறேன்.

## குருத்துவப் பணியுடன் உ

குருத்துவப் பணியில் இருபத்தைந்து அ




மரியாம்பிள்ளை அடிக
அகம் மகிழ்கின்றேன்.
சிறந்த ஒரு ஆனமீ
ஒரு கல்வியாளராக
கற்பித்தலில் அடிகளா
மாணவர்களுக்கு அது
ஊடகத்துறையில் ஆ
சார்ந்த தனது தகை
அண்மையில் [illegible]ரித்தா
கலாநிதிப் பட்டத்தையும் மேற்கொ
ஊடகவியல் சார்ந்து வெளிவருகின்ற
இக்குறையைப் போக்கும் வகையில் அ
அயராத உழைப்பின் வெளிப்பாடுகளா
நூல்களைப் பல்கலைக்கழக மாணவ
ஆர்வலர்களும் மிகவும் விரும்பிப் பட
அடிகளாருக்கு எல்லா நலன்களையும்
பிரார்த்திக்கிறேன்.

*தமிழ்த்துறை கலை*

# ...ிவிழா வாழ்த்து மலர்


...* - 2011



## ...ன் மரியாம்பிள்ளை

ருநிலைப்படுத்தல்
த்தந்தை யாழ்.மரியன்னை பேராலயம்
5 மண்டைதீவு
5 கரம்பொன்
B.A - BTh (மாட்டினார் குருமடம்)
5 அரியாலை
இயக்குநர் - ஆரம்ப மெய்யியல் பிரிவு
றை சவேரியார் குருத்துவக் கல்லூரி
ப்பாணம்)
குழி புனித யுவானியார் ஆலயம்
தோலிக்க அச்சகம்.
துகாவலன்
முகத் தொடர்புகள் ஆணைக்குழு
, விரிவுரையாளர் ஊடக வளங்கள்
லயம ... பல்கலைக்கழகம்
லைக்கழக புலமை பரிசிலுடன்
உயர் கல்வி
ப் சௌந்தரம் மீடியா சென்ரர் யாழ்ப்பாணம்
ர் - ஊடக வளங்கள் பயிற்சி
ாழ். பல்கலைக்கழகம்.

## ... ஆய்வு நூல்களை அவர் தந்தவர்



...ா அடிகளார் குருத்துவ ...டுவதை அறிந்து மட்டற்ற ...

...யம் வாழ்ந்து கொண்டி ...ம் அனுபவித்தவன் நான். ...ழகுகின்ற அருட்கலாநிதி ...கலாநிதி மரியசேவியர் ...ஞானப்பிரகாசம் அடிகளார், ...முதலான பேரறிஞர்கள் ...ன்னுட் கலந்திருப்பவர் ...அடிகளார் ஆவார்.

...கருணை, கடவுள் பக்தி, விடாமுயற்சி முத ...டிகளா... ...ரிசையின் வாரிசாக ரூபன் மரி ...ார்.

... என்னிடம் தமிழ் படித்தவர். அவர் படித்தது ...ழலாடுகின்றது. தமிழ் இலக்கியத்திலே ...ாடு இன்முகம் காட்டிப் புனித புன்னகை ...களை நினைத்துப் பார்க்கின்றேன். நெஞ்சம் ...

...அவரிடம் ஒருங்கே குடியிருக்கும். ...கின்ற போதெல்லாம் ஆசிரிய, மாணவ ... உணர்வு என்னிடம் தலைகாட்டுவதுண்டு. ...ில் அவர் பணியாற்றுகின்றபோது மிக ...

...ந்ததான பல ஆய்வு நூல்களை அவர் ...ம் என ஆசைப்படுகிறேன். ...அடையாளத்தைத் தரணியெங்கும் நிறுவிய ...டை எமது அன்புக்குரிய மாணவர் அருட்திரு ...டர வேண்டுமென்று ஆண்டவனை வேண்டி ...

*பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா*
*தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம.*

## ... ஊடகத் துறைப் பணியும்

... ஆண்டுகளை நிறைவு செய்துள்ள ரூபன் ...களாரை வாழ்த்தி வணங்குவதில் பெரிதும் ...ன்.

...ன்மீக வழிகாட்டியாக மட்டுமன்றிச் சிறந்த ...கவும் அடிகளாரை நான் நன்கறிவேன். ...ளாருக்கென்று ஒரு தனித்தன்மை உள்ளது. ...து மிகவும் உவப்பானது.

... ஆர்வம் கொண்டுள்ள அடிகளார், இத்துறை ...கமைகளைப் பெருக்கிக் கொண்டுள்ளார். ...ந்தானியாவுக்குச் சென்று இத்துறையில் ...ண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ... நூல்கள் தமிழில் மிகக் குறைவாகும். ...அடிகளார் கணிசமான நூல்களைத் தனது ...ாகத் தமிழில் தந்துள்ளார். அடிகளாரது ...வர்கள் முதற்கொண்டு இத்துறைசார்ந்த ...படிக்கின்றனர். எல்லாம்வல்ல ஆண்டவர் ...ம் வளங்களையும் வழங்கவேண்டுமெனப் ...

*பேராசிரியர் கி. விசாகரூபன்,*
*...லைப்பீடம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.*

## சேவை ஒன்றே தேவை எனும் அருட்தந்தை



அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் மிகுந்த புலமையும் பொறுமையும் வாய்ந்தவர். முன்னர் அவரு டன ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் பணி யாற்றியபோது அருட்தந்தையின் சேவை மனப்பான் மையையும் எல்லோரையும் சரிசமமாக நடத்தும் அவரின் நல்ல உள்ளத்தையும் உணர்ந்து கொள்ள முடிந்தது. எந்நேரமும் புன்முறுவ்லுடனும் பிறருடன் கலகலப்பாகப் பழகும் அவரின் இனிய குணம் பலரும் அறிந்த ஓர் விடயமே. உண்மையில் இறைசேவையே தன் சேவை என்பதை பரிபூரணமாக உணர்ந்து தன் பணியில் ஒழுங்கு நெறியுடன் ஈடுபட்டு வரும் இவரைப் போன்றவர்கள் மண்ணில் கிடைப்பது மிக அரிது. அருட்தந்தையின் சேவை ஆரம்பித்த இந்த இருபத்தைந்தாவது ஆண்டில் இன்னும் பல காலம் நமது யாழ். சமூக மக்களுக்கு அவரின் பணி பரவவேண்டும் என வேண்டுகிறேன். கடவுள் கிருபையால் எல்லா நலன்களும் கிடைக்கப்பெற்று நீண்டகாலம் அருட்தந்தையின் சேவை இவ்வுலகிற்கு கிடைக்க மனதாரப் பிரார்த்திக்கிறேன்.

*கிருத்திகா தருமராஜா, உதவி விரிவுரையாளர்,*
*ஊடகக் கற்கை, யாழ். பல்கலைக்கழகம்.*

## Loved by all the teachers and students

It is indeed a great pleasure for me to write a few lines about my past student FR.Ruban Mariampillai.

First of all I think the almighty for having blessed him with the great priestly vocation and enabled him to priest hood. During the tenure of these twenty five years, he has worked tirelessly to fulfill his priestly obligations.

I remember the days when he was my student at Sillalai R.C.School. He was a very passive, studious and obedient student and loved by all the teachers and students.

I pray to god to grant him good health and strength to contin to serve in his vineyard and to win many more souls for him.

My family members and I congratulate him on this great occasion and wish him all the best. ,

***Mrs. Ranjini Saminather***

## விளம்பரம் வேண்டாதவர், அமைதியாக இருந்து பணிபுரிபவர்



"ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்"
"நுண்மான் நுழைபுலமுடையோர்"
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்"
"நடமாடும் பல்கலைக்கழகம்"

என்றெல்லாம் கூறக்கூடிய ஒருவர் இன்று எம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கிறார். சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்து காட்டி வரும் பெரியவர் பலரையும் பண்பாக உபசரிக்கத் தெரிந்த இவர் தற்பெருமையே இல்லாதவர், கல்விமானாகவும் சமூக சீர்திருத்தவாதியுமாவார். எழுத்துலகில் அந்தரங்க சுத்தியுடன் ஈடுபட்டுள்ள அற்புதமான இறை பணியாளர் ஒரு சிறு புள்ளியிலிருந்து ஆரம்பமாகிய இவரது வாழ்வின் பாதச்சுவடுகள் பரந்து விரிந்து ஓர் உலகை நோக்கிப் பெயர்ந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. தனி மனித தொடர்பு வழியாகவும் பதவி வழியாகவும் அவர் ஆற்றிவரும் ஒப்பற்ற பணிகள் மதிக்கப்படவேண்டியவை. மதிப்பீடு செய்யவேண்டியவை. அவரிடமிருந்தும் மிகச் சிறந்த குண அடக்கம், விளம்பரம் வேண்டாதவா, அமைதியாக இருந்து பணிபுரிய விரும்புபவர், எப்போதும் மனம் திறந்து இனிமையுடன் உரையாடுபவர், துணிச்சல் மிக்கவா, எதையுமே புதுமையாக செய்ய வேண்டும் என்ற வெறி உடையவர். இதை இலக்கிய உலகம் நன்கறியும். இறைவாழ்வில் வெள்ளிவிழாக் காண்பதில் மகிழ்வெய்தி நிற்கின்றேன்.

*கி.கிருபானந்தா, செயலாளர், யாழ். இலக்கிய வட்டம்.*

## *இவரது சேவைத்தளம் ஆழமும் அர்த்தமும் கொண்டு பரந்து விரிந்தது*



குருத்துவ வெள்ளிவிழாக் காணும் பேரன்பிற்கும் பெருமதிப் பிற்கும் வணக்கத்திற்குமுரிய அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் ஞானமேன்மை வார்த்தைகளால் வரித்துவிட முடியாத தனித்துவம் கொண்டதாகும். ஆன்மீக மற்றும் அறிவியல் தளத்தில் நின்று இறைபணி சமூகபணி தமிழ்ப்பணி அறிவுப்பணியென எத்தனையோ சேவைத்தளம் பொறுப்புணர்வு கடமையாற்றிய அவரது சேவைத்தளம் ஆழமும் அர்த்தமும் கொண்டு பரந்து விரிந்தது என்றால் மிகையில்லை.


1986இல் குருத்துவ நிலைப்படுத்தலில் ஆரம்பித்து வெள்ளிவிழாக் காணும் இத்தருணம் வளர ஓய்வற்ற சிந்தனை, உறுதியான உழைப்பு, இடையறாத செயற்பாடு என அவர் பன்முகத் தளத்தில் இயங்கியமையே அவரின் தனித்துவ மேன்மைக்கு ஆதாரமாகும்.

ஊடக வளமே உலகின் பலமாகி நிற்கும் இன்றைய காலகட்டத்தில் அத்துறை யின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் துறைசார் அறிவால் அவர் ஆற்றிவரும் பணி கள் நாடு போற்றும் பெருமைக்குரியது. குறிப்பாக தமிழ் ஊடகத் துறை அவரால் வளம் பெற்று வருகின்றமையை அனைவரும் அறிவர்.

அவர் சாதிக்கப்பிறந்தவர், சாதிக்கத்துணிந்தவர். எனவே இனிமேலும் அதிகம் சாதிப்பவராக விளங்குவார். அவரால் தமிழும், மனிதமும் வளம் பெற வேண்டும். அருளும் திருவும் அவரது ஆன்மாவுள் நிறைந்தே உள்ளது அமைதியாக அவர் ஆற்றிவரும் பெருமை மிகு பணிகள் அனைத்தும் இறை ஆசியுடன் உயர்வுகாண பிரார்த்திக்கிறேன்.

*என்றும் வணக்கத்துடன் எம்.நியூட்டன், ஊடகவியலாளர் வீரகேசரி*

## வாழ்த்து மலர் ஆசிரியரின் உள்ளத்திலிருந்து



அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் குருத்துவ பணி வாழ்வு புனித மரியன்னை பேராலயத்தில் ஆரம்பமானது முதல் கடந்த 25 ஆண்டுகளாக அவரோடு இந்தும் பின்னர் அவரோடு அன்பாகப் பழகி அவரின் வழிகாட்டலில் வளர்ந்த அனுபவத்தில் இந்த வாழ்த்து மலரை வெளியிட வேண்டும் என விரும்பி அதனை நிறைவு செய்திருப்பது மனநிறைவைத் தருகிறது. எனக்கு அவர் சிறந்த ஆலோசகராகவும் வழிநடத்துநராகவும் விளங்கிவரும் அவரின் பணி சிறக்க வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

*பி.றெஜிஸ் நியூட்டன், ஆசிரியர், மூன்றாம் பிட்டி, மன்னார்.*

## ஊடகத்துறைக்கு காத்திரமான பங்களிப்பு

நவீன வளர்ச்சியை உள்வாங்கி எமது இளம் சந்ததியினர் ஊடகத்துறையில் வளர்ச்சி காண்பதற்கு தமிழில் நூல்கள் மிகவும் வேண்டப்படுகின்றன.

இந்தப் பெரும் பணியைச் செய்வதில் யாழ். குடாநாட்டில் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை குறிப்பிட்டுக் கூறத்தக்கவர். விளையும் பயிரை முளையில் தெரியும் என்ற முதுமொழிக்கு ஏற்ப அவர் தமது பாடசாலை பருவத்திலும் குருத்துவ மாணவர் பருவத்திலும் சிறுகதைகள் , கவிதைகள் , சமயக்கட்டுரைகள் என்று நிறையவே தரமான ஆக்கங்களைப் படைத்தவர். உதயன் சஞ்ஜீவி பத்திரிகைகளில் பல வகை சார்ந்த அவரது தரமான படைப்புக்கள் 1986 தொடக்கம் வெளியாகிவருகின்றன. எழுத்தில் அவர் கொண்ட பிடிமானம் அவரை அத்துறையில் பல படிகளுக்கு உயரவைத்துள்ளது.

இன்று அவர் ஊடகத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்று பெரும் கல்விமானாக உயர்ந்து நிற்பதைக் காணும்போது நெஞ்சம் குளிர்கிறது. எழுத்தாளராக இருந்தவர் ஊடகத்துறையில் நெடிது உயர்ந்து நிற்பதால் அவரது பெற்றோருக்கு உண்டா கக்கூடிய புளகாங்கிதமும் பூரிப்பும் எனக்கும் உண்டாகின்றன. எவருடனும் இனிமையாக பழகி எல்லோரையும் நண்பர்களாக்கிவிடும் நற்பண்பு அவரை உயர்த்தியுள்ளது எனலாம்.

தனியே ஊடகத்துறை ஆசானாக மட்டுமன்றி அத்துறை சார்ந்த நூலாசிரியரானாவும் அவர் விளங்குவது அத்துறைசார் மாணவருக்கு பெரும் பேறாகும். இந்த இரட்டைப்பணியில் மிளிர்வது எல்லோருக்கும் கைவரக்கூடிய வல்லமை அல்ல.

பத்திரிகைத் துறையில் எட்டு நூல்களை வெளியிட்டு இப்போது ஆசிரியர் தலையங்கம் ஓர் அறிமுகம் என்ற ஒன்பதாவது நூலை வெளியிடுவது இத் துறையில் எமது பிரதேசத்தில் நிலைநாட்டப்படவுள்ள பெரும் சாதனையாகும். ஊடகத்துறைக்கும் அது சார்ந்த கல்விப்புலத்திற்கும் அவரது காத்திரமான பங் களிப்புத் தொடரட்டும். இத்துறை சார்ந்த பணி மேலும் பல்கிப் பெருகி மலரட்டும் என்று மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

*ம.வ.கானமயில்நாதன், பிரதம ஆசிரியர் ,உதயன் - சஞ்சீவி*

## Congratulations on your 25th silver Jubilee Thambi



I am very proud and previladged to be a part of my loving thambi Rev. Fr Ruban Mariampillai's silver jubilee celebrations.

He was a small boy at St Martin's seminary when I left for England in 1975. Today 36 years on he is still my loving thambi, I am proud to say with lots of achievements and awards, celebrating 25 years of priesthood. He has worked hard to earn his name in the media, university, and lecturing field.

I was unable to join him for his ordination celebrations in 1986, therefore I am very hounered to be able to join him in his Jubilee celebrations.On behalf of my Husband and my family I congratulate him and wish him every success for the future, good health and happiness. Most of all I pray to god to bless him, guide him guard him and protect him.

***Pushpam & Arul Loving sister & Husband***

## 'ஊடகத்தின் ஊடே இறையரசினை ஒளிர்வித்த பணியாளன்'



யூபிலி நாயகனாம் அருட்பணி ரூபன்மரியாம்பிள்ளை அவர்களின் குருத்துவ வாழ்வின் 25 ஆண்டுகள் நிறைவுறும் இந்நாளில் பாதுகாவலன் நிருபர்கள் சார்பாக இதயம் மகிழ்ந்த வாழ்த் துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

பங்குப் பணிகளுடன் பாதுகாவலன் பத்திரிகையினை எழுத்தியல் களமாகக்கொண்டு இவரது சமூக இறையரசுப் பணி விரிவடையத் தொடங்கியது. ஆன்மீகக் கட்டுரைகள் வழியாக இறையரசின் விழுமியங்களை சமுதாயத்திற்கு எடுத்துரைக்கும் வகையில் மொட்டு விரியத்தொடங்கிய ஊடகப் பணி, குறிப்பாக 'குடும்பம் ஒரு கதம்பம்' என்ற தொடர் கட்டுரையின் மூலம் எழுத்தாற்றலில் நறுமணம் பரப்பத் தொடங்கியது. இது மட்டுமன்று, பல சமூகப் பத்திரிகைகளுக்கும் காலத்தின் தேவையுணர்ந்து ஆன்மீகக் கட்டுரைகளையும் வரைந்து தமக்கே உரித்தான நற்செய்திப் பணியை ஊடகங்களின் ஊடாகச் சிறப்புற ஆற்றினார். 1997 இல் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தின் அதிபராகவும், பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பொறுப்பேற்று நற்பணியாற்றியதுடன் இக்காலத்தில் சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் இயக்குநராகவும் செயலாற்றி 'பல்துறைப் பணியாளராக' விளங்கியமை இலை மறைகாய் போன்ற இவரது ஆற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டேயாகும்.

1997 முதல் 2007 வரை பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகச் செயற்பட்ட பத்தாண்டுக் காலத்தில் எம் தமிழ் தாயக மண் கொடும் போர் மேகம் சூழ்ந்திருந்த காலப்பகுதியாகும். இக்காலகட்டத்தில் ஊடகத்துறைதனை ஒழுங்குற நடாத்துவது என்பது முயற்கொம்பாகவே இருப்பினும் பல இடர்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து பாதுகாவலன் பத்திரிகையைத் தொடர்ச்சியாக வெளிவரச் செய்தது மட்டுமன்றி அதன் ஆசிரியர் தலையங்கத்தின் ஊடாக அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடிகள், அச்சுறுத்தல்களைக் கடந்து உண்மை, நீதி, மனித மாண்புள்ள விடுதலை என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து தமது சிந்தனை, ஆற்றல் மூலம் சமுதாயத்திற்கு இறையரசின் படிப்பினைகளை வழங்கி வழிப்படுத்திய ஊடக இறைப்பணியாளனாகவும் விளங்கியபோது தமது உயிரையும் ஒரு பொருட் டாகக் கருதாது தமிழ் மக்களின் அடிமைத் துயரங்களை அகிலம் அறியச் செய்த அரும்பணியாளனாகவும் செயற்பட்ட தன்மைகளை ஊடகத்துறையினர் மறந்துவிட முடியாது.

மேலும் இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் இரு விருதுகளை பாதுகாவலன் பத்திரிகைக்காகப் பெற்று கத்தோலிக்க பத்திரிகைக்கு பெருமை சேர்த்ததுடன், கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் பத்திரிகையின் 125 ஆண்டு யூபிலி விழாவையும் தமது ஆசிரியப் பணிக்காலத்தில் வெகுவிமரிசையாக நிறைவு செய்த பெருமையும் அடிகளாரையே சாரும். ஊடகவியல் துறையில் பாதுகாவலன் பத்திரிகை என்ற குறுகிய வட்டத்திற்குள் மட்டும் நின்றுவிடாது யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தில் இணைப்பாளர், விரிவுரையாளர் என்ற பணிகளை மேற்கொண்டதுடன் ஊடகத்துறை தொடர்பான பல தமிழ்மொழி நூல்களை வெளியீடு செய்த சாதனையாளராகவும் விளங்கும் இவரது திறன் 'தமிழ் தூது' தவத்திரு தனிநாயகம் அடிகளார் தமிழ் மீது கொண்ட வாஞ்சையை நிறைவேற்றுபவராகவும் அதனை ஊடக உலகிற்கு எடுத்தியம்புகின்ற செயல் வீரராகவும் இவர் ஆற்றிய, ஆற்றி வருகின்ற பணி இவரது குருத்துவ அர்ப்பண யூபிலி விழாவின் ஓர் மைல்கல் என்றே பாராட்டுகின்றேன். 'தொடர்க நின் பணி மிளிர்க இறையரசு'

*பாதுகாவலன் நிருபர்கள் சார்பாக வாழ்த்தும்*
*செல்வி வுளொறன்ஸ் ச. சூசைதாஸ்*

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### மேற்கு வானில்

மனம் கூடச் சிலநேரங்களில்
புதைகுழியாய்
வேதனைகள் புதைக்கப்படுகின்ற போது
கண்ணீர்
இனிய தோழனாய்
துன்பங்கள் எல்லைமீறும் போது
எக்காளமிடும் ஏக்கங்கள்
என்னைத் தொல்லைப்படுத்தும்
தீவிரவாதிகளாய்
உதயங்கள் இல்லாமலே
எனக்குள் ஏன்
மீண்டும் மீண்டும்
அஸ்தமனங்களே உருவாக்கப்படுகிறது?

இரா. நவதர்சினி
வயாவிளான்

### காத்திருப்பு...

காலமென்னும் கடலால்
கரையொதுங்கியவளாய் நிற்கின்றேன்
உதவிக்கரம் நீட்டக்கூடிய
கடவுளைப் போன்றவர்களின்
கருணை வருகைக்காக
இன்னும் எத்தனை வருடங்கள்
காத்திருக்கப் போகின்றேனோ???

எம்.மதுஷா

### புதுயுகம்

நிலவைவிட அழகுமுகம்
ஐந்தாம் பிறை-உன் நகம்
உன்னை ரசிப்பதே
எனக்கு சுகம்
ஒருமுறை தா வரம்
இருவரும் படைப்போம்
புதுயுகம்

கதிர், நெடுந்தீவு

### சினேகிதியே

மிகவும் அமைதியானவள்
நகப்பூச்சுக்கு பணமில்லாதபோதும்
மரதோண்டி இலை அரைத்து
நகங்களை அழகுபடுத்தியிருப்பாள்
காதுகளில் சிறுதங்க கற்தோடுகள்
அவளின் அணிகலன்
பாவாடை தாவணி ஆடையினள்
கோவிலில் காணும் பொழுது
நீராடிய உலர்ந்த கூந்தலில் தோன்றுவள்
பூச்சுமஞ்சள் முகத்தினள்
மகிழ்ச்சியான அகத்தினள்
கூந்தலில் 33 பூவும் சூடியிருப்பள்
கலைமாணி பட்டமும் தேடியவள்
அந்த எளிமையே தமிழ் பண்பாடு
எமக்கு நன்கு பிடித்து விடுகிறது

ஆ.முல்லைதிவ்யன்
(பொலிகையூர்)

### அவரவர் பார்வையில்

அறிவு
சிந்தனை எனும்
சிற்பிசெதுக்கிய
சிற்பம்
கனவு
விழி மூடிப்பார்க்கும்
இலவச திரைப்படம்
நண்பன்
பாசமெனும் கடலினுள்
நட்பெனும் சிற்பிக்குள்
ஒளிவீசும் முத்து

சி.தனுசன்
பொலிகண்டி

துக்கம்
நாம் கேட்காத போதெல்லாம்
வந்து எமைத் தட்டிச்செலும்
ஒரு கொடிய செயல்
நட்பு
அன்பின் விஸ்பரூபமாயும்
தாயின் மறுவுருவாயும்
உதிக்கும் ஓர் உயிர்

செ.கௌசிகா
யா/வட இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை

### ஓவியம்

உன் உருவுக்கே
உருவம் கொடுக்க
ஆசைப்பட்டுக் காகிதத்தில்
உன்னை வரைய முடியவில்லை
உன்னைப் படைத்த அந்த
பிரம்மனால் கூட
உன்னைப் போல் இன்னொருவனை
உருக் கொடுத்து இவ்வுலகிற்கு
அனுப்ப முடியாது என்பதை
பின்புதான் உணர்ந்து கொண்டேன்

சங்கா.பா
வண்ணார்பண்ணை

### உனக்காக...

பாதை யோரக் காவலனாய்
உன் சுவடு தேடும் எனை
சத்தியமாய் நீ புரியாய்
தெரியும் எனக்கு...
ஆனாலும்...
சோர்ந்து போய்த் தூரவாகேன்
உன் சுவாசமான காற்றையுந்தான்
நீ கண்டு கொள்வதில்லையே
அதற்காய் விலகியதா
உன் மூச்சு உன்னை விட்டு...?

பா.பொன்நிலவன்
மீசாலை

### இமயம் தொட...

ஸ்போது
உண்மையினை
மறைக்க முயல்கிறாயோ
அப்போதே
அழிவை நீ தேடுகின்றாய்
எனப் பொருள்படும்
இவ்வுலகில்
உண்மைக்கு அழிவில்லை
அது அவன்
வடிவமென்பதால்

மாவை நா.கஜேந்திரன்

### தாயுமானவர்

இயங்க மறுக்கும் உன் உடலை
பார்க்கும் இவ்வேளையில்
உதிரத்தை வியர்வையாய் சிந்தி
உன்னை எனக்கு பரிசளித்த
என்னுயிர் தந்தையின் நினைவுகள் மட்டுமே
எண்ணங்களாய்....

நா.துஷியந்தி
எஸ் ஓ எஸ் சிறுவர் இல்லம்

### மழலையின் ஏக்கத்தில்

வேண்டும்!
உன் போர்வைக்குள் இடம் வேண்டும்!
உன் தூக்கத்திலும் நான் வேண்டும்!
உன்னில் நானும் என்னில் நீயும் வேண்டும்!
சத்தமின்றி யுத்தமின்றி இரத்தமின்றி
நித்தம் ஒரு முத்தம் -என்
அன்னை எனக்கு ஈந்திட வேண்டும்!

நாதப்பிரியை

அம்மா



## மௌனத்தின் தேடல் – 75

### உயிர் பிச்சை

உரிமைத் தாயின்
உயிர் பறிப்பால்
உறவின் மடியில்
உருகிடுதே உயிர்...!
உதவிக்கரம் நீட்டியே
உயிர்பிச்சை கேட்கும்
உறவின் உருக்கம் இது...!

ஆர்.ஜெயா
அராலி

### விடிவு

பார்வை! உன் தேடலா?
தேவை! உன் ஏக்கமா?
பொறுத்திடு...
கிடைக்கும் உன்
விடிவுக்காய்

அ.வசந்தன்
அல்வாய்

### எச்சங்களாய்...

யுத்தமெனும் அக்கினிக்குள்
உறவுகள் யாவும்
மூழ்கிப் போக உன்
கரங்களில் மிஞ்சியது
இந்த பிஞ்சினது
உடல் தானோ?

எம்.சந்திரகலா
யோகபுரம்

### எதற்காக?...

பசிக்காக பிச்சையா...
உறவைத் தேடி
உண்ணா நோன்பா...
பெற்றோரை இழந்த
சோகத்தின் உச்சமா...
உரிமைக்கான அகிம்சைவழி
போராட்டமா...

ந.வினோரூபன்
யா/நெல்லியடி மத்திய ம.வி

### எதிர்நீச்சல்

என்னை ஒருவர்
சுமக்க வேண்டி
இருக்கையில் நான்
உன்னை சுமக்கின்றேன் வா!
வாழ்ந்து பார்ப்போம்

சொ.அருள்ஜோதி
யாழ்ப்பாணம்.

### எதிர்காலம்

வாகனத்தில் ஏறி
இருந்து கொண்டு
பிஞ்சுக் குழந்தையை
கையில் வைத்திருக்கும்
சிறுவனே
எதிர்காலம் என்னவென்று
தெரியுமா உனக்கு?

சி.சுஜிதா

### வரலாற்று தழும்புகள்

தமிழனாய் பிறந்ததிற்கு
நம் சந்ததியே சாக்கடைக்குள்
முள்ளிவாய்க்கால்
அடையாளங்கள்
முடிவில்லா தொடர் கதையாய்...
சரித்திரங்களின் சாட்சிகளாய்...
வரலாற்றுகளின்
சின்னங்களாய்....

ரி.அனித்தா
வயாவிளான்

### ஏக்கம்

மண்ணில் விழுந்த விதைகளை
மடியில் ஏந்தியவள் பிரிந்திட
கொடியில் பூத்த மலர்கள்
ஏங்குவதைப் பாராயோ

பு.அரிராம்
பரு/வேலாயுதம் ம.வி

### நிம்மதியாய்

கலைந்து போன கனவுகளும்
காணாமற் போன உறவுகளும்
இனி எமக்கில்லை
உனக்கு நான்
எனக்கு நீ
உறங்கு கண்ணா நிம்மதியாய்!

றா.விமலதாஸ், நவாலி

### உறவு

குண்டுகள் பொழிந்தன
உறவுகள் தொலைந்தன
என்னிடம் இருந்ததோ
இளைய தம்பி மட்டும்
அவனையாவது காப்பாற்ற
வேண்டும்
என் உறவென்று சொல்ல

ப.பிரஷாந்தி
நெல்லியடி வடக்கு

### மறைக்க முடியுமா?

யுகங்கள் பல சென்றாலும்
யுத்தமெனும் ரணகளத்தின்
வெளிப்பாட்டு உண்மை
என்றுமே மூடி மறைக்க
முடியாது என்பதே இதன்
உண்மை வெளிப்பாடு

பு.ஜீவனா, கரவெட்டி

போரில் மாண்டனர்
உன் உறவனைத்தும்
மீண்டாய் உன் தம்பியுடன் நீ மட்டும்
காத்திருப்பது நீ சோற்றுக்கல்ல
சேற்றில் மலரும்
செந்தாமரைப் பூப்போன்று
பிணக்குவியல்கள்
மத்தியில் மலரப்போகும்
எம் சுதந்திரத்திற்காக


சுழியூர், டனி

### காத்திருக்கிறேன்

காற்றிடம் தூது சொன்னேன்
முகிலிடமும் தூது சொன்னேன்
என்னை விட்டு
பிரிந்து சென்ற உறவுகளுக்காய்
நான் நிலா முற்றத்தில்
காத்திருக்கிறேன் என்று
என் நிலை தெரிந்தவுடன்
ஒடோடி வந்திருங்கள்

சி.சுகனியா
புலோலி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 76



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 24.06.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு 1ஆம் தெரு

# அருள்தரு சிவதர்மசாஸ்தா திருக்கோயில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்-19.06.2011

## பிரதம குருவின் ஆசியுரை



எங்கள் வம்ச தெய்வமாக விளங்குகின்றான் தமிழ்நாடு சாத்து பத்தூர் ஐயன் . அவரை நெஞ்சில் நிறுத்தி சபரி ஆண்டவன் பாதம் பணிந்து மக்கள் வழிபாட்டு தலமாக சிறுதுளியாக நிதி சேர்த்து மக்களின் துணையோடு இவ் ஆலயத்தை கட்டி எழுப்பினேன். இன்று பெருமானுக்கு பஞ்சகுண்டபக்ஷ கும்பாபிஷேகம் செய்து மகிழ்கின்றேன். தொடர்ந்து 41 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

இவ்வாண்டு ஐயப்பன் புனித மாலை அணிகின்றவர்கள் எமது ஆலயத்தில் மாலை அணிந்து சபரி யாத்திரை மேற்கொள்ளலாம். தமிழ்நாடு சென்று யாத்திரை செய்ய முடியாதவர்கட்கு-யாழ். கட்டுவன் ஐயப்பன் ஆலயம் நவிண்டில் சுந்தர ஐயப்பன் ஆலயம் சென்று 18 படியேறிநெய் அபிஷேகம் செய்ய வசதி கள் செய்து தரப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். இன்று நடைபெறும் ஐயப்பனின் கும்பாபிஷேக பலன் எல்லோருக்கும் அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திப்பதோடு சரீர உதவி புரிந்தவர்கள், நன்கொடை தந்தவர்கள், தொண்டர்கள், அடியார்கள், சுவாமிமார்கள், சுவாமிக்கு தேவையான பொருட்கள் வாங்கித்தந்தவர்கள் எல்லோருக்கும் ஐயப்பன் ஆசி உரித்தாகுக.

பிரதம குருசாமி, சபரீமலை குருசாமி, சபரீசதாசன்,
சபரீகானவிநோதன், சபரீசகானமாயன்,
பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவசிவாச்சாரியார், உரும்பிராய்.

## என் கனவில் வந்தான் ஐயன்



எனக்கு ஒருநாள் ஜேர்மனியில் இருந்து ஒரு போன் வந்தது. *நான் வாசுசாமி பேசுகின்றேன். நீர் உடன் ஒரு ஐயப்பன் ஆலயம் அமைக்கவும்* என்று முதல்நாள் கனவிலே ஐயனுக்கு ஒரு ஆலயம் கட்டுவதாக கனா கண்டேன். உடனே நவிண்டில் பதியிலே எமது குருசாமி வாசுதேவகுருநாதர் மூலம் 18 படிகளோடு கூடிய ஆலயம் அமைத்தேன். ஊர்மக்கள் உதவியோடும் ஐயப்ப பக்தர் அனுசரணையோடும் குருசாமி எம்மோடு தோள்நின்று கும்பாபிஷேகம் நடாத்தி தற்போது எமது ஆலயத்திற்கும் எமக்கும் குருசாமியாக 9 ஆண்டுகள் சபரியாத்திரை மேற்கொண்டார்.

இன்று அவர் பொறுப்பில் எல்லோரிடமும் நிதிசேர்த்து அழகான ஆலயம் அமைத்து உரும்பிராய் ஐயன் இன்று கும்பாபிஷேகம் காணுவதில் அளவில்லா மனம் மகிழ்கின்றேன். அவர் ஆசி எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திப்பதோடு எமது சுந்தர ஐயப்பன் ஆலயம் வளர்ந்தது போல் குருசுவாமியின் ஆலயம் ஐயன் புகழ் பரவ எனது ஊர்மக்கள் சார்பாகவும் பரிபாலன சபை சார்பாகவும் இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

சுந்தர ஐயப்ப ஆஞ்சநேயர் ஆலயம், குருசாமி,
பிரம்மஸ்ரீ ந.சுந்தரேஸ்வரசர்மா, நவிண்டில்.


## சுவாமி ஐயப்பன் புகழ் எங்கும் பரவட்டும்



ஐயனை கண்டு தரிசிக்கும் பாக்கியம் எனக்கு எனது அப்பா குருசுவாமி மூலம் இரண்டு தடவை காணப்பெற்றேன். இன்று ஐயப்பன் உரும்பிராய் பதியினிலே வந்து அமர்ந்து கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. ஐயன்புகழ் எங்கும் பரவட்டும் என்று தாவடி அம்பலவாண முருகமூர்த்தி பெரு மானை வேண்டுகின்றேன்.

ஆசிகூறும்
தாவடி முருகன், நித்திய அர்ச்சகர்
பிரம்மஸ்ரீ வா.விஷ்ணுவர்த்தன சர்மா

Web Site :- www.iyappan.com
Email :- iyappan@mail.com
Skype :- iyappantemple
Facebook :- http//facebook.com/iyappantemple



## சிவ தர்ம சாஸ்தா துணையிருப்பான்



சபரிமலை சாஸ்தா ஐயனை உரும்பிராய் பதியினிலே நாள்தோறும் அர்ச்சிக்கின்றேன். அவன்பாதம் பணிந்தேன் என் அப்பா குருசாமி மூலம் 3 தடவை பெருவழிப் பாதையில் நடந்து எருமேலி சாஸ்தாவை கண்டேன். பெரு ஆனந்தம் கொண்டேன். எனது வம்சம் தழைக்க சிவதர்ம சாஸ்தா துணை இருப்பான் என்று பூரண நம்பிக்கையோடு இன்று குடமுழுக்காட்டு விழா காணும் உரும்பிராய் சிவதர்மசாஸ்தா எல்லோருக்கும் அருள்புரிந்து துணை இருக்கவேண்டி நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், கரந்தன் பதி சிவபூதநாதரையும், கோண்டாவில் மேற்கு ஞானபைரவரையும், சிறுப்பிட்டி பெருதலை சிவனையும் பிரார்த்தித்து அருளாசி கூறுகின்றேன்.

பிரம்மஸ்ரீ வா.ஜெயவஸ்த்தாங்க குருக்கள்
நித்திய குருசுவாமி,
உரும்பிராய்.

குரு அரைக்கும் ஆலை
புகையிரத வீதி,
ஸ்ரீராம் அரைக்கும் ஆலை
மதுஷா வைண்டிங்வேக்
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு.
உரிமையாளர்:- சிறீதரன் தொ.பே:0776154941

## ஐயப்பஸ்வாமி அருள் பெருகுக



உரும்பிராய் நகரின் மத்தியிலே கோவில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வரும் ஐயப்பஸ்வாமி குடமுழுக்குக் காண இருக்கிறார். இந்தியாவிலே கேரளத்திலே சபரிமலையை தன்னுடைய பிரதான இருப்பிடமாகக் கொண்டு அற்புதங்கள் செய்து வருபவர் ஐயப்பஸ்வாமி. அவர்தம் பெருமையை உணர்ந்த இலங்கை மக்களும் விரதமிருந்து சபரிமலை செல்லும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

உரும்பிராய் ஐயப்பஸ்வாமியின் ஸ்தானிக அர்ச்சகர் பிரம்மஸ்ரீ வாசுதேவக்குருக்களுக்கும் எமக்கும் சாத்துப்பத்தூர் ஐயப்பன் குடும்பதெய்வமாக விளங்குகிறார். நாங்கள் அவர் பெருமையைப் பாடும் போது சாத்துப்பத்தூரினில் வாழ்ந்திடும் எங்கள் குலதெய்வமே பூதநாதா என்று போற்றிப்புகழ்வது வழக்கம். பெருமைமிக்க ஐயப்பன் புகழ் உரும்பிராய் ஐயப்ப தேவாலயத்திலிருந்து உலகெங்கும் பெருகி பரவ ஐயப்பன் திருவருள் வேண்டிநிற்கின்றேன்.

சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்

## ஆசிச் செய்தி



மேற்படி ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதையிட்டு அகமகிழ்வதோடு,

அழகு கொஞ்சும் கேரள நாட்டில் பதினெட்டு மலைக்கோயில்களில் சபரிமலை சாஸ்தா கோயில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த வகையிலே இலங்கைத் தீவின் சிறப்புப்பொருந்திய யாழ்ப்பாணத்தின் வடபால் உரும்பிராய் பதியினிலே சபரிமலை சாஸ்தா எழுந்தருளி அடியவர்க்கு அருள்பாலிக்க இருக்கின்ற எம்பெருமானின் கும்பாபிஷேகம் சிறப்புற எங்கள் குல தெய்வமாகிய சாத்துப்பத்தூர் ஐயப்பனையும் மாணிக்கப்பிள்ளையாரையும் வணங்கி எனது ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நா.திவாகரக்குருக்கள்
தில்லையம்பதி சிவகாமி அம்மன் கோயில், கோண்டாவில்

## சபரிமலை ஐயன் வருகின்றான்



கோடான கோடி மக்கள் ஜாதி மதபேதமின்றி சபரியாத்திரை செல்கின்றார்கள். அந்தவகையில் ஐயனை பார்க்க எனக்கும் ஓர் ஆசை உண்டாயிற்று. எனது அப்பா குருசுவாமி மூலம் இரண்டு தடவை சென்று மணிகண்டனை பார்க்கும் பாக்கியம் கிடைத்தது.

பார்த்தேன், மகிழ்ந்தேன், பம்பையிலே நீராடி என்பாவத்தை தீர்த்தேன். எல்லோரும் சிறப்போடு வாழ வேண்டினேன். இன்று சபரி ஐயப்பன் உரும்பிராய்க்கு வருகின்றான்.

அவனை நாடு!! அவன் புகழ்பாடு! புகழோடு வாழவைப்பான் ஐயப்பன் என்றும் நல்லூர் சட்டநாதர் சிவனை வேண்டுகின்றேன்.

நல்லூர் சட்டநாத பெருமான் நித்திய அர்ச்சகர்,
பிரம்மஸ்ரீ வா.ஜெனார்த்தனசர்மா

**சபரிமலை ஐயப்பன் உரும்பிராய் பதியிலே வந்து அமர்ந்து எமைக் காத்து தொழில் ஸ்தாபனம் சிறப்பாக அமைய இன்று குடமுழுக்கு காணும் ஐயனின் திருவருள் வேண்டி நிற்கும்,**

புலவர் வீடியோ
தில்லையம்பதி,
கோண்டாவில் வடக்கு.
021 321 2973, 0773101375

டெனிஸ் மோட்டார் கராச்
உப்புமடம் சந்தி,
கோண்டாவில் மேற்கு.
உரிமையாளர்- செ.ரெனிஸ்

அனுஷா பந்தல் சேவை
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
எஸ்.தாயாபரன்

கண்ணா களஞ்சியம்
கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில்.
உரிமையாளர்-அ.தனகுமார்

வைரஸ் கிறபிஸ்
அச்சகம்
கே.கே.எஸ்.வீதி, ஆஸ்பத்திரி
முன்பாக, இணுவில்.

முனீஸ்வரா
சைவ உணவகம்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.

லக்ஷ்மி இரும்பகம்
உப்புமடம் சந்தி,
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.

லக்ஷ்மிபவான்
சைவ உணவகம்
கே.கே.எஸ்.வீதி,
உப்பு மடம் சந்தி, கோண்டாவில்.

அம்பிகை அழகுமாடம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
அம்பிகாபதி அழகுமாடம்
பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

சிவரஞ்சனம் ஒவ்செற்
பிறிண்டேர்ஸ்
பலாலி வீதி, கோண்டாவில்.
021 222 6722

சோதி பேக் கவுஸ்
கொழும்பு-யாழ். வான் சேவை.
திருமண நிகழ்விற்கான மணமக்கள்
காரும் வாடகைக்கு உண்டு.
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
0212241596, 0771102892

பாரதி டொட் கொம்
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.

# அரசுக்கு அழுத்தம் கொடுக்க இலங்கைக்கு வந்த மூவரணி



ஐரோப்பிய ஒன்றியத்தால் அமுலாக்கப்பட்ட புலிகள் மீதான தடையை நீக்குமாறும், விடுதலைப் புலிகள் தமது இலக்கை அடைந்து கொள்வதற்கு ஆயுத வழிமுறையை மட்டும் பின்பற்றவில்லை என்றும் இவர்கள் அரசியல் ரீதியிலும் தமது இலக்கை அடைந்து கொள்வதற்கு போராடியுள்ளனர் என்பதற்கு இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் சிறந்ததோர் எடுத்துக் காட்டாக உள்ளதாகவும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள புலிகள் அணியின் சார்பாக ஐரோப்பிய நீதிமன்றில் வழக்கைத் தாக்கல் செய்திருந்த அம்ஸ்ரடம்மைத் தளமாகக் கொண்டியங்கும் பொகிலர் குழுமத்தை சேர்ந்த வழக்கறிஞர் விக்ரர் கோப்பே நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ் மக்களிற்கு நீதி வேண்டிப் போராடிய புலிகளால் முன்வைக்கப்பட்ட உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அவர் தனது வாதத்தில் முன்வைத்திருந்தார்.

2009 மே மாதத்தில் முடிவிற்கு வந்த இராணுவ நடவடிக்கைகளின் போதும் போர் ஓய்விற்கு வந்த பின்னரும் சரணடைந்த புலிகளின் பல மூத்த உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் இன்னும் பலர் கைது செய்யப்பட்டனர். அதன்பின்னர், புலிகளின் துணை அரசியல் பிரிவுகளும் ஐரோப்பிய தேசிய கிளைகளும் வன்முறையற்ற ரீதியில் தமது சுயாட்சிக்கான கோரிக்கைகளை முன்வைத்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"விடுதலைப் புலிகள் தமது அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கிய கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகின்றனர். ஐரோப்பிய ஒன்றியமும் அதன் உறுப்பு நாடுகளும் இலங்கை அரசாங்கத்திற்குச் சார்பாக செயற்படாது புலிகள் அமைப்பின் கோரிக்கைகளைப் புரிந்து கொள்ள முன்வர வேண்டும்.

அனைத்துலக மனிதாபிமானச் சட்டத்தின் பிரகாரம், இச்சட்டத்தை மீறும் எந்தவொரு இராணுவப் படைகளும் தண்டிக்கப்பட

> மகிந்த ராஜபக்ஷவின் அனுமதியுடன் பீரிஸ், இலங்கை - இந்தியா கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ள போதிலும், தற்போது இந்த விடயமானது இலங்கை அரசாங்கத்தின் மத்தியில் பாரிய பிரச்சினையாக உருவாகியுள்ளது.
>
> இவ்வாறு கொழும்பை தளமாகக்கொண்ட த சன்டே லீடர் ஊடகத்தின் அரசியல் பத்தியில் எழுதப்பட்டுள்ளது. அப்பத்தியை 'புதினப்பலகை'க்காக மொழியாக்கம் செய்தவர் நித்தியபாரதி.

## கூட்டறிக்கையில் உள்ளவற்றை மகிந்தவே நடைமுறைப்படுத்துவாரா?

வேண்டும் என்பது நியதியாகும். பாதிக்கப்பட்ட ஒரு அமைப்பானது பயங்கரவாதிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதானது நீதிக்கு முரணானதாகவே பார்க்கப்படும்" என விடுதலைப் புலிகளின் பெயரை ஐரோப்பிய ஒன்றியத்தின் பட்டியலிலிருந்து நீக்க வேண்டும் எனக் கோரி தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் செய்யப்பட்டுள்ள வழக்குத் தாக்கலில் புலிகள் சார்பாக வாதிடும் வழக்கறிஞர் குழுமமான பொக்லர், ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளது.

அனைத்துலக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல்கள் செய்யப்படும் அதேவேளையில், கடந்த புதனன்று (யூன் 08) தமிழ் நாட்டின் சட்டப் பேரவையிலும் இது தொடர்பான பரிந்துரை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

அதாவது தருஸ்மன் அறிக்கையில் குறிப்பிட்டதன் பிரகாரம், இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நீதியானதும் சுயாதீனதுமான விசாரணையை முன்னெடுக்க இலங்கை அரசாங்கம் முன்வர வேண்டும் என இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ் நாட்டு சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தியாவின் அழுத்தத்தை அசட்டை செய்து இலங்கை அரசாங்கம் செயற்படுமாயிருந்தால் அதன் மீது பொருளாதாரத் தடையை விதிப்பது தொடர்பாக கருத்திலெடுக்கப்படும் என தமிழ் நாட்டின் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் முதல்வர் ஜெயலலிதா ஜெயராமன் இது தொடர்பான பரிந்துரையை தமிழ்நாட்டின் சட்டமன்ற அவையில் முன்வைத்திருந்தார். இந்தத் தீர்மானமானது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

### தமிழ் நாடு

தமிழ்நாட்டு விடயமானது இலங்கையின் ஊடகத்துறை அமைச்சரான கெஹலிய ரம்புக்வெல அறிக்கை ஒன்றை வெளியிட நிர்ப்பந்தித்துள்ளது.

இலங்கையானது இந்திய மத்திய அரசுடனேயே தொடர்புகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர இந்திய மாநில அரசான தமிழ் நாட்டுடன் எவ்வித தொடர்புகளையும் பேணிக்கொள்ள வேண்டியதில்லை என ஊடகத்துறை அமைச்சரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஜெயலலிதாவின் அறிக்கைகளுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இலங்கை அரசாங்கத்திற்கு இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளர்.

ஆனால் ஜி.எல்.பீரிஸால் முன்வைக்கப்பட்ட அறிக்கையானது சற்றுமுரணானதாக அமைந்துள்ளது. இவர் தமிழ்நாட்டில் அண்மையில் இடம்பெற்ற சட்டப்பேரவையில் வெற்றிவாகை சூடி தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள ஜெயலலிதாவிற்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டுள்ளதுடன், தமிழ் நாட்டு அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற இலங்கை அரசாங்கம் ஆர்வமாக இருக்கும் எனத் தான் நம்புவ தாகவும் பீரிஸின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் முதலமைச்சரான ஜெயலலிதாவுடன் மிக நெருக்கமான உறவைப் பேணுமாறு ஜனாதிபதி ராஜபக்ஷ, இலங்கை வர்த்தகர்களிடமும் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக கடந்த வாரம் நாம் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

இந்நிலையில், தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கெதிரான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளமையானது ராஜபக்ஷ அரசாங்கத்தின் எல்லாவிதமான முயற்சிகளையும் பயனற்றதாக்கியுள்ளது.

தமிழ் நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்திற்கும், தற்போது இலங்கையிற்கு வருகை தந்திருந்த இந்திய மத்திய அரசாங்கத்தின் உயர் மட்டக் குழுவிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். டெல்லி அதிகாரிகளிற்கும், தமிழ்நாட்டு முதலமைச்சருக்கும் இடையில் இது தொடர்பான கலந்தாலோசனை இடம்பெற்றுள்ளதுஎன ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்களிற்கும் முகம் கொடுக்கும் இலங்கை அரசாங்கம் உள்நாட்டு அழுத்தங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

தனியார்துறை ஊழியர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை இலங்கை அரசாங்கமானது கைவிட்டமையானது இதற்கான நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுடனான கசப்பானது, இலங்கை அரசாங்க அதிகாரிகளிற்கிடையில் பிளவு ஏற்படக் காரணமாகியது. LECO வின் தலைவரான சுசந்த பெரேரா, ஊழல் மோசடி என குற்றஞ்சாட்டப்பட்டு அமைச்சர் சம்பிக்கவால் அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இந்தப்பதவி பறிபோனது இலங்கை ஜனாதிபதிக்கும் சம்பிக்கவிற்குமிடையில் கருத்து முரண்பாட்டை உருவாக்கியதுடன், சம்பிக்க மீது ஜனாதிபதி வைத்திருந்த நம்பிக்கையையும் தவிடு பொடியாக்கி உள்ளது. சுசந்த பெரேராவை LECO வின் தலைமைப் பதவியில் தொடர்ந்தும் தக்கவைத்திருக்கவே ஜனாதிபதி விரும்பினார்.

(தொடரும்)

# இன்று முதல்

# யாழ் நகரில்

முதல் முறையாக UK ஐ தலைமையாக கொண்ட

LMC

## LONDON METROPOLITAN COLLEGE

197, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில்
காலை 9.30 மணிக்கு
வைபவரீதியாக திறந்து வைக்கப்படுகிறது

யாழ் நகரில் முதல் முறையாக
அனைத்து பாடநெறிகளுக்கும்
பிரபல UK கல்லூரியான Westminster Academy இன்
சான்றிதல்கள் நேரடியாக வழங்கப்படும்.

**Hot Line : 071 4150995, 077 6919455**

EPO net

## EXPONET

Overseas Consultants

(Group of Exponet (Pvt) Ltd.)

No. 379, ½ Galle Road,
Colombo - 06. Sri Lanka.
Phone - 0117555511,12,13,14

No. 56, The Gardens
Harrow Middlesex, HA1 4EY UK
Company No - Fco 27424
Branch No - BR 009294

(சி-3514)

FLEX Graphic



# மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தல விழா சிறப்பு மலர்

## 19.06.2011



## ஆலய பரிபாலகரின் வாழ்த்துச் செய்தி



பதுவை நகரப் புனித அந்தோனியார் நாவழியா அற்புதர் கோடி வரங்களை ஆண்டவர் இயேசுவிடமிருந்து தினம் தினம் அள்ளி வழங்கும் உன்னதமான வள்ளல். இவரின் பெருவிழாவை மானியம் பதியிலே கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது, பெருமைக் குரியது. வெறும் 36 ஆண்டுகள் இந்த உலகத்திலே வாழ்ந்த ஒரு மனிதனின் வாழ்வு ஏன் இப்படி நினைவு கூரப்படுகின்றது என்று எண்ணும் போது சத்தியத்தின் நிறைவிலே நின்று நித்தியதேவன் இயேசுவை தனது வாழ்வாக்கி, மூச்சாக்கி, நிறைவாக்கி வாழ்ந்தது தான் என்று சொன்னால் அது மிகையில்லை. தனது வரங்களின் வள்ளல் தன்மையிலே இன, மத, மொழி, சாதி என்ற எல்லைகளைக்கடந்து புனித அந்தோனியார் ஆற்றிவரும் இறை ஊழியம் பெருமைப்படவேண்டியது. இவரின் வாழ்வு எம்மைப் பாதிக்க வேண்டும். இவரின் சாட்சியம் எம்மை சிந்திக்க வைக்கவேண்டும். இவரின் அர்ப்பணம் எம் கிறிஸ்தவ வாழ்வின் இனியபக்கங்களாக மாற வேண்டும்.

இயேசு கிறிஸ்து என்கின்ற ஒப்பற்ற செல்வத்திற்காக தனது உடல், பொருள், ஆவியை கொடுத்த புனித அந்தோ னியாரின் உன்னதமான, உதாரணமான, எளிமையான, இனி மையான வாழ்வைப் பின்பற்றி நாமும் இயேசு என்கின்ற ஒப்பற்ற செல்வத்தை எமதாக்க முனைந்திடுவோம்.

இந்த இனிய நன்னாளிலே மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயப் பரிபாலகர் என்ற ரீதியிலே உங்கள் அனைவருக்கும் இனிய பெருவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு உங்களையும் உங்கள் குடும்பங்களையும் புனித அந்தோனியாரின் வல்லமையான பரிந்துரை வழியாக இறை இயேசு ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஆசித்து நிற்கின்றேன்.

அருட்திரு. X.W.ஜேம்ஸ்
பரிபாலகர்.



மலரமைப்பு:-
க.விஜயகாந்தன்

## யாழ்.ஆயரின் ஆசிச்செய்தி



கோடி அற்புதர் எல்லோராலும் அழைக்கப்படும் எம் தூய அந்தோனியார் இவ் உலகில் வாழும் போதே புனிதராக வாழ்ந்து புதுமைகள் கோடி புரிந்தவர் மட்டுமல்ல மாறாக இன்று உலகெங்கும் வேற்றுமை பாராது பக்தர்களை தன்னகத்தே கொண்டு இறைவனின் ஆசீர்களை வாரி வழங்கும் புனிதராக திகழ்கின்றார்.

ஏழைகள் மட்டில் இரக்கமும் அன்பும் தன்னை நாடி வரும் எத்தகைய உள்ளங்களுக்கும் இறை அருளால் உதவி புரிபவரும் எப்படியும் வாழ்ந்து எங்கள் காலத்தை முடித்து விடலாம் என்று எண்ணி வாழும் எம் தலைமுறைக்கு இப்படித்தான் வாழ்வை வாழ வேண்டும் என்று தன் வாழ்வில் ஒரு கோட்பாட்டை வகுத்து வாழ்ந்து இறை நம்பிக்கையிலும் அன்பிலும் தன் வாழ்வை வாழ்ந்த புனிதர் இவர்.

அக்காலத்தில் பெயர் போன புனித பிரான்சிஸ்குவின் சபையில் துறவியாக இணைந்து எளிமை, செபம், புனித வாழ்வை மேற்கொண்டார். தன்னை படைத்த இறைவனின் திருநாமத்தை புகழ்ந்து மறையுரைகள் வழியாக சத்திய வேதத்தை போதித்தால் நாவழியாமல் இருக்க இறைவனால் அருள் பெறப்பெற்ற இப் புனிதர் இன்று எம்மையும் தன் பாதையில் இறைவனுக்கு விசுவாசம் உள்ளவர்களாக தெய்வ பயம் உடையவர்களாக பாவ போக்கிலும் அதற்கான நாட்டங்களிலும் இருந்து விடுபட்டு தூய வாழ்வு வாழ அழைத்து நிற்கின்றார்.

எனவே அருட்பணி நல்லூர் சுவாமி ஞானபிரகாசியார் அமதி அவர்களின் முயற்சியால் மானிப்பாய் மண்ணிலே கோவில் கொண்டு அருள்பாலிக்கும் தூய அந்தோனியார் தன்னை நம்பி வரும் விசுவாசிகளுக்கு அடைக்கலமாக இருக்கின்றார்.

யாழ். மறைமாவட்டத்தின் யாத்திரை ஸ்தலங்களுள் ஒன்றான இவ் தூயவரின் பெயர் கொண்ட ஆலய விழாவை கொண்டாடும் போது தூயவரில் நம்பிக்கை கொண்டு இங்கு வரும் ஒவ்வொருவரையும் நான் வாழ்த்தி தூயவரைப்போல இவர்கள் வாழ்வும் மற்றவர்களுக்கு முன்பாக பிரதிபலிக்க ஆசித்து நிற்கின்றேன்.

மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ். ஆயர்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

# மானிப்பாய் பதியில் அருள்பாலிக்கும் புனித அந்தோனியார்

### ஆலய ஸ்தாபகர்

தெய்வபக்தியும் கல்வி அறிவும் இயற்கை எழிலும் பழமரச் சோலைகளும் விவசாய விளைநிலங்களும் தன்னகத்தே கொண்ட மானிப்பாயில் கல்வியில் மேன்மை படைத்தோர் அதிகமாக இருந்தனர். மானிப்பாயைச் சேர்ந்த ஒரு மகன் பிற்காலத்தில் ஊருலகம் போற்றும் பேரறிஞராகவும் மொழி வல்லுநராகவும் ஒரு கத்தோலிக்க குருவாகவும் இருந்து ஒருபோதும் மறக்கமுடியாத பெயரையும் புகழையும் விட்டுச் சென்றுள்ளார். அவர் தமது பணித்தளத்தை நல்லூரில் வைத்திருந்ததோடு நல்லூரிலிருந்தே தன் பணிகளைப் பல்லாண்டுகள் செய்ததால் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என அன்பொழுக அழைக்கப்பெற்றார். அவர் தம் காலத்தில் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்புவதற்காக பல இடங்களிலும் பல ஆலயங்களை எழுப்பினார். ஆயினும் தான் பிறந்த மானிப்பாயில் ஓர் ஆலயத்தை ஸ்தாபிக்கவிரும்பிய சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் 20 அடி நீளமுடைய சிறிய கொட்டிலை அமைத்து புனித அந்தோனியாரின் சுரூபத்தை வைத்து வழிபட்டு ஒழுங்குகளைச் செய்து வந்தார். ஆலயத்தைச் சூழவர மிகச்சில கத்தோலிக்கக் குடும்பங்களும் பல இந்துசமய சகோதரக் குடும்பங்களும் வாழ்ந்து வந்தன. எங்கும் உள்ளது போலவே புனித அந்தோனியார் எல்லாசமய மக்களிடத்திலும் ஓர் பக்தியையும் தாகத்தையும் ஏற்படுத்தி தம் தேவைகளுக்கு தம்மை நோக்கி வருவோரின் தேவைகளை நிறைவு செய்பவராக அருள்பாலித்து வந்தார்.

அந்தோனியார் உலகம் பூராகவும் புதுமைகளுக்கு பெயர் பெற்றவர். இவர் தமது 36 வயதில் இறந்தார். இவர் இறந்து 776 வருடங்கள் கடந்தும் இவரது நாக்கு இன்னும் அழியாத நிலையில் புதுவை நகரில் உள்ள ஆலயத்தில் வைக்கப் பட்டுள்ளதைக் காணலாம். குழந்தை இயேசுவை கரத்தினால் ஏந்தி அளவளாவும் வரத்தைப் பெற்றவர். இவரது பிரசங்கத்தை ஏற்றுக் கொள்ளாத மக்களை விட்டு கடற்கரையோரம் சென்று போதித்தபோதும் கடலினுள் இருந்த மீன்கள் கரைக்கு வந்து கேட்கத் தொடங்கின. காணாதபொருட்களை கண்டு பிடித்துக் கொடுப்பதிலும் தீய ஆவிகளை ஓட்டுவதில் அவர் செய்த புதுமைகள் எண்ணற்றவையாகும்.

### ஆலயத்தின் தற்போதைய நிலை

ஒவ்வோர் ஆண்டும் வருடாந்தத் திருவிழாவின் போது வரும் பக்தர்களின் எண்ணிக்கையோ மிகமிக அதிகமாக இருந்ததினால் ஆலயவளாகம் அவர்களைக் கொள்ள முடியாமல் போனது. 2000 ஆம் ஆண்டில் இங்கு பணியாற்ற வந்த பங்குத்தந்தை பெனற் அடிகளார் ஆலய வளர்ச்சியில் துரிதகதியில் செயற்பட்டார். ஆலய முகப்பு புதிதாகவும் அழகாகவும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. ஆலயத்துக்குப் பக்கத்திலே இருந்த தனியாருக்குச் சொந்தமான காணியும் வீடும் சொந்தக்காரரின் பெரும் நன்மையாலும் குருவானவரின் முயற்சியினாலும் பெறப்பட்டு ஆலய வளாகம் ஆக்கப்பட்டது. ஆலயமண்டபம் வளாகத்துள் அமைக்கப் பட்டு நற்செய்திக்கூட்டங்களும் கருத்தரங்குகளும் ஒழுங் குற செயற்படுகின்றன. சுவாமி ஞானப்பிரகாசரின் சிலை ஆலய முன்றலில் திறந்து வைக்கப் பட்டுள்ளது. இப்பொழுது இவ்வாலயம் புதுப்பொலிவுடனும் அழகுடனும் காட்சியளிக் கிறது. புனிதரின் திருவிழாவானது ஒவ்வொரு வருடமும் ஆனிமாதம் 13 ஆம் திகதிக்குப் பின்வரும் ஞாயிற்றுக் கிழமை பக்திப் பிரவாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

அந்தோனியார் ஆலயம் அவரின் அருளாசிக்கும் வேண்டுதல்களுக்கும் மையமாக இருந்து செயற்படினும் அந்தோனியார் இயேசுவின் உண்மையான சீடன். அவரின் உண்மையான ஊழியன். இயேசுவின் நற்செய்திப்பணியை முன்னின்று உழைத்தவர் இன்று பணியாற்றும் அருட்பணியாளர்கள் இயேசுவை முதன்மைப்படுத்தி மக்களை உருவாக்க கண்ணும் கருத்துமாய் செயற்படுகின்றனர். இவ்வாலயத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் காலையிலும் மாலையிலும் திருப்பலிகளும் மாதத்தில் ஒரு செவ்வாய்க்கிழமையில் குணமாக்கல்வழிபாடும் ஞாயிற்றுக்கிழமையில் மாலைத் திருப்பலியும் நடைபெறுவதோடு திருவிழாவுக்கு முதல் நவநாள் வழிபாடுகளும் நடைபெற்று மக்களை இறைவனின் அருளும் இரக்கத்திலும் நம்பிக்கை கொள்ள வைத்து மகிழ்ச்சியான வாழ்வுக்கு இட்டுச்செல்கின்றது. அனைவரும் இறைவனின் அருளும் புனித அந்தோனியாரின் ஆசியும் பெற்று குறைநீங்கி பாதுகாப்புடன் சிறப்புறவாழ அந்தோனியார் அருள்பாலிப்பாராக.

திருமதி.மே.யோ.பாக்கியநாதர்

PC SYSTEMS
Total IT Solution Providers
Alady Junction,
Manipay.
T.P:-0217391070
0777917790

பிரம்யா நகைமாடம்

யாழ்வீதி, ஆலடிச்சந்தி,
மானிப்பாய்.

மானிப்பாயில் கணனிக் கல்விக்கு
UNI TECHNOLOGY
ICT Education Trainers
T.P:-0217429325
0777110862
Jaffna Road,
Manipay.

KALAIMAGAL
International College
T.P:-0213215785
0778834592
CHURCH LANE,
KOKUVIL EAST, KOKUVIL.

சுந்தர்சன்
மானிப்பாய்.

மதன் எலக்ரோனிக்ஸ்
T.P:-0217901574
0777448668
0217900728
சுதுமலைச்சந்தி,
மானிப்பாய்.

பர்ணபாஸ் எலக்ரோனிக்ஸ்
360/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

சுதந்திரம்: இருளில் பெற்றோம்
இன்னும் விடியவில்லை.
-மேத்தா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அளவெட்டியில் தாக்குதல் நடத்தியவர்கள் அவர்களாக அல்லது இவர்களாக இருக்கலாம்

அளவெட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்குள் நுழைந்து தாக்குதல் நடத்திய படையினரை தம்மால் அடையாளம் காட்ட முடியும் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இவர்களின் இந்த அறிவிப்பு குற்றவாளிகளை இனங்காண்பதற்கு மிகவும் உதவியாக அமையும்.

ஆனால் குற்றவாளிகளை இனங்காண்பதற்கு அவர்களைக் கைது செய்வது யார்? என்ற கேள்விக்குள் எல்லாமே மௌனமாகிவிடும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நடத்திய கூட்டத்திற்குள் நுழைந்து பொதுமக்களை கண்டபாட்டில் தாக்கியவர்களை இனங்காண்பதும் அவர்களைக் கைது செய்வதும் படையினருக்கு அவ்வளவு கடினமான காரியமன்று. ஏனெனில் அவர்கள் தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் அத்தனை விடயங்களையும் புலனாய்வுக் கண்ணோட்டத்திலேயே பார்க்கின்றனர்.

கடந்த ஒரு சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் கலாசாலை ஒன்றில் இடம்பெற்ற புத்தக வெளியீட்டைக் கூட எதற்காக நடைபெறுகிறது? ஏன் நடைபெறுகிறது? என துருவித்துருவி படையினர் ஆய்வு செய்துள்ளனர்.

இதுபோல வேறு சம்பவங்களையும் குறிப்பிட முடியும்.

இதன்மூலம் தமிழ் மண்ணில் மாணவர்கள் ஒரு புத்தக வெளியீட்டைக்கூட சுதந்திரமாக நடத்த முடியாது என்ற செய்தி நிரூபிக்கப்படுகின்றது.

இவையெல்லாம் பாதுகாப்புக் கருதிய நடவடிக்கை என்பதன் ஊடாக படையினர் இவற்றை நியாயப்படுத்தும் போது, யாரை யாரிடமிருந்து பாதுகாத்தல் என்ற வினா எழுவதில் தவறில்லை.

மக்களைப் பாதுகாப்பதற்காகவே புத்தக வெளியீடு என்ற ஒரு வழமையாக நிகழ்விலும் தலையீடு இருக்குமாயின், அளவெட்டியில் நடந்த சம்பவம் முன்கூட்டியே அறியப்படாமல் போனமைக்கான காரணம்தான் என்ன?

அளவெட்டியில் நடந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதை விசாரணைகள் மூலம் கண்டறியப்படும் வரை தாக்குதல் நடத்தியவர்கள் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருக்கப்போகின்றனர் என்பது மிகவும் பயங்கரமான நிலை.

எனவே இது விடயத்தில் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மிக விரைவாக விசாரணைகளை நடத்தி உரியவர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எதுவாயினும் குற்றம் செய்தவர்களைத் தவிர வேறு எவரும் தண்டனை அனுபவிக்கக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருப்பதும் அவசியம்.

அதேநேரம் குற்றவாளிகள் அவர்களாக இருக்கலாம். இவர்களாக இருக்கலாம் என்ற அனுமானங்கள், இன்னும் குற்றவாளிகள் உருவாகுவதற்கும் வாய்ப்பைத் தந்துவிடும்.

ஆகையால், குற்றவாளிகளை கண்டறிவது அவசியமும் அவசரமுமாகும்.

இல்லையேல் யாழ்ப்பாணத்தில் சுமுக நிலை என்பது கேள்விக்குறியாகிவிடும்.

# 2ஜி அலைக்கற்றை ஊழலில் சோனியா காந்திக்கும் தொடர்பு

## சுப்பிரமணியசுவாமி குற்றச்சாட்டு

(சென்னை)

2ஜி அலைக்கற்றை ஊழலில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் தொடர்பு உள்ளது என்று ஜனதா தள கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களை சந்தித்த போது அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

இது குறித்து அவர் குறிப்பிடுகையில், மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு ஊழல் அரசாக உள்ளது. காங்கிரஸ் கட்சியும் ஊழல் நிறைந்த கட்சியாகி விட்டது. நாட்டை உலுக்கிய 2ஜி அலைக்கற்றை ஊழலில் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த ஊழலில் தொடர்புடைய பலரும் கைதாகவுள்ளனர்.

அலைக்கற்றை ஊழலில் ஆ.ராசாவுக்கு மட்டும் தொடர்பு இல்லை. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் அலைக்கற்றை விவகாரத்தில் தொடர்பு இருக்கிறது. மத்திய அமைச்சர் ப.சி[illegible] பரத்திற்கும் தொடர்பு இருகின்றது[illegible]

சோனியா காந்தி 12 வெ[illegible] களுக்கு சென்று வந்துள்ள[illegible] இந்த விவகாரத்திற்காகத்தா[illegible] என் குற்றச்சாட்டு.

இதற்கான ஆதாரங்கள[illegible] துக் கொண்டிருக்கின்றேன். [illegible] அந்த ஆதாரங்களை சம[illegible] என்று தெரிவித்துள்ளார்.

# மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலிருந்த பெரும்பாலானோர் மீள்குடியேற்றம்

## வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா மாவட்டத்தில் தங்கியிருந்த பெரும்பாலானோர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.எஸ் எம். சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலிருந்த சகல மக்களும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் மார்க்குட்டின் கடந்த 15 ஆம் திகதி வவுனியா அரசாங்க அதிபர் பீ.எஸ். எம் சாள்ஸ்ஸை வவுனியா மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இன்னும் ஒரு சில கிராமங்களில் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் எதிர்வரும் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் மிகுதியான சகல மக்களையும் மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக பீ.எஸ்.எம் சாள்ஸ் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, செட்டிக்குளம் நிவாரண கிராமத்தில் தங்கியிருந்த அனைவரும் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மஹா கும்பாபி[illegible]

(மருதங்கேணி[illegible]

புலோலிசாரையடிவீரபத்திர[illegible] மஹா கும்பாபிஷேகம் நாளை[illegible] 10 மணி தொடக்கம் 12 மண[illegible] யுள்ள சுபமுகூர்த்தத்தில் நடை[illegible] வுள்ளது.

இன்று காலை 6 மணிமுதல் மால[illegible] 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்[illegible] காப்பு சாத்துதல் நடைபெறும். (ஸ்ரீ-35[illegible]

# அன்பு செய்து வாழும்போது மூவொரு இறைவனின் வாழ்க்கையை வாழ்கின்றோம் (யோ 3:16-18)

இன்று நாம் அன்பின் மூவொரு இறைவன் பெருவிழாவினை கொண்டாடுகின்றோம். அன்பின் இயல்புகள் பற்றி சிந்திக்க எம்மை தூண்டுகின்றன.

"இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்து கொள்ளவில்லையா?'' என்றார் இயேசு பிலிப்புவிடம்.

அன்பு ஒரு புரியாத புதிர். அன்பின் மூலமும் செயற்பாடும் நிறைவும் மூவொரு கடவுளே. அன்பு தன்னகத்தே எதையும் சேர்த்து வைக்காது. மாறாக அனைத்தையும் பகிர்ந்து விடும். இயேசு அன் பின் வெளிப்பாடாக தம்மை முழுமையாக தந்தைக்கு கொடுத்து பாவிகள் எமக்காய் தம்மை கையளித்தார்.

அன்பின் பரிமாணத்தை தீர்ப்பை எமக்கு காட்டினார் என்பதில் இதை நாம் காண முடியும். புனித அகஸ்தினார்- "கடவுள் எம் ஒவ்வொருவரையும் அன்பு செய்வது இந்த உலகில் ஒருவர் மட்டுமே அன்பு செய்யப்பட இருக்கிறார் என்றதைப் போலே ஆகும் என்றார்." "...என்னைக் காண்பது தந்த்தையைக் காண்பது ஆகும்." அப்படியிருக்க, "தந்தையைக் எங்களுக்குக் காட்டும்'' என்று நீ எப்படிக் கேட்கலாம்? நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள் ளும் இருப்பதை நீ நம்புவதில்லையா...? இங்கு ஒருவரே மூவொரு கடவுள் என்னும் மறைபொருளை சீடர்களுக்கு இயேசு வெளிப்படுத்தினார். ஒருவராயினும் பிரிக்க முடியாத ஒன்றிப்பில் தந்தை, மகன், தூய ஆவி பிணைப்பில் வாழ்வார் கடவுள். இயேசுவின் பணியும் அன்பின் ஒன்றிப்பில் மூவொரு தந்தையோடு எம்மை இணைப்பதையே வெளிக்காட்டி நின்றது.

"தம் ஒரு மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்.'' (யோவா3:16)

பாவத்தின் அடிமைகளாக மரணத்தின் கொடுமுடிக்குள் வாழ்ந்த எம்மை மீட்க தம் ஒரு அன்பின் மகனை கையளித்தார். மூவொரு இறைவனின் அன்பின் தொடக்கமே உலகின் படைப்பு, மீட்பு. "நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம் மீது வைத்த அன்பு வெளி ப்பட்டது.'' (யோவா4:9). அன்பு செயல் வடிவம் கொண்டது.

புதியவற்றை படைக்கும் ஆற்றல் மற்றும் அனைத்து புதியவற்றுக்கும் அடிப்படைக் காரணமாக, அடிப்ப டை உந்து சக்தியாக செயற்படு வது அன்பு. ஆழ்ந்து சிந்திப்போமானால் எல்லா புதிய கண்டுபிடிப்புக்கள், படைப்புகள் அனைத்தின் பின்னணியாக இருப்பது அன்பு ஒன்றே. இத்தகைய அன்பு செய்து வாழும் திருத்துவ வாழ்வுக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். குடும்பமாகவும் சமூகமாகவும் நாம்



அன்பு செய்து வாழும் போது மூவொரு இறைவனின் வாழ்க்கையை வாழ்கின்றோம்.

எமக்கு இயேசுவின் பணியும் தூய ஆவியின் பணியும் ஒன்றே என்று கூறப்படுகின்றது.

எனவேதான் இயேசு தம் சீடர்களுக்கு கூறினார்: "தூய ஆவியார் தந்தையின் மகிமையை எமக்கு வெளிப்படுத்துவார்.

## பரமபிதா காட்டிய பாதை

உம்மையானதையே மகன் பேசுவார்.''/ "இறுமாப்பால் நமக்குக் கிடைத்த பயன் என்ன? செல்வச் செருக்கால் நமக்குவிளைந்த நன்மை என்ன?" சாலமோனின் ஞானம் 5.8 மூவொரு ஒன்றிப்பில் புதியவராய் வாழ்வோம்.

**ம. பிரான்சிஸ்க், கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.**

# நகர்ப்புற விவசாயம் - பெரிய யாழ்ப்பாணத்தில் விருத்தி வாய்ப்புக்கள்



பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph.D.Durham
முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்.

விவசாயம் கிராமங்களுடன் தொடர்பு பட்டது. கிராமம்- விவசாயத்துடனும் ,நகரம்- கைத்தொழில் மற்றும் சேவைத் தொழில்களுடன் இணை பிரியா நெருக்கம் கொண்டவை. இன்று விவசாயம் சாராத கிராமங்களின் (Non-Farm Villages)வளர்ச்சியும் நகரங்களில் உயர்தரமான, செறிவான விவசாய நடவடிக்கைகள் வளர்ந்து வருவதை உலகின் பல பாகங்களில் காணமுடிகின்றது.பல நாடுகள் உணவுற்பத்தியை பெருக்கும் நோக்கிலும் மற்றும் நகர மக்களின் சமூக பொருளாதார உளவியல்,உடல் நல நிலைமைகளை மேம் படுத்துவதற் காகவும் நகர விவசாய செயற் பாடுகளை ஊக்குவிக்கின்றன.- அரசுகள், நகர ஆட்சி மன்றங்கள் நகர் பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க பல்வேறு வசதி வாய்ப்புக்களைச் செய்து கொடுக்கின்றனர்.

நகர் புறங்களில் விவசாய நடவடிக்கைகளுக்கு ஏக்கர் கணக்கில் காணிகள் பெறமுடியாது. நகரில் ஆங்காங்கு காணப்படும் சிறுசிறு நிலத்துண்டுகளையே விவசாய செயற்பாட்டிற்குப் பயன்படுத்தலாம்-நகரப்பகுதிகளில் வருமான சமூக பொருளாதார அடிப்படையில் வீடு வளவுகளின் பரப்பளவு பெருமளவு வேறுபடும். . மேலும் பெரிய நகரங்களில் அடுக்கு மாடிகள், தொடர் மாடிகளில் வாழும் குடும்பங்களுக்கு நிலம் இருப்பதில்லை. இத்தகைய வாழிடங்களில் இருப்பவர்கள் தங்களுடைய மாடி முகப்புகள், மாடிப்பின் புறம், ஓடைகள் போன்ற சிறு இடங்களில் சாடிகள், பொதியுறைகள், புட்டிகள், கடகங்கள் போன்றவற்றில் விவசாயம் செய்யும் போக்கு உலகளாவிய நிலையில் அதிகரித்து வருகின்றது.

நகரப் புறங்களில் வீட்டுத் தோட்டகாய்கறி செய்கை அதிகரிப்பதற்கான காரணங்கள் என்ன?

நகரங்களுக்கு வரும் காய்கறிவகைகள் மற்றும் பழவகைகள் தூர இடங்களிலிருந்து நாட்பட்டு வாடி, வதங்கி வருவதால் நுகர்வோர் இவற்றை மனநிறைவுடன் வாங்குவதில்லை. மேலும் ஒழுங்கான நிரம்பலின்மையால் விலைத் தளம்பலும் நகர மக்களின் வாழ்க்கையில். சில பிரச்னைகளைத் தோற்றுவிக்கின்றன-இதனால் புதுப்பொலிவான காய்கறிகளைத் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப தங்களின் வீடுகளில் கிடைக்கும் சிறு இடங்களைப் பயன்படுத்தி குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து விவசாயம் செய்யும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

தற்பொழுது காய்கறி செய்கையில் செயற்கை உரம்கள், கிருமிநாசினிகள் அதிகமாக பாவிக்கப்படுவதும் மற்றும் முற்றாத பழவகைகளை இரசாயனங்களைப் பாவித்து பழுக்க வைத்து விற்பனை செய்யும் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. இதனால் நகரங்களில் இரண்டு வகையான காய்கறி வகைகள் விற்பனைக்கு வருகின்றன.

I.இயற்கை உரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியாக்கப்படும் காய்கறி வகைகள்

II.இரசாயன உரங்களை பாவித்து உற்பத்தி செய்யப்படும் காய்கறிவகைகள்.

இயற்கை உரம் பாவித்து உற்பத்தி செய்யப்படும் காய்கறி வகைகளின் விலைகள் உயர்வாக இருப்பினும்,இதுவே தேகநலனுக்கு உகந்ததாக மருத்துவர்களால் சிபார்சு செய்யப்படுகின்றன. இதுபோல வீட்டு வளவில் கிடைக்கும் மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் பாதுகாப்பானது என்ற உணர்வுடன் இயற்கையாக முற்றிப் பழுத்தது என்பதால் தரமானதாகவும் இருக்கின்றன- இதனால் வீடுகளில் விளைவிக்கப்பட்ட காய்கறி/ பழவகைகளை மக்கள் பெருந்தோட்டங்களில் உற்பத்தியாகும் விவசாய பொருட்களிலும் பார்க்க இன்று கூடுதலாக விரும்புகின்றனர்.

மேலும் நகர மக்கள் தங்கள் வீடுகளில் கிடைக்கும் சேதனக் கழிவுகளைப் பயன்படுத்தி கூட்டுரம் தயாரித்து , பின்னர் இவற்றைக் காய்கறிக் செய்கைக்கு பயன்படுத்தும் போக்கும் அதிகரித்து வருகின்றது. மக்கள் உற்பத்தி செல விலும் பார்க்கத் தரமான, பாதுகாப்பான காய்கறிகளை உற்பத்தி செய்வதிலும் நுகர்வதிலும் மனநிறைவு அடைகின்றனர். நகர வீட்டுத் தோட்ட செய்கை மூலம் பின்வரும் நன்மைகள் பெறப்படுகின்றன.

I.வீட்டு/ வளவுச் சேதன கழிவுகளிலிருந்து கூட்டு எரு தயாரிக்கப்படுவது

II.சேதனப் பசளையைப் பயன்படுத்தி காய்கறி உற்பத்தி

III.காய்கறிச் செய்கையை ஓய்வுநேர விருப்பத் தொழிலாக மேற்கொள்ளல்

IV.வீட்டிலேயே உடற்பயிற்சியில் ஈடுபடுவதால் உடல் ஆரோக்கியமும், உள ஆரோக்கியமும் கிட்டுவது.

V.வீட்டில் சிறு முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் சிறு வருவாயைப் பெறுவதுடன், முயற்சியற்ற தன்மை, தேவையற்ற வெளி உலாத்துக்களையும் குறைக்கமுடிகின்றது.

VI.அரசாலும், மற்றும் நிறுவனங்கள் மேற்கொள்ளும் வீட்டுத் தோட்ட போட்டிகளில் பங்குபற்றி உதவிகளை, பரிசில்கள் பெறுதல்.

இத்தகைய சிறப்புப் பண்புகளுடன் உலகளாவிய ரீதியில் வளர்ந்து வரும் நகர விவசாயத்தை பெரிய யாழ்ப்பாணப் பகுதி யில் முன்னெடுக்க முடியுமா, அதற்கான சாதக நிலைகள் உண்டா, என நோக் வோம்.

பெரிய யாழ்ப்பாணம் என்னும் பொழுது இன்றைய யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப்பிரிவுகள் அடங்கிய பிரதேசத்தைக் குறிக்கின்றது. அல்லது யாழ்ப்பாண மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை அடங்கிய பரப்பைக் குறிக்கும்.இந் நகர்ப் பிரதேசம் 48 சதுர கிலோமீற்றர் பரப்புடையது. இந்நகர் இன்று 125,000 மக்களைக் கொண்டுள்ளதுடன் சதுரகிலோ மீற்றருக்கு சராசரியாக 2500 மக்கள் வாழ்கின்றனர். நகரின் கரையோரப் பகுதிகள் மக்கள் அடர்த்தி கூடியதாகவும், குறிப்பாக நல்லூர் திருநெல்வேலி பிரதேசங்கள் ஒப்பீட்டு ரீதியில் சராசரி மக்கள் அடர்த்தி குறைவாகவும் இருக்கின்றது. நகரப்பரப்பில் குடியிருப்புக்களின் கட்டமைப்பு வீடு, வளவு பண்பைக் கொண்டன. புறநடையாக ஒருசில தொடர் மாடிகள், இணைந்த வீடுகள் தவிர நகரில் உள்ள வீடுகள், தனித்தனி வளவுகளில் அமைந்துள்ளன. இவ்வீடுகள் அமைந்துள்ள வீடுகளின் பரப்பளவுகள் பெரிதும் வேறுபடுகின்றன. இவைஒருபரப்புஅளவில் இருந்து 10 பரப்பு காணி வரை அதிகரித்து செல்கின்றன. மிகப் பெரும்பான் மையான வீட்டு வளவுகளின் சராசரி பரப்பளவு 2-3 பரப்புக்கு இடைப்பட்டதாக இருக்கின்றன. மேலும் பெரிய வளவுக் காணிகள் பிள்ளைகளுக்குப் பிரித்து கொடுப்பதாலும், மற்றும்பெரிய வளவுகளை பலர் சேர்ந்து வாங்கி பிரித்துக் கொள்வதாலும் வீடுகளின் சராசரிப் பரப்பளவு தொடர்ந்து குறைந்து வருவதைக் காணலாம். தற் பொழுது கட்டப்படும் வீடுகளின் பரப்பளவு சிறிதாக இருப்பினும் புதுமனை அமைப்பவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் மத்தியில் மாடி வீடு அமைக்கும் போக்கும் அதிகரித்து வருகின்றது. பெரிய யாழ்ப்பாணத்தில் அண்ணளவாக 20000 வீடுவளவுகள் இருப்பதாகக் அறியக் கிடக்கின்றது.

பெரிய யாழ்ப்பாணத்தில் வீட்டுத் தோட்டம் செய்ய ஓரளவு காணிகள் இருக்கின்றது. யாழ்ப்பாணப் பகுதியில் குறிப்பாக செம்மண் பிரதேசத்து விவசாயக்காணிகள் குடியிருப்புக் காணிகளாக மாறிவருவதால், விவசாயம் செய்யும் காணி குறைவடைந்து வருகின்றது. இதனால் பெரிய யாழ்ப்பாணத்தில் வீடுவளவுகளில் கிடைக்கக்கூடிய நிலங்களை விவசாய செயற்பாட்டுக்குப் பயன்படுத்துவது காலத்தின் தேவையாகவும் உள்ளது.

இப் பெருநகர்ப் பகுதி சுண்ணாம்பு அடையல் பாறையால் ஆனதாக இருப்பதால் தரை கீழ் நீர்வளத்தைக் கொண்டது. எல்லா இடங்களிலும் தரை கீழ் நீர்வளம் இருப்பினும் கரையோரப்பகுதிகளில் நீரின் தன்மை சவராக- உவராக இருக்கின்றது. திருநெல்வேலி பகுதிகளில் செம்மண்ணும், யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளில் நரை மண்ணும், கரையோரப் பகுதிகளில் உவர்மண்ணும், அரியாலையப் பகுதியில் மணலும் காணப்படுகின்றன. நகரில் பல பள்ளக் காணிகள் கொட்டு மண் மூலம் உயாத்தப்பட்டு வீடுவளவாக மாறியுள்ளன மேலும் பலவீடுவளவுகளின் மேல் மண், தரமான செம்மண்/ நரை மண்ணைக் கொண்டுள்ளன. பூந்தோட்டச் செய்கைக்கும் மற்றும் பயிர் செய்கையை மேம்படுத்த பலர் தங்களது வளவுக் காணிகளை மேல் மண்ணாக செம்மண் இட்டு வளப்படுத்தியுள்ளனர்.

நகரிலுள்ள ஒவ்வொரு வீடு வளவும் உய்கதியால் மூலம் அல்லது சுற்று மதில் மூலம் அறிக்கை செய்யப்பட்டு இருக்கின்றது. இதனால் கட்டாக்காளிகால் நடைகளினதோ அல்லது ஒழுங்கு மீறுபவர்களாலோ வீட்டுத் தோட்டப் பயிர் செய்கை பாதிக்கப்படுவது மிகக் குறைவு. மேலும் பெரும் பாலான வீடு வளவுகளில் கிணறுகள் இருப்பதாலும் திருநெல்வேலி தவிர ஏனைய இடங்களில் கிணறுகளில் ஆழம் குறைவாக இருப்பதால் நீர் பெறுவது இலகுவாகும். குறிப்பிடத்தக்க வீடுகின் குளாய் நீர்வசதி ஒழுங்கைக் (கிணறு, தாங்கி, மோட்டார், விநியோகக் குழாய்) கொண்டுள்ளன.

இதனால் நகர் பகுதி வளவுகளில் பயிர் செய்கைக்கு நீர்பெறுவதில் சிரமங்கள் குறைவு கோடைகாலங்களிலும் கூட நகரின் எல்லா இடங்களிலும் தரை கீழ் இருப்பினும் அதிகளவு நீரை பெறுவது நீரின் உவர்த்தன்மையை அதிகரிக்கும் என்ற குறைபாடு உண்டு. இதனால் நகரில் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலம், நீர் மற்றும் வசதிகள் இருப்பதுடன், இங்கு வாழ்வோரின் மிகக்கூடிய விகிதத்தினர் விவசாயப் பாரம்பெரிய பின்புலத்தை கொண்டவர்கள். இங்கு இடம்பெயர்ந்து குடியேறியவர்கள் கிராமப் புறங்களில் இருந்து வந்ததாலும் இன்னமும் பலர் கிராமங்களில் பயிர்ச் செய் கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இந்நகரில் சிறு விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வது சிரமமாக இருக்காது.

பெரிய யாழ்ப்பாணத்தில் மூன்று வகையான பயிர்ச் செய்கைப் பிரதேசங்கள் காணப் படுகின்றன.

1. நெற் செய்கைப் பகுதிகள்
2. தோட்டச் செய்கைப் பகுதிகள்
3. வீட்டுத்தோட்டப் பகுதிகள்

நெற் செய்கை குறிப்பாக பள்ளக் காணிகளில் அரியாலை, செம்மணி, நாயன்மார்க்கட்டு பகுதிகளில் இடம்பெறுகின்றது. சில தசாப்தங்களுக்கு முன்னர் ஓட்டுமடம், கோம்பயன் மணல் வயல் பகுதிகளில் வயல் வெளிகளில் நெற் செய்கை இடம்பெற்றது. தற்பொழுது இப்பகுதிகள் குடியிருப்புப் பகுதிகளாக மாறிவிட்டன.

தோட்டச் செய்கை சிறியளவில் திருநெல்வேலி, கோட்டாவில் மற்றும் கொக்குவில் பகுதிகளில் இடம்பெற்று வருகின்றது. தோட்டக் காணிகள் குடியிருப்புக் காணிகளாக மாறி வருவதால் இன்றும் ஒரு சில வருடங்களில் தோட்டச் செய்கை இல்லாமல் இங்கு போய் விடலாம்.

இந்நகரில் வீட்டுத் தோட்டச் செயற்பாடு மிக முக்கியமாக இருக்கின்றது. ஒருபக்கம் வான் பயிர்களான மா, பலா, தென்னை , ஈரப் பலா, நெல்லி மற்றும் வேம்பு போன்ற மரங்கள் வளவுகளில் வளர்க்கப்படுகின்றன. கிணற்றடியை சூழவுள்ள நீர் ஆதாரம் கொண்ட பகுதிகளில் வாழை , செவ்விளநீர் , தென்னை மரம், கமுகு போன்ற காணப் படுகின்றன. நிலமுள்ள வீடு வளவுகளில் காய்கறிச் செய்கை ஒரு பகுதியில் செய்கை பன்னப்படுகின்றது.

பெரிய யாழ்ப்பாணத்தில் வாழைச் செய்கை மிகவும் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றது. வாழையில்லாத வீடு வளவுகள் இல்லை என்றே கூறலாம். பெருநகரம் வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழ உற்பத்தியில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. உற்பத்திகள் வீட்டுக் காறர்களாலும் அவர்களது உறவினர்களாலும் நுகரப்படுவதால் உற்பத்திகள் சந்தைக்கு வருவது மிகவும் குறைவு. நடமாடும் வியாபாரிகள் காய்களுடன் உள்ள பலா, மாவை மரத்துடன் வாங்கிப் பறிப்பர். வீட்டுத் தோட்டங்களில் கிடைக்கும் மேலதிகமான வாழைப்பழம் உற்பத்தி அயல் கடைக்காரர் வழியாக சந்தைப்படுத்தப்படுகின்றது. புளி மாங்காய், பாண்டி மாங்காய், தேசிக்காய் , ஈரப்பலா, கறிவேப்பிலை , அகத்தி போன்ற பல்வேறு மரக்கறி வகைகள் இப்பகுதியில் இருந்து சந்தைகளுக்கு வருகின்றன.

யாழ்ப்பாண பிரதேசத்தில் மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி போன்ற வலி வடக்கு கிராமங்கள் வெற்றிலைக்கு புகழ் பெற்றிருந்தன. யுத்தத்தினால் இக்கிராமங்கள் அழிவுற்ற போது வெற்றிலைக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டது. கிராமத்தில் யாழ்ப்பாண நகரில் வீடுகளில் பரவலாக சிறியளவிலான வெற்றிலைச் செய்கை விருத்தி பெற்றிருப்பதை காணலாம். நகரில் வெற்றிலைத் தேவை பெறும் பகுதியை நகரே வழங்கி வருகின்றது.

யாழ்ப்பாணத்திலும் பூச் செய்கையை வர்த்தக அடிப்படையில் முன்னெடுக்கப்படின் சிறு முயற்சியாளர்கள் பல நன்மைகளைப் பெறுவர். நகரில் பூமாலை வியாபாரிகள் வீடு வீடாகச் சென்று அழகிக் காக வைத்திருக்கும் பூமரங்களில் உள்ள மலர்கள் விரிவதற்கு முன்னரே வீட்டுக்காரர்கள் விருப்பமின்றி வெவ்வேறு காரணங்களைச் சொல்லி பறித்துச் செல்கின்றனர். இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனோர். பூக்களை இலகுவில் வாங்கக் கூடியதாக இருப்பின் அவர்கள் தங்கள் தொழிலை இலகுவாகவும் கௌரவமாகவும் செய்ய முடியும். மற்றும் பூச்செய்கையில் ஈடுபடுவோர் நன்மைகள் பெறுவர்.

நகர மக்களின் வருமானத்தை உயர்த்தவும் உணவு நிரம்பலை அதிகரிக்கவும் மற்றும் உடல், உள மேம்பாட்டு விருத்திக்காகவும் வீட்டுத் தோட்டச் செய்கை இங்கு பெரியளவில் இங்கு முன்னெடுக்க வேண்டும். முன்னெடுக்க முடியும். இதற்கான பல சாதக நிலைமைகள் நகரில் உண்டு. நிலம், நீர், அடைப்பு வளவுகள், விவசாயத் தொழில் அறிவுடைய மனிதவளம், உற்பத்திக்கு ஏற்ற சந்தை வசதிகள், தேவைகள், கேள்வி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டும்.20 ஆயிரத்துக்கு மேற் பட்ட வீடுவளவுகள் பெரிய நகரில் உண்டு. இந்நிலையில்,

1. சிறந்த நுண் நிலப் பயன்பாடு ஒருங்கமைப்பு பற்றிய அறிவை விருத்தி செய்தல் (Ideal Land use layout at homestead level)

2.குறுகிய காலத்தில் சிறந்த விளைச்சலைத் தரக்கூடிய பயிர்கள் மரங்களை அறிமுகம் செய்தல் (உ+ம்) 3-4 வருடங்களில் காய்க்கும் தென்னை, சில மாதங்களில் நல்ல பயன் தரும் பப்பா)

3. நகரில்பெரியளவு சடை போடாது குள்ளமாக வளரும் இனப் பயிர்கள்/ மரங்களை அறிமுகம் செய்வதால் நிழல்படுவதை தடுப்பதுடன் கூடிய பயிர்களை வளர்க்க முடியும்.

4. வளவுகளில் கிடைக்கும் சேதனப் பொருட்களை கழிவுப் பொருளாக எறியாது கூட்டுப் பசளை தயாரிப்பதால் சுற்றுச் சூழல் மேம்படுவதுடன் நகர திண்மக் கழிவகற்றலில் செயற்பாட்டுச் சுமையை குறைக்க முடியும்.

5. ஒழுங்கற்ற முறையில் மரங்கள் தற்பொழுது நெருக்கமாக நடப்பட்டு இருப்பதாலும் பயனற்ற மரங்கள் அதிகமாக இருப்பதாலும் இவைகளில் இருந்து கிடைக்கும் வருமானங்கள் குறைவாக இருக்கின்றன. வளவுகளில் பல மாமரங்கள் இருக் கின்ற பொழுதும் பல வளவுகளில் இவைகள் காய்ப்பது குறைவு. ஆகவே ஏற்கனவேயுள்ள பழைய மரங்களில் இருந்து விளைச்சலைப் பெருக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லை யெனில் மரங்களை நீக்கி விட்டு புதிய உயர்தர பழ மரங்கள் நாட்டப்பட வேண்டும்.

6. நகரில் விவசாய விரிவாக்கத்தையும் உற்பத்தியையும் பெருக்க விவசாய விஸ்தரிப்பு சேவைகள் கிராமங்களில் வழங்குவது போல இங்கும் வழங்கப்பட வேண்டும். பொழுது போக்கு விவசாயச் சங்கங்கள் (Amateur agricultural clubs) அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு இவைகளின் சிறந்த செயற்பாடுகளுக்கு உதவி, ஒத்தாசை வழங்கப்பட வேண்டும்.

பெரிய யாழ்ப்பாண நகரில் - நகர விவசாய செயற்பாடுகளை நவீன முறையில் முன்னெடுக்கப்படுமாயின் பல நன்மைகள் கிட்டும். இதனால் தாமதமின்றி ஒருங் கிணைந்த நகர விவசாயத்திட்டம் தாமதமின்றி இந்நகருக்கு பொருத்தமான விவசாயத் திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும்.

# 40 ஆயிரம் தமிழரைக் கொன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாதா?-த கார்டியன்

(லண்டன்)

லிபியா மற்றும் சிரிய ஜனாதிபதிகளுக்கு எதிராக பொதுமக்களை படுகொலை செய்த குற்றச்சாட்டில் நடவடிக்கை எடுப்பது போன்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுக்க முடியாதா என்று த கார்டியன் நாளேடு வினா எழுப்பியுள்ளது.

வன்னியில் 40 ஆயிரம் தமிழ் மக்களை படுகொலை செய்த இலங்கை ஆட்சியாளர்கள் தமது குற்றங்களில் இருந்து எவ்வாறு தப்ப முடியும் எனவும் பிரித்தானியாவிலிருந்து வெளிவரும் த கார்டியன் நாளேடு கேள்வி எழுப்பியுள்ளது.

பிரித்தானியாவின் வரலாற்றில் மிகவும் துன்பகரமான தொலைக்காட்சி நிகழ்ச்சியாக கடந்த செவ்வாய்க்கிழமை ஒளிபரப்பாகிய இலங்கையின் படுகொலைக்களம் நிகழ்ச்சி அமைந்திருந்தது.

நிர்வாணமாக இழுத்து வரப்பட்ட தமிழ் கைதிகள் கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக்கொல்லப்படும் காட்சிகள், பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட பின்னர் சடலங்களாகக் காணப்படும் காட்சிகள், வாகனங்களில் இழுத்து வரப்படும் சடலங்கள், வைத்தியசாலைகள் மீதான தாக்குதல்கள் என்பன மிகவும் கொடுமையாக அமைந்திருந்தன.

இலட்சக்கணக்கான மக்களை ஒரு சிறிய பிரதேசத்திற்குள் முடக்கிய இலங்கை படையினர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்ட வன்முறைகளில் சிலவே அவையாகும்.

விடுதலைப் புலிகளும் அரசும் போர்க்குற்றங்களை மேற்கொண்டதாக ஐ.நா. நிபுணர் குழு கடந்த மாதம் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது. ஆனால் தற்போது காண்பிக்கப்பட்ட காணொளிகளில் சில புதியவை. மனிதவுரிமை அமைப்புகள் மேற்கொள்ளும் பணிகளை சனல் 4 தொலைக்காட்சி சேவை நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

அதன் காட்சிகள் பார்க்க முடியாதவாறு கொடுமையாக இருந்தாலும் அதனை ஒளிபரப்பியதற்கு இரு காரணங்கள் உண்டு.

ஒன்று: அங்கு சாட்சிகள் அற்ற போரை இலங்கை மேற்கொண்டிருந்தது. பொஸ்னியாவின் சர்பேனிக்காவைப் போல யுத்தமுனைகளிலிருந்து ஐ.நாவையும் ஏனைய தொண்டர் நிறுவனங்களையும் அது பலவந்தமாக வெளியேற்றியிருந்தது.

சனல் 4 காணொளி அங்கு நடைபெற்ற சம்பவங்களின் சிறிய பகுதியாகவிருந்தாலும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்துலக சமூகம் தவறிவிட்டது.

இரண்டாவது, இது சேர்பேனிக்காவிற்கு நிகரானதென்பதுடன் உண்மையானதும் கூட. வைத்தியசாலைகள் மீது இலங்கை படையினர் திட்டமிட்ட முறையிலேயே எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதாக ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை மீது 65 தடவைகள் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொது மக்களைத் தாக்குவது போர்க்குற்றமாகும். இந்தக் குற்றங்கள் உறுதியானால் அதன் தாக்கம் சங்கிலித் தொடர் போன்றது. இலங்கை படைத்தளபதிகளிலிருந்து அரச தலைவர்கள் வரை தண்டனையை எதிர்கொள்ள நேரிடலாம்.

2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் இடம் பெற்ற படுகொலைக்காக ஈரான் மீது கண்டனம் தெரிவிக்க முடியுமானால் ஹெக் தொடர்பில் ரட்கோ மிலாட்விக் மற்றும் ரடோவன் கராட்சிக் மீது நடவடிக்கை மேற்கொள்ள முடியுமானால் ஆயிரத்து 300 படுகொலை செய்ததற்காக பசிர் அல் அசாத் மீது ஐ.நா. தடைகளைக் கொண்டுவர முடியுமானால் இலங்கை ஜனாதிபதியும் அவரின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவும் 40 ஆயிரம் மக்களைப் படுகொலை செய்ததிலிருந்து எவ்வாறு தப்ப முடியும்?

விடுதலைப் புலிகளும் போர்க்குற்றங்களை மேற்கொண்டவர்கள் என்பது படையினர் மேற்கொண்ட குற்றங்களை நியாயப்படுத்துவதற்கான காரணமல்ல.

இதனை மறைத்துவிட அரசு முயற்சி செய்கின்றது. ஆனால் அவ்வாறு முடியாது. சாட்சியங்களை நாம் புதைத்துவிட முடியாதென்றும் த கார்டியன் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## உறுவது...

வழங்குவதை ஐ.நா. பாதுகாப்புச்சபை ஒத்தி வைத்தது. எனினும் நேற்று முன்தினம் அவருக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

இதேவேளை ஐ.நா.செயலாளர் நாயகமாக மீண்டும் பான் கீ மூன் தெரிவு செய்யப்படுவதை அங்கீகரிப்பதற்கான ஐ.நா. பொதுச்சபை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கூடவுள்ளது.

67 வயதான பான் கீ மூனின் இரண்டாவது பதவிக்காலம் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ந)

## 500 முன்னா...

அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்திற்கு அமையவே புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் விடுதலை துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வருட இறுதிக்குள் நாட்டின் சகல புனர்வாழ்வு நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டு விடுவார்கள் என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## பிரதி அமை...

வேண்டுமென அல்ஜெசீரா தெரிவித்துள்ளது.

ஏற்கனவே அவர் இலங்கையில் 600 பொலிஸாரை கொலை செய்த குற்றச்சாட்டில் பாரிய அழுத்தத்தை எதிர்நோக்கி வரும் நிலையில் அல்ஜெசீரா இவ்வாறானதோர் கோரிக்கையை முன்வைத்துள்ளது. (ந)

## புலிகளுக்கு உதவுபவர்களுக்கு...

சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதிகள் எமது நாட்டை பிளவுபடுத்தி அதனைத் துண்டாட முயற்சி செய்தனர். தற்போது சர்வதேசத்துக்கு ஊடாக அதனை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

பிரபாகரனுக்கு எதிராகப் போராடிய படையினருக்கு எதிரான வீடியோ கசட்டுகளை தயாரித்து சர்வதேசத்திடம் முன்வைத்துள்ளனர்.

படையினரின் வெற்றி இதன்மூலம் மலினப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சிறுசம்பவம் ஒன்று பொலிஸாருக்கு அறிவிக்கப்படாமல் நேரடியாக அமெரிக்கத் தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் முதலாவதாக அமெரிக்கத் தூதரகத்திலேயே விசாரிக்கப்பட்டும் உள்ளது. கட்டுநாயக்காவில் இடம்பெற்ற சம்பவங்கள் நேரடியாக ஜேர்மன் தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசம் எங்கும் எமது நாடு அபகீர்த்திக்கு உள்ளாகும் வகையில் ஒரு தரப்பினர் செயற்படுகின்றனர் என்பது இதன் மூலம் தெளிவாகிறது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள பயங்கரவாதிகள் பின்னர் கொல்லப்பட்டுள்ளதாக சனல் 4 வீடியோக் காட்சி மூலம் கூறப்படுகிறது. எனினும் கிழக்கில் பௌத்த மத தேரர்கள் கொல்லப்பட்டதையோ நிராயுதபாணியான 600 பொலிஸாரை கொலை செய்ததையோ சாதாரண அப்பாவிப் பொதுமக்கள், குழந்தைகளை கொலை செய்ததையோ சனல் 4 காண்பிக்கவில்லை.

இராணுவத்தளபதி அண்மையில் நடத்திய மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தும் மேற்குலக நாடுகள் அதனை நிராகரித்துவிட்டன. பயங்கரவாதத்தை ஒழித்த முறை மற்றும் சிக்கல்களுக்கு பதிலளிக்கவும் நாம் தயாராகவிருந்தோம். எனினும் எம்மை குற்றம் சாட்டுவர்கள் அம் மாநாட்டுக்கு சமுகமளிக்கவில்லை.

அவர்கள் புலம்பெயர் புலிகளுக்கு உதவி செய்பவர் கள். இவற்றுக்கு எதிராக மீண்டும் நாம் போராட வேண்டியுள்ளது எனவும் பாகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

நுகேகொட ஆனந்த சமரக்கோன் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற படை வீரர்களின் நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ந)

## ஜனாதிபதி மகிந்த ராஜ...

அக்சன் பெய்ம் தொண்டு நிறுவனத்தின் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட போது கொல்லப்பட்ட பிரேமாஸ் ஆனந்த ராஜாவின் உறவினர்களும் மற்றும் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது உயிரிழந்த தவராஜா குடும்பத்தினர் ஆகிய மூன்று தரப்பினர் கூட்டிணைந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக 30 மில்லியன் நஷ்டஈடு கோரி மேற் குறித்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நீதிக்குப் புறம்பான மேற்படி படுகொலைகளால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர்கள் தங்கள் வழக்கின் பிரதிவாதியாக இலங்கை முப்படைகளின் கட்டளைத் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை குறிப்பிட்டுள்ளனர்.

இன அழிப்புக்கு எதிரரன தமிழர்கள் அமைப்பின் துணையுடன் கடந்த ஜனவரி மாதம் அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபரான புரூஸ்பெய்ன் ஊடாக குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சித்திர வதைகளுக்கு எதிரான ஹேக் பிரகடனத்தில் அமெரிக்காவும் இலங்கையும் கையெழுத்திட்டுள்ள நிலையில் அதே சட்டத்தின் கீழ் அமெரிக்காவில் எந்தவொரு நாட்டினருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியுமென்ற விதியைப் பயன்படுத்தியே பிரஸ்தாப வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தற்போது வழக்கு விசாரணைகளுக்கு ஆஜராகுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அமெரிக்க சமஷ்டி நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது. அதற்கான அழைப்பாணை நீதியமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தகவலறிந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (ந)

## கொழும்பின் முயற்சி...

சந்தித்தபோதே மகிந்த ராஜபக்ஷவிடம் ரஷ்ய ஜனாதிபதி இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் நிலையான சமாதானம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ரஷ்யா முழு ஆதரவு வழங்கியமைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ரஷ்ய ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார்.

இவ்விரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் மற்றும் முதலீடுகள் குறித்தும் இவர்கள் இருவரும் இச் சந்திப்பின் போது விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

ரஷ்ய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ரஷ்ய ஜனாதிபதியுடன் ஆராய்ந்துள்ளார்.

அதேவேளை ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லாவோருடன் விரைவில் தான் கொழும்புக்கு விஜயம்செய்யவுள்ளதாக மகிந்தராஜபக்ஷவிடம்ரஷ்யஜனாதிபதிகூறினார்.

இச் சந்திப்பில் ரஷ்ய மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் அமைச்சர் சரத் அமுனுகம, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை சர்வதேச பொருளாதார அமைப்பின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ரஷ்யாவுக்கு விஜயம் செய்துள்ள சீன ஜனாதிபதி ஹூ ஜிந்தாவோவையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கையின் இறையாண்மையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் வகையில் கொழும்புக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷவிடம் சீன ஜனாதிபதி கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## தாக்குதல் நடத்தியவர்களு...

யாழ்ப்பாணம் சிவில் அலுவல்கள் பொது மக்கள் தொடர்பு அலுவலகப் பாதுகாப்பு பிரிவின் தலைமையகத்தில் நேற்று மாலை இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அளவெட்டியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதை தடுக்குமாறு இராணுவத்தினருக்கு என்னால் கட்டளையிடப்படவில்லை.

அத்தாக்குதலில் இராணுவத்தினர் ஈடுபட்டதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தொலைபேசியில் தொடர்பு கொண்டு சம்பவம் பற்றித் தெரிவித்த போதே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றதை நான் அறிந்து கொண்டேன்.

இராணுவத்தினர் தாக்குதலில் ஈடுபட்டிருந்தாலும் அல்லது வேறு எந்தக் குழுவினராவது தாக்குதலில் ஈடுபட்டிருந்தாலும் விசாரணைகள் மூலம் அறியப்பட்டு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரை அண்மையில் கூட வீடொன்றிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டன. இத்தகைய சம்பவத்துடன் ஒப்பிடுகையில் இராணுவத்தினர்தான் இத் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என உறுதியாகக் கூறமுடியாது.

இருப்பினும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம். இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவஞானம் சிறிதரன், சுமந்திரன் ஆகியோர் என்னை நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

அவர்களிடமும் இதனையே நான் தெரிவித்துள்ளேன் மக்கள் மீதும் கூட்டமைப்பு உறுப்பினர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது.

மக்களோடு நாம் அன்பாகவே பழகிவருகின்றோம். அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் வீட்டுத்திட்டங்கள் என இன்னும் பல உதவிகளை இராணுவம் வழங்கி வருகிறது.

எனவே தாக்குதலை நடத்தியது யார் என்று எமக்குத் தெரியவில்லை. தாக்குதலை நடத்தியவர்கள் யாராக இருந்தாலும் விசாரணை மூலம் அறியப்பட்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இப் பத்திரிகையாளர் சந்திப்பில் 51ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக வல்கம மற்றும் பிரிகேடியர் பிராங்கிளின் ரொற்றிக்கோ ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந-6)

2015 இல் நீங்களும் Engineer ஆகுங்கள்...

இந்தியாவின் தலைசிறந்த Engineering கல்லூரிகளில் அனுமதி பெற்றிடுங்கள்.

* இவ் வருடத்தின் இறுதிச் சந்தர்ப்பம். *

கல்லூரிகள் ஆரம்பம் 15th July & 5th Sept.

* இலங்கை உட்பட உலகெங்கும் எந்தவித பரீட்சைகளும் இன்றி நேரடியாக வேலைக்கு சேரக்கூடிய கல்வித் தகைமை.
* London A/L மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
* 2011 (இவ்வருடம்) இல் A/L எடுக்கும் மாணவர்களும் Result வருமுன்பே காலவிரயத்தைத் தவிர்க்கும் முகமாக Pending Results அடிப்படையில் இவ்வருடமே அனுமதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.



* Computer Science Engineering
* Electronics & Communication Engineering
* Electrical & Electronics Engineering
* Civil Engineering
* Mechanical Engineering
* Information Technology

சிறப்பம்சங்கள்:

* A/L 3 Pass is enough
* Reasonable Tuition Fees
* Internationally Recognized Anna University & Jawaharlal Nehru Technological University Degree.

V4 Educational Consultancy (Pvt) Ltd
Catalyst for your Higher Studies

Head Office: #64, Kanagaratnam Road, Ariyalai, Jaffna.
Branch Office: #23, Modern Market, Valvettithurai, Jaffna.

0773 867 257

Web: www.v4edu.com E-mail: mail@v4edu.com

Admissions for: Bio.Tech, Micro Biology, Visual Comm, BCA, B.Com, ISM, Fine Arts மற்றும் பல

0214 920 920 Cabs Service No-5
1 மணித்தியாலயத்திற்கு 550/=

VACANCY யாழ். நகரிலுள்ள போன் சொப்பிற்கு

* Phone Repairing (போன் திருத்துநர்) Salary: 15000/= - 25000/=
* Cashier (காசாளர்) Salary: 15000/=
* Sales Man (விற்பனையாளர்) Salary: 12000/=
* Phone Repairing பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு: 0771007899

(5232)

கவறிங் நகைகள், பித்தளை, சில்வர் பொருட்கள்
மற்றும் பலவிதமான அன்பளிப்பு பொருட்களுக்கு

(5219)
021 222 5148 பாரதி இல.126, பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.
Bharathy1@live.com

RRSC Motor Engineers

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய யாத்திரை
தல விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்



R.R.S.C. மோட்டோர்ஸ் எஞ்சினியர்ஸ் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அங்கீகாரம் பெற்ற
மோட்டார் சைக்கிள், ஆட்டோ உதிரிப்பாக விற்பனையாளரும் சேவைமுகவரும்.

றஞ்சிற் மோட்டோர்ஸ்

றஞ்சற் றிப்பியரிங் அன் சேவிஸ் சென்ரர் யாழ்.வீதி, மானிப்பாய்

தொ.பே : 0773107549, 0772269883 - சேவிஸ் : 021 3737808 - உதிரிப்பாகம் : 021 2255228

மாபெரும் தொழிலொன்றுக்கு வழியை அமைத்தல்



விற்பனை நிறைவேற்றுனர் (ஆண்) யாழ்ப்பாணம் கிளைக்கு (யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகியவற்றிலிருந்து தேருனர்கள் விரும்பப்படுகின்றார்கள்)

- 25 வயதுக்கு மேல்.
- சிறந்த கல்விப் பின்னணி.
- தமிழிலும், ஆங்கிலத்திலும் பலமான தொடர்பாடல் திறன்கள் அவசியமாகும் (சிங்களம் ஓர் அனுகூலமாகும்).
- ஆயுள் காப்புறுதியிலும், வங்கிச் சேவையிலும், நிதித் துறையிலும் முன்னைய அனுபவம் விரும்பப்படுகின்றது.
- விற்பனையில் ஆகக்குறைந்த 2 வருட அனுபவம் அவசியமாகும்.
- நடைமுறையிலான உத்தேசமான வாடிக்கையாளரில் திறமையைக் காட்டுவதற்கான ஆக்கத்திறனான பணி ஓர் அனுகூலமாகும்.
- அடிப்படைக் கணனி அறிவு.

உங்கள் சுயவிபரத்தினை 7 நாட்களினுள் careers.lk; www.touchwood.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பத்தை அனுப்புங்கள்.

TOUCHWOOD

Head of HR
Touchwood Investments PLC
No.10, Level 02, Prince Alfred Tower,
Alfred House Gardens
Colombo 03.

www.touchwood.com

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.